சிற்பி சிந்தனையில்
றைப்பட்ட சீர்திருத்தக்கவி



பேரா. அ.சங்கரவள்ளி நாயகம்

சிற்பி சிந்தனையில்
சிறைப்பட்ட சீர்திருத்தக் கவி

அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம்

அகரம்
மனை எண்.1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் - 613 007

சிற்பி சிந்தனையில் சிறைப்பட்ட சீர்திருத்தக்கவி / © அ.சங்கரவள்ளி நாயகம் / முதற்பதிப்பு : டிசம்பர் 2006 / வெளியீடு : அகரம், மனை எண்.1, நிர்மலா நகர், தஞ்சாவூர் - 7 / அச்சாக்கம் : மீரா ஃபைன் ஆர்ட்ஸ், சிவகாசி / விலை : ரூ.90/-

முனைவர் சு.பாலசுப்பிரமணியன்
தலைவர்
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் பள்ளி
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 025

அணிந்துரை

இந்திய வரலாற்றில் காந்திஜியின் ஆளுமை எவ்வளவு அழுத்தம் நிறைந்ததோ அதே அளவு அழுத்தமும், ஆழமும் கொண்டது இந்திய இலக்கியப்பரப்பில் பாரதியின் ஆளுமை; பாரதி தமிழ்க் கவியாகப் பிறப்பெடுத்திருந்தாலும் அவன் தேசியக் கவியாகவே முகம் காட்டியுள்ளான். இலக்கியத்தை ஓர் போர்வாளாகக் கையிலெடுத்துக் கொண்டானே தவிர, தன்னை எந்த எல்லைகளுக்குள்ளும் சிறைப்படுத்திக் கொள்ளவில்லை. எல்லைகளற்ற வெளியை நோக்கியதாக அவனது பயணம் அமைந்தது; பாரதி ஓர் தேசியக்கவி; தேசத்தலைவன், சாதிகளற்ற சமுதாயத்தை உருவாக்கக் களம் இறங்கிய சீர்திருத்தவாதி, பொருளாதாரச் சிந்தனையாளர், அறிவியல் கனவு காணும் விஞ்ஞானி, நிலப்பகுதிகளை இணைக்கும் பொறிஞர், கல்வியாளர், சிந்தனையாளர், போராளி, பெண்ணியவாதி, தமிழின் உயிர் என்று பலவாறு அவனை அடையாளம் காணும் முயற்சிகள் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது; பாரதி ஓர் அடையாளத்திற்குள் அடங்கிவிடுகிறவனல்ல; படைப்பாளி என்றால் அதுதானே பொருள்! அவன் அடையாளங்களைத் தேடுவது என்பது நமது பயணயத் தூரமே தவிர அவனது பயண எல்லைகளை அளவிடுவதாக அமையாது; எல்லைகளற்ற ஓர் பயணவெளியில் பயணம் கொள்ளத் துடித்த கவி அவன்; கவிதை அவனுக்குத் தொழில்; தொழில் என்றால் அதனைக் கொண்டு பிழைப்பு நடத்தியவனல்ல; தொழில் என்று அவன் குறிப்பிட்டது வாழ்வு நெறி. மண்ணும் மக்களும் பயனுற வேண்டிக் கவிதையைக் கையிலெடுத்தவன் அவன்!

நம் முன்னோர்களின் முகச்சாயல் நம்மிடம் தென்படுவது எவ்வளவு இயல்போ அதுபோலப் பாரதிக்குப் பின்வந்த கவிகளிடம் பாரதியின் தாக்கமும், ஆளுமையின் நிழலும் படிந்திருப்பதும் இயல்பு. பாரதியைத் தொழுவது என்பது வேறு; அவனை உள்

உணர்ந்து அந்த உள்ளச் சூட்டில் வீறிட்டு எழுவது என்பது வேறு; இந்த இரு நிலைகளிலும் தற்போது தமிழ் கவிகளைக் காணலாம்; புகழுக்காக, வெறும் உள்ளப் பெருக்கிற்காக அவனைத் தூக்கிப் பிடிப்பதும், அவன் கவிதைகளை உரக்க உச்சரிப்பதும் சில கவிகளுக்குச் சிறு வெளிச்சமும் அடையாளமும் கிடைக்க ஏதுவாகலாம்; பாரதியின் உள்ளெரியும் அந்தச் சுடரையும் அதன் சூடு தணியாது தாங்கிக் கொண்டு தொடர்ஓட்டம் போல முன்னோக்கிச் செல்லுகின்ற கவிஞர்களும் உண்டு; அப்படிப்பட்ட கவிகளை அறிய ஆழ்ந்த வாசிப்பனுபவம் தேவை; இங்கே நமக்குச் சிரமமின்றித் தாம் பெற்ற அனுபவத்தினைத் தருகிறார் அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம். பாரதியின் சிந்தனை மரபின் தொடர்ச்சியான ஓர் கவிஞரை நமக்கு அடையாளப்படுத்தும் முயற்சிதான் இந்த நூல்!

இந்த நூலாசிரியர் அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம் சிறந்த கல்வியாளர் மட்டுமல்ல; நல்ல சிந்தனையாளரும் கூட; தொடர்ந்து சமூகப்பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இன்பம் காண்பவர்; சமூகப்பணி என்பதும் இலக்கியப்பணி என்பதும் வேறல்லவே! இடையறாது இயங்கிக் கொண்டிருப்பவர். படிப்பும், உழைப்பும்தான் இவரின் அடையாளமாக அறியப்படுகிறது. ஆர்ப்பாட்டமோ, ஆரவாரமோ இல்லாது அமைதியாக நகரும் நதியைப்போல எளிமையாக நகர்ந்து கொண்டிருப்பவராக இவரைக் காண முடிகிறது. தொடர் இயக்கமும் நல்ல சிந்தனையும் ஒரு மனிதனின் செயல்பாட்டினை ஊக்கப்படுத்தி, உற்சாகம் கொடுப்பதாக அமைந்து விடுகிறது.

சிற்பியின் சிந்தனையில் சிறைப்பட்ட சீர்திருத்தக்கவி என்ற இவரது இந்தநூல் சிற்பி காண்கிற பாரதி பற்றியும், சிற்பி மீது படிந்துள்ள பாரதி பற்றியும் நமக்கு அறியக் கிடைக்கிறது. நமது தேசத்தின் பழமை, பண்பு, சமயம், தத்துவம், கலை ஆகியவற்றின் சாரத்தை உணர்ந்து பாரதியின் நீண்ட தொடர்ச்சியாகச் சிற்பியைக் காண்கிறார்; நமக்கும் காட்டுகிறார். அப்படி இவர் காட்டுகின்ற ஆள்காட்டி விரல் உயர்ந்து, துணிந்து நிற்கிறது; உள்ளப் பரவசத்தையும் பாசத்தையும் பங்கிட்டுக் கொண்டிருக்கும் படைப்பாக இதனைக் கொள்ளலாம். சிற்பியின் படைப்புகளை முறையாக அணுகி, படைப்பின் மையத்தை உள் வாங்கிக்கொண்டு உரிய பக்குவப் பரிமாணங்களோடு அவற்றினை ஆராய்ந்து, சொல்வதோடு மட்டுமின்றிப் பாரதியின் வீச்சும் சொற்செட்டும் இவரிடம் அமைந்துள்ளமையைச் சான்று காட்டி விளக்குகிறார்.

அறிஞர் சங்கரவள்ளிநாயகம் "பாரதியின் பார்வை பழுது படாதது" என்கிறார்; இவருடைய பார்வையும் அப்படியே இங்கே பதிவாகியுள்ளது. கவிஞர் சிற்பியின் படைப்புகளைப் பாரதியின் சிந்தனைக் களத்தோடு தொடர்புபடுத்தி வரலாற்றுப் பின்புலம் காலச்சூழல் பிற பனப்பாளர்களின் பார்வை; அவற்றிலிருந்து சிற்பி எவ்வாறு உடன்படுகிறார், முரண்படுகிறார் என்பதனைத் தக்க சான்றாதாரங்களுடன் நிறுவுகிறார் அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம். இவர்களின் எழுத்து நேரடியாகப் பேசுகிறது. செறிவோடும், தெளிவோடும் சொல்லியிருப்பது மட்டுமல்ல, நேர்மையாகச் சொல்லியிருப்பதும் இந்நூலுக்குப் பெருமை சேர்க்கிறது. ஒரு நூலின் சிறப்பே அது உண்மையாக இருப்பதில்தானே இருக்கிறது!

ஒரு கவிஞனின் சிந்தனை ஓட்டம் காலம் கடந்தும் நிலைத்திருப்பதும் அதன் தொடர்ச்சியான சிந்தனை ஓட்டங்கள் கிளைத்திருப்பதும், அவற்றின் தேவையும் அதிகரித்திருப்பதும், தொடர்வதும் கவனத்தில் கொள்ளவேண்டிய அம்சமாகும்.

"சிவாய நம" என்ற மந்திரத்தை ஓதாத சைவர்கள் எவரும் இலர். பாரதி பற்றிப் பேசாத பயனற்ற நாள் என்றுமே சிற்பிக்கு வாய்த்ததில்லை என்று முத்தாய்ப்பு வைக்கிறார் இந்நூலாசிரியர்.

பாரதி மற்றும் சிற்பி இருவருக்கிடையிலான கால இடைவெளி, சமூகமாற்றம் இவற்றுடன் பிற படைப்பாளர்களின் சிந்தனை ஓட்டம் இவைகளை விளக்கிச் சிற்பியின் தனித்துவங் களையும் அவரிடம் படிந்துள்ள பாரதியின் காலடிச் சுவடுகளையும் நமக்குக் காட்டுகிறார் அறிஞர் சங்கரவள்ளிநாயகம்.

பாரதியின் தரிசனம் கிடைப்பதுடன், சிற்பியின் ஆளுமையும் இந்த நூலின் வழியாக வெளிப்படுகிறது. இந்நூல் தனிக்கவனம் பெற்று அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம் அவர்களின் சமூகப்பணியும், இலக்கியப் பணியும் மேலும் ஊக்கம் பெறும் என உளப்பூர்வமாக நம்புகிறேன்.

முனைவர் சு.பாலசுப்பிரமணியன்

நாள் : 19.10.2006
இடம் : சென்னை

T. Radhakrishnan, I.P.S.
Inspector General of Police
Director of Civil Defence &
Dy.CMT General, Home Guards

No. 475 Link Road
Nandanam,
Chennai - 35.
நாள் : 9.10.2006

அணிந்துரை

வாழ்வைத் திருத்தியமைத்த வள்ளுவன் காலம் மாறிக்
காவியப் புரட்சி செய்த கம்பன் காலம் கடந்து
பின்னாளிலே புலவர்கள் துட்டுக்குச், சீட்டுக் கவிதை பாடுவதும்
அரசனையும் அவனது அந்தப்புரத்தையும் பற்றி
அந்தாதி உலாக்களும், அலங்காரச் சிந்து வண்ணங்களும்
பாடிப் பரவுவதுமான செக்குமாட்டுப்
போக்கிலே சென்றார்களேயொழியத்
தாங்கள் சீர்திருந்தவும், புரையோடிக்
கிடந்த சமுதாயத்தைச் சீர்திருத்தவும்
கவின் பெருங்காவியங்கள் செய்தாரில்லை.

மேட்டுக்குடியினரின் உல்லாசபுரியிலே, சனாதனவாதிகளின் சம்பிரதாயங்களிலே தேங்கி, வளர்ச்சிகுன்றி, இரட்சிப்பாரற்றுக் கிடந்த தமிழ்மொழிக்குப் புத்துயிரூட்டித் தமிழ்க் குடிகட்குப் புதுநெறிகாட்டிய புலவன் பாரதி. நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச் செருக்குடன் "எமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்" எனப் பாடி வாழ்ந்து காட்டிய முண்டாசுக்கவிஞனைப் பாடாத, படிக்காத பாவலர் இல்லை. கவிஞர் சிற்பி அவர்களின் சிந்தனையில் விரிந்த காவியம் "பாரதி கைதி எண் 253" எனில், அக்காவியத்திற்குப் பட்டை தீட்டியுள்ளார் "சிறுபையல் எனும் போது என்துடுக்கொடுக்கிப்" பைந்தமிழ் கற்றுத் தந்த என் ஆசான், அறிஞர் பேராசிரியர் திருமிகு அ.சங்கரவள்ளி நாயகம் அவர்கள்.

கவிஞர் சிற்பியின் நடையே எளிமையெனில், பேராசிரியர் அ.சங்கரவள்ளி நாயகம் அவர்களின் நடை அதைவிட எளிமை. கோ.வெ.நா. கல்லூரியில் நான் புகுமுகவகுப்பில் பயிலுங்காலை, கம்பனையும், கவி காளமேகத்தையும், இராமச்சந்திரக் கவிராயரையும் புடம்போட்டுக் கற்பித்த எம் ஆசிரியருக்குச்

சிற்பியின் காவிய ஆய்வு ஒரு குழந்தையின் விளையாட்டைப் போன்றதே! ஆங்காங்கே கவிப்பேரரசு வைரமுத்துவையும், கவிஞர் மீராவையும் உலவவிட்டுப் படிப்போர்க்கு இவ்விலக்கிய ஆய்வின் மூலமாகக் கவிபாரதியின் வாழ்க்கை வரலாற்றை நிலாச் சோறு ஊட்டுவது போல் ஊட்டுகின்றார் எம் ஆசிரியர்.

கவிஞர் சிற்பி கையாண்ட கவிதை உத்திகளைப் பட்டியலிட்டு விளக்குகின்ற போது திறம் வாய்ந்த கணித ஆசிரியரின் சக்தியாக விளங்குகின்றார் இந்நூலாசிரியர்.

"மந்திரம் போல் வேண்டுமடா
சொல்லின்பம்"

எனும் பாரதியின் கவிதைக் கோட்பாட்டைப் பேராசிரியர் அ.சங்கரவள்ளி நாயகம் அவர்கள் தமது தாரக மந்திரமாகக் கடைப் பிடித்து வாழுகின்ற பெருந்தகை. எனவேதான் அன்னாரின் வார்த்தைகள் மனத்திலே பதிந்து பதிந்து காலம் காலமாயச் சாலையிலே ஓடிய வண்டிகள் நீங்காது விட்ட சுவடுகள் போல நெஞ்சிலே ஒட்டிக் கொள்கின்றன.

கவிஞர் சிற்பி கையாண்ட உவமைகள், உருவகங்கள், வர்ணனைகள், ஒலிக்குறிப்புச் சொற்கள், இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் ஆகிய பற்பல உத்திகள் குறித்து ஆசிரியர் உரைவிரிப்பது இலக்கியத் திறனாய்வின் உச்சகட்டம் மட்டுமன்றி, எமது ஆசிரியரின் பண்பட்ட, நரள்தொறும் நூல் நவின்ற, வாரியாய் மாரியாய்ப் புலமைபெற்ற, ஆன்றவிந்தடங்கிய சால்புகளையும் சுட்டுவனவாம்.

"பாரதி கைதி எண் 253" எனும் காவியம் கவிஞர் சிற்பிக்கு மணிமகுடம் எனில், அக்காவியத்தினைத் திறனாய்ந்து வெளியிடப் படும் "சிற்பி சிந்தனையில் சிறைப்பட்ட சீர்திருத்தக் கவி" எனும் இந்நூல் பேராசிரியர் அ.சங்கரவள்ளி நாயகம் அவர்களின் முடியிலே தரித்த மணிமகுடம் எனலாம். இவ்விரு நூல்களையும் ஒன்றன்பின் ஒன்றாகப் படித்தால் இருபெரும் தமிழர்களின், தமிழ் ஆய்ந்த பெருமக்களின் புலமை இருள் கிழித்து வெளிக் கிளம்பி உலகை ஒளி மழையில் நனைக்கும் பகலவனின் கதிர்கள் போல் புலப்படும்.

அன்புடன்

தி.ராதாகிருஷ்ணன்

பேராசிரியரைப் பற்றிப் பேராசிரியர்

க.ப.அறவாணன்
முன்னாள் துணைவேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

பேராசிரியரும், கவிஞருமான சிற்பி, பாரதி பற்றி எழுதிய புதுக் கவிதை நூலைப் பற்றிப், பாரதி பிறந்த எட்டயபுரத்திற்கு மிகப் பக்கத்தில் உள்ள கோயில்பட்டிப் பேராசிரியர் அ.சங்கரவள்ளி நாயகம் எழுதிய திறனாய்வு நூலே உங்கள் கைகளில் இப்போது தவழுகிறது.

இருவரும் தமிழில் தனிப்பெரும் புலமையாளர்கள். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆசிரியப் பணி ஆற்றியவர்கள். ஆசிரியப் பணியுடன் நில்லாமல், கொள்கை வழி வாழ்ந்து, தம் கொள்கையை அன்றும், இன்றும் தொடர்ந்து எழுத்தாலும், பேச்சாலும், தொண்டாலும் பரப்பி வருகிறவர்கள். இருவருமே எனக்கு மிக நெருக்கமானவர்கள்.

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பதற்குச் சான்று இந்நூல். நவீனக் கவிதை உலகத்திற்குத் தன் கையெழுத்துகளால் 'அகரம்' எழுதிச், சிகரத்தைத் தொட்டவர் பாரதி. பாரதியின் படைப்புகளை ஒரு முறை ஓதினால் போதாது. மீண்டும் மீண்டும் ஓதும்போதும், ஒவ்வொரு சொல்லாக ருசிக்கும்போதும் மாகவி பாரதியின் மாபேராற்றல் நமக்குக் கொஞ்சம் கொஞ்சம் புரிகிறது. எளிய தமிழில் அமைந்திருந்தாலும், ஆழ்கடல் போலப் பொருளை அவர்தம் கவிதைகள் தம்முள் பொதிந்து வைத்துள்ளன. பாரதி எனும் மாகவிஞரை நம் காலக் கவிஞர் சிற்பி, தம் மொழிவளம் மிக்க எழுத்தில் பாரதியின் வாழ்க்கையை மட்டுமின்றி அவர்தம் படைப்பையும் தம் படைப்பு மூலம் படம் பிடிக்கிறார். வானம்பாடிக் கவிதைக் குழுவை நெஞ்சில் சுமந்து பெற்றெடுத்து வளர்த்துப் பேணிய சிற்பியின் கவிதைகளில் பாரதியின் வாழ்க்கை மேலும் கூடுதலாகக் கொண்டாடப்படுவது வியப்பன்று. சிற்பியைக் கவிஞர் பாலா, பாராட்டுவது மெத்தச் சரி.

கொஞ்சிவரும் கற்பனையில் கூத்தாடும் பூக்காடு

என அவர், மிகச் சரியாகவே மதிப்பிடுகிறார்.

எனக்கு, அவனே குரு
அவன் எழுத்தே வேதம்
வார்த்தைகள் சட்டம்
கவிதை சத்தியம்

என்ற சிற்பியின் தொடர்கள் அவர் உள்ளத்தைப் பாரதி எத்துணை ஆட்கொண்டிருக்கிறார் என்பதை விண்டு காட்டுவதாகும். பாரதி வாழ்க்கையில் பெரும்பான்மையான பகுதிகள் சிற்பியின் கைவண்ணத்தில் புதுக்கவிதைக் கோலம் பூண்டிருக்கின்றன. பாரதியின் மூக்கு பற்றிய சிற்பியின் வர்ணனை, பாரதியையே நம்முயை கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. அப்பகுதியைப் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகமும், நம்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

'புதுவையில் தொடக்கத் தொல்லை வாழ்வு' என்று சரியாகத் தலைப்பிடுகிறார் பேராசிரியர். இவ் அவல நிலையைக் கவிப்பேரரசு வைரமுத்துவும்,

பாரதியின் இதயத்துக்கு
இதமில்லை
மனித மந்தைகள்
அந்த மேய்ப்பனைக் கண்டு
மிரண்டன
கொதிக்கும் மன உலையை
இறக்கி வைக்க ஆளில்லை
உள் மனசுக்குள்
உப்புக்கரித்தது

என எழுதுவது அட்சர இலட்சம் பெறும். ஏனென்றால் பாரதியாக இல்லாவிட்டாலும் பாரதியைப்போலப் புதுவையில் நானும் வாழ்ந்தவன் என்பதால் கவிஞர் மூவர்தம் கணிப்பீட்டை முற்றுமாக உணர்கிறேன்.

புதுவைக் கடற்கரையில், தமிழ்ப்பாரதி இருக்கையில் அமர்தல் கண்டு, இருக்கையில் இருந்தோர் அஞ்சி எழுந்து சென்றதை அஞ்சாமல் எடுத்துச் சொல்வார் வ.ரா. அதனை அஞ்சாது எடுத்துச்

சொல்லுகிறார் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகம். 'புதுவையை விட்டுப் புறப்பட்டு விட்டேன்' என்ற பாரதியின் எழுத்து, எப்படிக் குதூகலிக்கிறது. புறப்பாட்டைக் கொண்டாடுகிறது.

பாரதியின் சொந்த வாழ்க்கை சோகமானது. ஆனால், அவர்தம் கவிதைப் படைப்போ வேகமானது. இவ்இரண்டும் குழைய, சிற்பி எழுதியுள்ளார் என்பதைப் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகம் நிரல்பட எடுத்துக்காட்டுகிறார்.

'காக்கை, குருவி எங்கள் சாதி' என்று அஃறிணை உயிர்களையும் தன் உடன் பிறப்புகளாகக் கொண்டாடியவன் பாரதி. ஆனால், அவனைத் தமிழ் மனுச சாதி கொண்டாடாமல் திண்டாட விட்டதுதான் நம் வரலாறு. அரவிந்தரிடம் பாரதிக்கு ஏற்பட்ட முரண்பாட்டைச் சிற்பி சொல்லும்போது,

பிம்பம் நொறுங்கி
பொடி பொடியானது
நம்பிக்கை எங்கோ
விரிசல் கண்டது

என்று எழுதுகிறார். மிகச் சரியான மதிப்பீடு.

பாரதியின் கண்ணன் பாட்டு, முதலான வேதாந்தக் கவிதைகளுக்கு அரவிந்தர் விதையாக இருந்தார் என்ற நூலாசிரியர் கருத்து ஏற்கத்தக்கது அன்று. அரவிந்தர் பாதை வேறு, பாரதியின் பாதை வேறு. இருவருமே ஒருவரை ஒருவர் இறுதிக் காலத்தில் விரும்பவில்லை என்பதுதான் உண்மை. எனவே, ஒருவரிடத்தில் இருந்து இன்னொருவர் செல்வாக்குப் பெறுதற்கு இடமே இல்லை. அதுவும் பாரதி தன்மானக் கவிஞன்.

பாரதிக்குக் கடல் என்றால் பிடிக்கும். புதுவைக் கடலும் சரி, சென்னைக் கடலும் சரி அக்கடலில் எப்போதும் பொங்கி வரும் அலைகளும் பிடிக்கும். அவை கரையுடன் தழுவுதலும் பிடிக்கும். அவர்தம் பிடித்தம் அவர்தம் கவிதைகளில் எங்கும் வெளிப்பட்டுக் கிடக்கிறது.

ஒரு கவிஞரை இன்னொரு கவிஞர் இனம் கண்டு, தன் கவிதைகளால் அணி செய்வது புகழ்ச்சிக்கு உரியது. தமிழில் பொதுவாக எளிதாக நடவாதது. அதனினும் மேலாக ஒரு

பேராசிரியக் கவிஞரை, இன்னொரு பேராசிரியர் நூலெழுதிப் பாராட்டுவதும் தமிழ் உலகில் எளிதில் நடவாதது. அவ் அரிய நிகழ்வு. இவ் அரிய நூலில் நிகழ்ந்துள்ளது. மா கவிஞர் பாரதியைப் பற்றி நம் காலச் சீர் கவிஞர் சிற்பி, கவிதையில் வரலாறு சமைக்கிறார். அச்சமையலைப் பேராசிரியர் சங்கர வள்ளி நாயகம் தம் எழுத்துப் படைப்பால் நமக்கு எடுத்துப் படைக்கிறார்.

தமிழரின் நன்றிகெட்ட குணத்திற்கு ஒரு சான்று. தூத்துக்குடி வீரத்தமிழன் வ.உ.சி., சிறையில் இருந்து விடுதலையாகி வெளியே வந்தபோது, வரவேற்கச் சிவாவைத் தவிர ஆள் எவரும் இல்லை என்பதைப் பாரதி எழுதுவதாக சிற்பி இவ்வாறு எழுதுகிறார்:

என்ன கொடுமையடா
நன்றி கெட்ட தமிழ்நாடு
என் தோழன் சிறை மீண்டபோது
ஏனென்று கேட்கவில்லை
ஏறெடுத்துப் பார்க்கவுமில்லை

வ.உ.சி.,யை மட்டுமா? புதுவையிலிருந்து புறப்பட்டார்; கடலூரில் சிறைப்பட்டார்; சிறையிலிருந்து வெளியே வந்த பாரதியை வரவேற்கப் புதுவைத் தமிழரும் போகவில்லை. தமிழகத் தமிழரும் போகவில்லை. அவருடைய உறவினரைத் தவிர. அத்துணை வீரம்! நன்றி உணர்வு. இந்நிகழ்வைக் கவிஞர் சிற்பி நன்றாகவே எழுதியிருக்கிறார். பேராசிரியர் சங்கரவள்ளி நாயகம் மிகச் சரியாகவே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இந்நூல், இரு கவிஞர்களை மட்டும் நமக்கு அடையாளம் காட்டவில்லை. இந்நூலை எழுதிய ஆசிரியரின் விரிந்த மனத்தையும் அடையாளம் காட்டுகிறது. இந்நூலைப் பயிலும்போது மூன்று பெருமக்களை நாம் ஒருசேரப் பயின்று விடுகிறோம்.

பாராட்டத்தக்க முயற்சி.

வாழ்த்துகளுடன்
க.ப.அறவாணன்

பாரதி பிறந்த நாள்
11.12.06

என் உரை

புதுமையை வரவேற்போம்! வாழ்த்துவோம். புதுமைக்கு உருவும் திருவும் தந்து படிப்போர் உள்ளத்தையெல்லாம் தம் புதுமைச் சிந்தனையால் கொள்ளை கொண்டவர் வெல்லத் தமிழ்க் கவிஞர் சிற்பியாவார். கவிதை விருந்தாம் புத்தமுதைப் பரிமாற்றம் செய்வதற்காகச் சிற்பி படைத்த கவிதை நூல்தான் 'பாரதி கைதி எண்.253' என்பதாகும். சிற்பியின் எண்ணக்கூட்டில் சிறைப்பட்டுக் கிடந்த பாரதி பற்றிய ஈர்ப்பும் ஈடுபாடும் தொடக்கத்தில் அரும்பாகிப் பின் போதாகி, இன்று இந்நூலாய் மலர்ந்துள்ள மாமலர் தமிழ்மனம் பரப்புவது கண்டு மகிழ்கிறேன். அவர் கற்றுள்ள தமிழ்க் கல்வியும் பெற்றுள்ள முற்றிய தமிழ்ப் புலமையும் இந்நூலிற்கு உரமும் திறமும் ஊட்டுவிக்கின்றன.

இக்கவிதை நூலின் பன்முகச் சிறப்புக்களை அறிய, உணர, உள்வாங்கப் பலமுறை படித்தேன். கவிதைத்தேன் - தமிழ்த்தேன் - குடித்தேன் - குளிர்ந்தேன். என்னையே நான் மறந்தேன். சிறைப்பட்ட பாரதி பற்றிச் சிந்தித்து, அவரை விடுதலைப் போராட்ட வீரராகச் சித்திரித்துக்காட்டி, அவரது சிறப்பான சிந்தனைகளையும் பொறுப்பான செயற்பாடுகளையும் வெளிப்படுத்திக் காட்டும் சிற்பி கைவண்ணத்தில் பட்டெழுந்த மெய்வண்ணமான 'பாரதி கைதி எண் 253' என்னும் கவிதை நூல் ஞாலப்புகழ் பெறும்; காலத்தையும் வென்று காட்டும்.

பாரதியின் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள், அவர்தம் கொள்கைப் பிடிப்பும் குன்றாமிடுக்கும் அவரது சாதி பாராட்டாத சால்பு, அவரது நன்றி மறவா இதயம், அவர் கொண்டிருந்த நேயத் தொடர்பு, அவரைப் பற்றியிருந்த இன ஈடுபாடு, தமிழ் உணர்வு, இலக்கியத்தாகம், அவரது இதழாசிரியப் பணி, அவரிடம் குடிகொண்டிருந்த தத்துவச் சிந்தனை, கவிதை எழுத அவருக்குத் துணைநின்ற சூழல்கள், அவரை வாட்டி வருத்திய சிறைத் துன்பம் என்பன இந்நூல்வழி வெளிப்படும் செய்திகளாகும். இவற்றை விளக்குவதற்குச் சிற்பி கையாண்டுள்ள உத்திமுறைகள் பாராட்டத் தக்கன.

பல்வேறு பணிகளுக்கு இடையேயும் அணிந்துரை வழங்கி நூலைப் பெருமைப்படுத்திய என் பற்றுதலுக்குரிய பழைய மாணவரும் கடமையிலும் கட்டுப்பாட்டிலும் கண்ணியமாய் நடந்து கொள்பவரும் உயிரைப் பணயப்படுத்திப் பணியாற்றும் காவல் துறைக்கு மட்டுமல்லாமல் தமிழ் மொழிக்கும் காவலரும் நற்றமிழ் நாவலருமான திருமிகு.தி.இராதாகிருட்டிணன் இ.கா.ப. அவர்கட்கும் என் பேரன்புக்கு ஆட்பட்டவரும் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரும் ஆராய்ச்சித் திறனுக்கும் அரிய சிந்தனைக்கும் உரியவருமான அறிஞர் திருமிகு.சு.பாலசுப்பிரமணியன் அவர்கட்கும் வீறுகொண்டு தமிழ் இனப் பெருமையை நாளும் விளக்கி வருபவரும் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைமை, பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆகிய மிகப்பெரும் பொறுப்புக்களில் அமர்ந்து தமிழ் இன ஆற்றலுக்கு வித்திட்டவருமான அறிஞர் திருமிகு.க.ப.அறவாணன் அவர்கட்கும் என் மனமார்ந்த நன்றியைப் படைப்பதில் பேருவகையும் பெருமிதமும் உறுகின்றேன்.

படி எடுப்பதில் மடியின்றி உதவிய எனது மன்ற அருமைப் பிள்ளைகளான திருமிகு.ஏ.முருகேசன், திருமிகு. இரா.மகாலிங்க ஈசுவரன், திருமிகு.இரா.செல்வலக்குமி ஆகியோர் என் நன்றிக்குரியர் ஆவர்.

பதிப்புத் துறையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நிலையில் சீரெய்திச் சிறப்புடன் விளங்கும் அகரம் பதிப்பக உரிமையாளரும் என் ஆவியில் அமர்ந்து என்னை நாளும் வாழ்த்திக் கொண்டிருக்கும் கனல்கவிஞர் மீராவின் மைந்தருமான திருமிகு.இரா.கதிரும் அவர்தம் நிறுவனமும் என் நன்றி கலந்த பாராட்டுதலைப் பெற்றுப் பதிப்புத் துறையில் பல்லாண்டுகள் பாராட்டுக்குரியதாய் விளங்க என் தமிழன்னை அருள்வாளாக.

அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம்
தலைவர்
திருவள்ளுவர் மன்றம்
கோயிற்பட்டி

படையல்

பாரதியிடம் பற்றுக்கொண்ட
அனைத்துப் பாரதியர்களுக்கும்
சிறப்பாகச்
சிந்தனைச் சிற்பியின்
பாரதியச்சிந்தனைக்கும்

உள்ளடக்கம்

இருபெரும் கவிக்கடல்கள் ◆ 17

பாரதியத்தில் காலூன்றிய கவிஞர் சிற்பி ◆ 28

புதுவை வாழ்வும் புன்மைச் சிறை வாழ்வும் ◆ 38

சிற்பி சிந்தனையில் சிறைப்பட்ட சீர்திருத்தக்கவி ◆ 48

இருபெரும் கவிக்கடல்கள்

புரிந்துகொள்ள இயலாப் புதிர்ப் பாவலர்

பாரதி பல பரிமாணங்களைக் கொண்டவர் ஆவார். 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல்' என்று அவரே அறிவித்தார் எனினும், நாட்டுக்குழைக்கும் பணியை முன்வைத்து, அப்பணிக்குக் கவிதையை ஆற்றல் மிக்க கருவியாகப் பயன்படுத்தியவர் பாரதி ஆவார். தமது பாட்டுத் திறத்தால் இவ்வையகத்தைப் பாலித்திட வேண்டுமென்பது அவரது வேணவாவாகும். பாரதி தாய்நாட்டின் விடுதலைக்காகப் பெரும்பாடுபட்ட நாட்டுப்பற்றாளர் ஆவார். சாதி ஒழிந்த, சமநிலை நிறைந்த குமுகாயத்தைக் காண விரும்பிய சீர்திருத்தவாதி அவர் ஆவார். பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏறிட்டுப் பார்க்காத 'சனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடைமை' என்ற புதிய குமுகாயம் காண விழைந்த போராட்ட வீரர் அவர் ஆவார்.

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகைசெய்ய விரும்பிய தமிழ்ப்பற்று அவரிடம் மிகுதியும் இடம் பெற்றிருந்தது. இந்நாட்டின் குமுகாயப் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல திட்டங்களை எண்ணி எழுதியதோடல்லாமல் அவற்றைச் செயற்படுத்திய செம்மைத் திறனையும் அவர் பெற்றிருந்தார். நாட்டின் பழைமை, பண்பு, சமயம், தத்துவம், கலை, காவியம் ஆகிய அனைத்தின் சாரத்தினையும் சரியாக அறிந்துகொண்ட நிறைவான 'இந்தியத் தமிழன்' என்ற சிறப்பு அவருக்குரியதாகும். 'உண்மைகள் தெய்வங்கள் என்போம், மற்றும் ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்' என்று பறை சாற்றிய தத்துவ ஞானத்திற்கு அவர் சொந்தக்

காரராவார். சில சமயங்களில் மேற்கூறிய எவற்றிலும் அடங்காத, புரிந்துகொள்ள இயலாத புதிர்ப்பாவலராகவும் அவர் விளங்கினார்.

அறிவியல் பார்வையில் ஆழ்ந்த கவிஞர்

பாரதி தாம் ஈடுபட்ட துறை அனைத்திலும் தமது கருத்தை, கனவை, ஏக்கத்தை, ஏமாற்றத்தை, நம்பிக்கையை வெளியிடுவதற்குக் கவிதையைக் கையாண்டவர். மாபெரும் கவிஞரென்னும் உச்ச நிலைக்கு இலக்கியத் துறையில் வளர்ந்த ஒரு கவிஞர் இவ்வளவு பரவலாக அறிவுத் துறைகள் பலவற்றில் ஆழ்ந்த ஈடுபாடும் தெளிந்த சிந்தனையும் கொண்டிருந்தது அரிதினும் அரிதாகும். இவை அனைத்திலும் பாரதிக்குத் தோன்றாத் துணையாக நின்று உதவியது அவரது அணுகுமுறையாகம்; அவரது பழுதுபடாத பார்வையுமாகும். அவற்றில் ஊடுருவி நின்று காய்தல், உவத்தல் கடந்த அறிவியல் ஆய்வுணர்வு அவருக்கே உரியதாகும். 'கவிஞன் ஒவ்வொருவனும் தான் பிறந்த காலம், இடம், குமுகாயம் ஆகியவற்றின் குரலை வெளியிடுவதோடு அவற்றை வென்றும் நிற்கிறான்' என்னும் விசயபாரதியின் கூற்றுப்படி பாரதி தம் காலக்குமுகாய நிலையை வெளிப்படுத்தியதோடல்லாமல் அதனை வென்றும் வாழ்வது ஈண்டுச் சிந்திக்கத்தக்கதாகும்.

பாரதித் தாக்கம்பெற்ற தகவுடையோர்

சிலம்புச் செல்வர்

"எனக்கு எது தேவையோ அதைப் பாடினார் பாரதி. என்னைத் தேசபக்தனாக்கியவன் பாரதிதான். என் தாய்மொழியிடத்து நான் பற்றுக்கொள்ளச் செய்தவனும் பாரதிதான். இறைப்பக்தியை என் அன்னையிடம்தான் நான் பெற்றேன் என்றாலும் அதற்கு உரமேற்றினான் பாரதி. இறைப்பற்றும் தேசப்பற்றும் மொழிப் பற்றும் கலந்த வாழ்க்கை நடத்துபவன்தான் முழு மனிதன் என்று உண்மையை எனக்கு உணர்த்தியவன் பாரதிதான்" என்று பாரதியிடமிருந்து தாம் பெற்ற தாக்கத்தைப் பற்றி ம.பொ.சி குறிப்பிடுகின்றார்.

பாரதி பாடல்களின் பெருமையை, அவற்றின் உணர்ச்சியூட்டும் தன்மையைப் பேசும் ம.பொ.சி. பாரதிபாடலைப்

பண்ணோடு கலந்து உணர்ச்சியின் சிகரத்திலே நின்று பிறர் பாடிக் கேட்டபோது உடல் மயிர்க்கூச்சு நிகழும்; நரம்புகள் முறுக்கேறும்; உள்ளத்திலும் வீரம் பொங்கும் என்று குறிப்பிடும்போது பாரதியின் பாடல்கள் ஏற்படுத்தும் உணர்வெழுச்சியை உணரமுடிகிறது. ஒரு கவிஞனின் கவிதைகள் எப்படி நமக்குப் புத்துணர்ச்சியூட்டி வழிகாட்டுகின்றனவோ; அதேபோல் அவருடைய வாழ்க்கையும் நமக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றது. பாரதியின் வாழ்க்கை தியாக வேள்வியில் புடம்போட்ட தூய்மையான நாட்டுப் பற்றாளனின் வாழ்க்கையாகும். முப்பத்தொன்பது ஆண்டுகள்தான் அவர் வாழ்ந்திருக்கின்றார். இதில் பதினேழு ஆண்டுகள் பொது வாழ்வில் அவர் ஈடுபட்டிருக்கின்றார். இக்கால அளவில் அவர் புரிந்திருக்கும் சாதனைகள் சிறப்பானவை; எளிய மனிதர்களால் எண்ணிப் பார்க்க முடியாதவை.

பாரதி ஆய்வுச் செல்வர்

"பாரதியைக் கற்குந்தோறும், கற்குந்தோறும் புதிர்மேல் புதிராக விரிந்து செல்லும். 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' எனும் அனுபவமும் 'யாரே முடியக் கண்டார்?' என்ற வியப்பும் வளர்ந்து கொண்டு நீள்கின்றன. பாரதியார் தமிழ்க் கவிதைகள், பாரதியார் தமிழ்க் கட்டுரைகள், பாரதியார் ஆங்கிலக் கவிதைகள், ஆங்கிலக் கட்டுரைகள், படைப்பிலக்கியங்கள் எனும் பல்வேறு துறைகளில் பாரதி தரிசனம் நிகழவேண்டும். அப்பொழுதுதான் பாரதியை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கான தொடக்க முயற்சிக்கான வாய்ப்பு அமையும். பாரதியியல் ஆய்வாளர்கள் பலர் முற்கூறிய ஒருங்கிணைக்கப் பெற்ற கற்கையில் ஊன்றி, உறைந்து தோயாமல் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்" எனக் குறிப்பிடுகின்றவர் பாரதி பற்றிய ஆய்வில் முழுமையும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ள பெ.சு.மணியாவார்.

பாரதி பெருமையில் ஊறிய சான்றோர்கள்

அப்பதினேழாண்டுப் பொது வாழ்க்கையில் அவர் சந்தித்துள்ள இன்னல்களோ எழுதிமுடியாதவை. அவற்றையும் மீறி அவர் நாட்டிற்கும் மனித இனத்திற்கும் செய்திருக்கும் பணிகள் கற்பனை செய்து பார்க்க முடியாதவை. அந்த அளவிற்கு அவை வியத்தகு சாதனைகளாகும். அங்ஙனம் சாதனை புரிவோரின் வாழ்க்கை

அவர்களின் காலத்திலேயே அவர்களை விந்தை மனிதர்களாக ஆக்கி விடுகிறது. பாரதியும் ஒரு விந்தை மனிதராகவே வாழ்ந்திருக்கின்றார். அவர் வாழ்ந்த காலத்தில் அவரது முழுப் பெருமையைத் தமிழகம் நன்கு உணரவில்லை. ஆனால் பல தமிழ்ச் சான்றோர்கள் அவரைப் பற்றிய பெருமையில் ஊறித்திளைத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவராக இடம் பெற்று நம் இதயம் கொள்ளும் நிலையில் பாரதியின் பெருமையை நாளும் எழுத்தாலும் பேச்சாலும் ஏற்றமிகு வாழ்க்கை முறையாலும் கவிஞர் சிற்பி பறைசாற்றிக் கொண்டிருக் கின்றார்.

அறிஞர் கைலாசபதி

பாரதிபால் சிற்பி கொண்டுள்ள தள்ளரிய பற்றினைக் கீழ்வருமாறு அறிஞர் க.கைலாசபதி விரிவாக விளக்கிக் காட்டுகின்றார். "சிற்பி தம் வாழ்நாளெல்லாம் பாரதியைத் தம் வழி காட்டியாகக் கொண்டு வாழ்கின்றார். அவருடைய எண்ணமும் செயலும் பாரதியின் சிந்தனைக் களத்தை அடியொற்றியே அமைந்துள்ளன. எனவேதான் சிற்பியின் தனிப்பட்ட வாழ்வும் பொது வாழ்வும் குமுகாயத்தை நோக்கியே அமைந்துள்ளன. இவ்விருவரது காலச்சூழல் மாறுபட்டிருப்பினும் வாழ்க்கை நிலையில் ஒன்றுபட்டு நிற்கின்றனர். பாரதியின் படைப்புக்களைப் பன்னோக்கில் ஆய்வு செய்துள்ள சிற்பியின் இலக்கியங்களை உற்று நோக்குங்கால் பாரதியின் சிந்தனைப் போக்கும் சிற்பியின் திறனாய்வுப் போக்கும் அறிய இயலும்."

சிந்தனைக் கவிஞர் சிற்பி

வானம்பாடி இயக்கத்தின் வைரமுடி

புராணியத் தாக்கமும் அறிவியல் தாக்கமும் கலந்த கவிஞர் சிற்பி ஆவார். சுற்றிவளைத்துச் சொல்வதைச் சூனியக்கார எழுத்து என அவர் சொல்லுவார். எதையும் நேரடியாகச் சொல்லவேண்டும் என்ற விருப்பம் அவருக்குண்டு. அவரின் எழுத்துக்கள் போர்ப்பண்பு வாய்ந்தவை. பாரதிபோல் சமுதாய இழிவுகளைச் சித்திரித்துத் தனி மனிதக் குறைபாடுகளை எடுத்துக் காட்டுவதில் அவருக்கு நிகர் அவரேயாவார். வானம்பாடி இயக்கத்தை வழிநடத்திய படைப்பாளிகளில் சிற்பியும் ஒருவராவார்.

சூழலுக்கு ஏற்ற கவிதை

"கவிதைகளைப் படைக்கவேண்டிய சூழல் அமையாமல் அவர் கவிதை எழுதமாட்டார். பெரும்பாலான கவிதைகள் இவர் காரில் பயணம் செய்கையில் உருவானவையாகும். கவியரங்கக் கவிதைகள் பெரும்பாலானவை இப்படி எழுதப்படுவது தான். தலைப்பிற்கேற்பக் கவிதை எழுதுதல் கவிஞருக்கு உடன்பாடு இல்லாதது. இருப்பினும் இப்படியான ஓர் இலக்கியப்பணி நமது சமூக அமைப்பில் செயற்படுவதனால் அதனுடன் ஒத்துப்போக வேண்டிய சூழ்நிலை என்பார். இப்படியான கவியரங்குகளில்கூட அங்குள்ள சூழலுக்கு ஏற்பக் கவிதைப் பின்புலத்தை அமைத்துக் கொள்வார்" என்று சிற்பியின் கவிதைப் பின்புலத்தினைச் சிறப்பாகப் புலப்படுத்துகின்றவர் தே.ஞானசேகரன் ஆவார்.

சிற்பி கவிதைகளின் அடிநாதம்

கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர் சிற்பியாதலால் அவரது கவிதைகள் கிராமியப் பின்புலத்தில் பாடப்படுவனவாய் உள்ளன. கிராமிய அழகையும் கிராமிய வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளையும் நுணுகிக் கவனித்துத் தமது கவதைகளில் அவர் பதிவு செய்துவிடுகிறார். அவரது கவிதைகளில் நாட்டுப்புற இலக்கியங் களின் வடிவமும் கிராமியச் சூழலும் பின்னிப் பிணைந்து காணப்படும். தமிழ் இலக்கியங்களின் பின்புலமும் மலையாளம் மற்றும் மேலை இலக்கியங்களின் பின்புலமும் அவரது கவிதைக்குச் செழுமை சேர்க்க உதவின. பாரதிப்புலவர் முதன் முதலில் தொடங்கி வைத்த பொதுவுடைமைச் சிந்தனையும் அறிவியல் சிந்தனையும் கவிஞருக்குப் பிடித்தமானவையாகும்.

பாரதி பாடியுள்ள ஒவ்வொரு கவிதைக்கும் பின்புலமாக ஒரு வரலாறு இருப்பதுபோல் சிற்பியின் கவிதைப் பின்புலத்தைச் சுற்றியும் அதற்குரிய வரலாறு இருக்கும். மனித வாழ்க்கையை விலக்கி வைத்துவிட்டு வேறு எதனையும் பாடாத பாரதிபோல் மனித வாழ்க்கையை விளக்கம் செய்பவையாய்ச் சிற்பி கவிதைகள் காணப்படுகின்றன. அந்த வாழ்க்கையைச் சுற்றியுள்ள மனிதர்களும் அவர்களுடைய சிக்கல்களுமே பாரதி கவிதைகளின் பின்புலமாக அமைந்திருப்பதைப் போல் சிற்பி கவிதைகளுக்கும் அவையே

அடிநாதமாக, ஆதாரச் சுருதியாக அமைந்துள்ளன. இனி, சிற்பியே தம் கவிதை பற்றிப் பேசுகிறார்.

"சுருக்கமாகச் சொன்னால் இக்கால மனிதனின் சிக்கல்களைப் புரிந்து கொள்ளும் இடையறாத நிகழ்ச்சியே என் கவிதை. என் மக்களையும் என் சமுதாயத்தையும் குறித்த ஆழ்ந்த அக்கறையே என் எழுத்தின் சாரம்"

பொதுவுடைமையில் பூத்த பொற்பூ

மார்க்சியத் தத்துவம் விரைவில் வெள்ளம் போல் சிற்பியைக் கவர்ந்து இழுத்துள்ளது. இதன் விளைவாகப் பொதுவுடைமை இயக்கப் பேராசான் சீவாவினால் உருவாக்கப்பட்ட கலை இலக்கியப் பெருமன்றப் பணிகளில் இடையறாத ஈடுபாடு அவர் கொண்டிருந்தார். சீவாவிற்குப் பின் தலைமை ஏற்ற பாலதண்டாயுதத்தின் சிந்தனைத் தாக்கமும் பேராசிரியர் இராமகிருட்டிணன் மேதைமையும் அவருக்குள் கால் கொண்டன. அன்றியும் 'கலை கலைக்காகவே' என்ற கருத்தோட்டத்தில் இளம் படைப்பாளிகள் பலரைப்போல் அவரும் இணைந்தார்.

சிற்பி பார்வையில் புதுக்கவிதை

புதுக்கவிதைப் பிறப்புக்குத் தமக்கு அடிப்படைக் கரணியராகச் சிற்பி கருதுகின்ற பாரதியின் இலக்கியத் தடத்தில் தம்மைப் பதித்துக்கொண்ட சிற்பி மரபில் காலூன்றிப் புதுக் கவிதைகளை எட்டிப் பார்க்கின்றார்.

"இது புதுக்கவிதையின் புல்லரிப்புக் காலம், புத்தம் புதிதாய்க் கட்டவிழும் வாழ்க்கையின் அறிவும் அழகும் தம்மை நெறிப்படுத்திக் கொள்ள வண்ணமும் வடிவமும் ஆகின்றன. அதனால் மரபுகளைப் பட்டையுரித்துக்கொண்டு புதுமை துளிர்க்கிறது, மலர்கிறது, களிகிறது" என்று புதுக்கவிதையின் தோற்றம் பற்றிச் சிற்பி கருத்துரைக்கின்றார்.

"மனித நெஞ்சின் உயிர்த்துடிப்பை, ஆசைப்புயலை, வெற்றி தோல்விகளை, தேம்பலை, திமிரும் உணர்ச்சியை, ஏற்றத்தை, எழுச்சியை எந்தக் கவிதையால் ஓசை நயத்துடனும் உருவச்

சிறப்புடனும் சொல்ல முடியுமோ அந்தக் கவிதைதான், அதற்கு என்ன பெயரைச் சூட்டினாலும் சரி. அதுதான் தமிழுக்கு வாழ்வு தரும் கவிதை" எனப் புதுக்கவிதைக்குச் சிற்பி விளக்கம் தருகிறார். புதுக்கவிதைக்கு இத்தகைய சிறந்த விளக்கம் தந்துள்ள சிற்பி புதுக்கவிதையில் ஈடுபாடு மிகக் கொண்டவர் ஆவார்.

புதுக்கவிதையில் ஈடுபாடு

"மரபு மரணத்தின் தூதுவன் அல்ல. வாழ்க்கையின் தொடர் ஓட்டப் பந்தயத்தில் ஓர் அடுத்த தலைமுறையைத் தூண்டிவிடுகின்ற 'கிரியா ஊக்கி'. எனினும் இன்று மரபு யாப்பிலக்கணம் கொண்டதாக விளங்குகின்றது. இருப்பினும் அது இறுகிய கட்டுப்பாடு, வரையறுக்கப்பட்ட வடிவமைப்பு, நிச்சயிக்கப்பட்ட பாடுபொருள், காலத்தின் கட்டளையை மறுக்கும் போக்கு, பழமையை நிர்ப்பந்தப்படுத்தும் சர்வாதிகாரம் என்ற கண்ணோட்டத்தில் கையாளப்படுகின்றது" என மரபுக்கவிதைக்கு விளக்கத்தைச் சிற்பி விரிவாகச் செய்துள்ளார்.

"என் அடிவயிற்றில்
மரபின் தாமரைக் கொப்பூழ்
என் தீர்த்தக்கரையில்
புதிய பறவைகளின் சங்கீதம்" (காத்திருப்பு)

என்ற சிற்பியின் வரிகள் மரபு தழுவிய புதுக்கவிதையைப் படைப்பதில் அவருக்கு இருக்கும் ஆர்வத்தினை அறிமுகம் செய்கின்றன.

சிற்பியின் குமுகாயச் சிந்தனை

தமிழ்க் குமுகாயச் சிந்தனை, இந்தியக் குமுகாயம் பற்றிய எண்ணம், உலகக் குமுகாயம் பற்றிய நினைப்பு ஆகியவற்றையே தம் உயிர்மூச்சாகக் கொண்ட பாரதியைப் பின்பற்றியே கவிஞர் சிற்பியும் குமுகாயச் சிந்தனையை முதன்மைச் சிந்தனையாக்கிக் கவிதை பாடியுள்ளார்.

"இழையணி நங்கை போல
எழில்மலர் பூத்த சோலை
அழகியைப் பாட வென்றால்

ஆயிரம் கவிஞர் உள்ளார்;
மழைவளம் குன்ற, மண்ணில்
மலிவளம் பொன்ற, மக்கள்
குழைவுறும் நிலையைப் பாடக்
கொண்டுவா எழுதுகோலை! (கவிஞன் நெஞ்சம்)

என்று தம்மை எளிய மக்களின் கவிஞராகச் சிற்பி அறிமுகப்படுத்திக் கொள்கிறார். எனவேதான் சிற்பி இந்தியத் தலைவர்களையும் வள்ளுவரையும் பாரதியையும் சமநிலைத் தத்துவத்தை மனித இனத்துக்கு வழங்கிய காரல்மார்க்சையும் தமது கவிதைகளில் வியந்து பாராட்டுகின்றார்.

தமது காலச் சூழ்நிலைகளின் சிக்கல்களையும் விரிந்த பரப்பிலிருந்து அவர் பார்க்கிறார். தனி மனித வாழ்விலும் குமுகாய வாழ்விலும் மனிதனின் சூழ்ச்சியும் போலிமையும் வஞ்சகமும் மலிந்து வருவதைப் புலப்படுத்தும் தன்மையதாய் அவரது கவிதைகள் காணப்படுகின்றன. அநீதிக்கு எதிராக எழுப்பப்படும் உரத்த போர்க்குரலாக அவரது கவிதைகள் விளங்குகின்றன. அன்பும் பொறுமையும் அருளும் நிறைந்த மனித உலகில் அறியாமையும் வறுமையும் இல்லாமல் மனிதன் அமைதியாக வாழ வேண்டும் என்கிற தொனிப்பொருளே அவருடைய கவிதைகளின் உள்ளீடாக இருக்கும். மனிதக் குமுகாயத்தை ஒரே குடும்பமாகப் பார்க்கும் பார்வைதான் கவிஞர் சிற்பியின் பார்வையாகும். மரபுக் கவிதைகளை எந்த அளவு விரும்பி வரவேற்றாரோ அந்த அளவு விருப்பத்தையும் வரவேற்பையும் புதுக்கவிதைக்குச் சிற்பி வழங்கியுள்ளதால் அண்மையில் வெளியாகியுள்ள அவரது நூலான 'பாரதி கைதி எண்.253' என்பதனையும் புதுக்கவிதையிலேயே யாத்துள்ளார்.

மனிதநேயக் கவிஞர்

மனிதனுக்கள்ளே மனிதனாக இருப்பவன்தான் கவிஞன். கவிதையையே வாழ்க்கையாக உடையவன்தான் கவிஞன். வாழ்க்கையையே கவிதையாக உடையவன்தான் கவிஞன் என்று கவிஞனுக்கு இலக்கணமாய் அமைந்துள்ள இம்மூன்று கருத்துக்களும் சிற்பியின் முன்னோடியான பைந்தமிழ்ப் புலவர் பாரதிக்கும் செந்தமிழ்க்கவி சிற்பிக்கும் சிறப்பாகப் பொருந்தும்.

"மனித இனம் அடிமைத்தனங்களுக்குள் சிக்கி அழுகிக்

கொண்டிருந்தாலும் மனிதன் அழுவதில்லை. அவன் மீண்டும் புத்துயிர் பெறுவான்; உயிர்த்தெழுவான். எனவே மனிதன் நிரந்தரமானவன் என நம்பிக்கையூட்டுகின்ற முறையில் மனிதனை, அவனது பண்பைப் பார்க்கின்ற போக்கு மனிதநேயம் மிக்க எழுத்தாளர்களிடமும் இடதுசாரிச் சிந்தனைகளையுடைய படைப்பாளர்களிடமும் பொதுவாகக் காணப்படும். டால்ஸ்டாய், பாப்லோநெரூடா போன்றவர்களின் படைப்புக்களில் இப்போக்கைச் சிறப்பாகக் காணலாம்" எனக் கவிதையின் புத்துயிர்ப்புப் பற்றிப் பேசும் பா.ஆனந்தக்குமார் சிற்பியின் படைப்புக்களிலும் மனிதப் பண்பின் புத்துயிர்ப்பை, மலர்ச்சியைப் பரவலாகக் காணமுடியும் என்று குறிப்பிடுகின்றார்.

எளிமையில் ஏற்றம்

சாதனையாளர்களின் முத்திரைகள், சோதனையாளர்களின் விளையாட்டுக்கள், தொடக்க வெற்றிக்குப் பிறகு சிறுதொலைவு கூடப் பயனப்படாத தயக்கங்கள், கவிதை என்ற பெயரில் புலமைப் புனைவுகள், உன்னதம் என்ற பாவனைகள்..... இப்படிப் பலப்பல காட்சிகள் அரங்கேறி நிற்கும் புதுக்கவிதை மேடையில் கவிஞர் சிற்பி அவர்களின் கவிதை வாழ்க்கை பலப்பல கேள்விகளுக்கு விடையளிக்கும் சிறப்பு வாய்ந்தது எனச் சிற்பியைப் பாராட்டி மகிழ்கின்றவர் கவிஞர் பாலா ஆவார்.

"கொஞ்சிவரும் கற்பனையில்
கூத்தாடும் பூக்காடு
மண்ணில் மரக்கிளையில்
மறையாமல் பொன்மதிபோல்
பண்ணின் சிறகசைத்துப்
பாய்ந்தேகும் ஒளிப்பறவை
நேற்றின்று நாளையென
நீள்கின்ற காலமெனும்
ஆற்றுப் பெருக்கின்மேல்
அமைத்திட்ட பொற்பாலம்" (கவிதை)

என்ற வரிகளின் வாயிலாகக் கவிதைச் சிறப்பைச் சிற்பி கொண்டாடுகிறார். புதிர் உலகம், இருள் உலகம், உயர்மனப் பாவனை, உலகம்

ஆகியவற்றிற்குள் பல கவிஞர்கள் தம்மைச் சிறைப்படுத்தி நின்ற காலத்தில் எளிமை, தெளிவு, நேர்ப்பேச்சு, மரபு வருணங்கள், நிகழ் உலக வாழ்வின் வெளிச்சம் ஆகியவற்றால் கவிதையை எல்லார்க்கும் உரியதாக்கிய பாரதியைப்போல் சிற்பியும் தம் கவிதைகளை மக்கள் அனைவருக்கும் உரியதாக்கியுள்ளார்.

பாட்டைத் திறக்கவந்த பாலசுப்பிரமணியமே

"சிற்பி நாடறிந்த கவிஞர்; நாட்டை அறிந்த கவிஞர்" என்று புகழாரம் சூட்டி மகிழ்ந்தவர் சிற்பியின் கெழுதகை நட்பிற்குரிய கவிஞர் மீரா ஆவார்.

"உயரம் குறைந்தவன் நான்
ஆயினும் எனது
எழுத்துக்கள் குள்ளமானவை அல்ல
கூலிக்கு அவைகள் பிறந்ததுமில்லை
வேலிக்குள் முடங்கிக் கிடந்ததுமில்லை
எழுத்துக்கள் ஆத்மாவின்
இனிய குழந்தைகள்" (என் எழுத்துக்கள்)

என்று தம் எழுத்துக்களின் தரத்தையும் தகுதியையும் சிற்பி எடுத்து மொழிகின்றார்.

"வீட்டிற் குறட்டை விட்ட செந்தமிழர் கண்விழிக்க
வெற்றி இலக்கியத்தை அன்றளித்த பாரதிபோல்
பாட்டைத் திறக்க வந்த பாலசுப் பிரமணியப்
பைந்தமிழ்ப் பாவாணர் புகழ் பெற்று வாழியவே"

எனப் பாரதிக்கும் சிற்பி என்னும் பாலசுப்பிரமணியத்திற்கும் ஒருசேர மனம் திறந்த பாராட்டை வழங்கியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆவார்.

"நான் மரபின் பிள்ளை
புதுமையின் தோழன்
என் களம் - என் மண்
என் பாத்திரங்கள் - என் மனிதர்கள்
என் பின்புலம் - தமிழ் இலக்கியம்" (இறகு - முன்னுரை)

என்ற வரிகள் மரபு, புதுமை ஆகிய இருவகைக் கவிதைகளைப் படைப்பதில் சிற்பிக்கு இருக்கும் ஆர்வத்தைப் புலப்படுத்துகின்றன. ஆசிரியருக்கு ஒப்பான அறிவையும் ஆற்றலையும் பேரையும் புகழையும் சீரையும் சிறப்பையும் அவரிடம் பயின்ற மாணாக்கர் பெற்றிருப்பாரேயானால் அதைவிடப் பெருமை தரத்தக்க செய்தி ஆசிரியருக்கு வாய்க்க முடியாது. அதுபோல் ஆசானாகத் தாம் கருதிய பாரதி பெற்றிருந்த கவிதை ஆற்றலையும் கற்பனை வளத்தையும் கருத்துச் செறிவினையும் புலமை நுணுக்கத்தினையும் பெற்று விளங்குவதில் பாரதிக்கு நிகராகச் சிற்பி கருதப்படுகின்றார். மறுமலர்ச்சிக் கவிதைத் துறையில் இவ்விருவரும் வியக்கத்தக்க இருபெரும் கடலாவர் என்று கருதுவது உண்மைக்குப் புறம்பானதாய் இருக்க முடியாது. இருவரின் கவிதைக் கடல்களில் வீசும் கருத்தலைகளில் நம் உள்ளத்தை நனையச் செய்வோம்.

◈

பாரதியத்தில் காலூன்றிய கவிஞர் சிற்பி

பாரதியம் தாலாட்டிய கவிப்பிள்ளை

வள்ளுவக் கோட்பாடுகள் 'வள்ளுவம்' என்றும் காந்தியச் சிந்தனைகள் 'காந்தியம்' என்றும் கார்ல்மார்க்சின் கருத்துக்கள் 'மார்க்சியம்' என்று வழங்கப்படுவதுபோல் தன்னேரிலாத் தமிழ்க் கவிஞன் பாரதியின் சிந்தனைகளும் சிறப்புக் கொள்கைகளும் 'பாரதியம்' என்று வழங்கப்படுவது முற்றிலும் பொருத்த முடையதாகும். பாரதியம் கவிஞர் சிற்பியை அவரது இளமைப் பருவத்திலிருந்தே தன் சிந்தனைத் தொட்டிலிலிட்டு வளர்த்து வந்தது; கவிதை பாடும் வலுவையும் தந்தது. சிவனடியார்களுக்குச் 'சிவாய நம' என்ற ஐந்தெழுத்து மந்திரம் உரத்தையும் திறத்தையும் ஊட்டுவதுபோல் 'பாரதியம்' என்ற ஐந்தெழுத்து மந்திரமும் கவிஞர் சிற்பிக்கு வாழ்வையும் வளத்தையும் வழங்கி வருகின்றது. 'சிவாய நம' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதாத சைவர் எவரும் இலர். அதுபோல் 'பாரதியம்' பற்றிப் பேசாத பயனற்ற நாள் என்றுமே சிற்பிக்கு இருப்பதில்லை.

பாரதி பதித்த கவிதைத் தாக்கம்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியப் பரப்பின் மீது பொதுவாகவும் தமிழ்க் கவிதையின் மீது சிறப்பாகவும் செல்வாக்குச் செலுத்திய சுப்பிரமணிய பாரதியார் தமிழ் மறுமலர்ச்சியின் தந்தை ஆவார். உடனடியான நெருங்கிய தாக்கத்தைச் சிற்பி மீது செலுத்திய கவிஞரும் அவரேயாவார். 'நமக்குத் தொழில் கவிதை; நாட்டுக் குழைத்தல்; இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்ற பாரதியின்

கோட்பாட்டிற்கு உண்மையானவராய்க் குமுகாய நலன்கருதி ஒரு கவிஞன் என்ற முறையில் தம் ஆற்றலையும் திறமைகளையும் பயன்படுத்த முடிவு செய்துள்ளதாகச் சிற்பி குறிப்பிடுகின்றார்.

"எனக்கு அவனே குரு
அவன் எழுத்தே வேதம்
வாததைகள சடடம
கவிதை சத்தியம்" (சிற்பியின் கட்டுரைகள்)

என்ற சிற்பியின் வரிகள் பாரதியிடமிருந்து அவர் பெற்ற கவிதைத் தாக்கத்தினைக் காட்டுகின்றன.

என்னுடைய குருநாதர் பாரதியாரை எண்ணுவதும் எழுதுவதுமே என் வாழ்க்கை எனக் குறிப்பிடும் சிற்பி பாரதியத்தைத் தம் வாழ்க்கையாகவே கொண்டார்.

பார் போற்றும் பாரதித் தமிழ்

சங்கத் தமிழ், கம்பன் தமிழ் என்ற வழக்காறுகளுக்கு இணையானது பாரதித் தமிழாகும். தமிழ் இலக்கியத்தின் புலர்காலைப் பொலிவு சங்கத்தமிழ் என்றால் அதன் உச்சி நேரத்தகத்தகாயம் கம்பன் தமிழாகும். தொடர்ந்து நேர்ந்த பேரிருளின் அடித்தளங்களைத் தகர்த்து ஒரு புதிய விடியலுக்கு, ஒரு புதிய விழிப்பிற்கு அழைத்துச் சென்றது பாரதித் தமிழ் என்பது சிற்பியின் சிந்தனையில் பட்டுத் தெறித்த முத்துக் கருத்தாகும்.

தன்னைப் புதுப்பித்துக் கொள்ள முயலும் இலக்கியம் ஏதேனும் ஒரு மேதையின் வாயிலாக அதனைச் சாதித்துக் கொள்கின்றது. தமிழ் மொழி தன் உயிர்ச்சாரத்தை மீட்டுக் கொள்ளவும் காலமாறுதல்களுக்கு ஏற்பப் புதிய நடையும் உடையும் பூணவும் ஒரு வரலாற்று வாய்ப்புக்காகக் காத்திருந்தது. அந்தக் காத்திருப்புத் தவம் தந்த வரம் பாரதியார் எனச் சிற்பி கருதுகிறார். அதுபோல் பாரதியம் தன் உயிர்ச்சாரத்தை மீட்கவும் புதிய ஆய்வுகளுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ளவும் கால மாறுதல்களுக்கு ஏற்பப் புதிய நடையும் உடையும் பூணவும் ஒரு வரலாற்று வாய்ப்புக்காகக் காக்கச் செய்த தவம் தந்த வரம்தான் சிற்பி ஆவார் என்று கூறுதல் பொருத்தமான கருத்தேயாகும்.

நறுந்தமிழ் பாடிய பெருங்கவி

தம் தலைமுறையில் ஒரு கம்பன் இல்லையே என்று ஆதங்கம் கொண்டெழுதிய பாரதிதான்,

> "புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்துத்
> தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
> கவியரசர் தமிழ் நாட்டுக் கில்லையெனும்
> வசைஎன்னால் கழிந்த தன்றே"

என்று பாடினார். கம்பன் இல்லாத குறையை நிரப்ப வந்த கவியரசர் தாமே என்ற பெருமிதத்தின் பொங்குமாங்கடலை இவ்வரிகளில் உணர்கிறோம். எத்தனை துல்லியமான தன்னம்பிக்கையில் பூத்த மதிப்பீடு! இம்மதிப்பீட்டைத் தமிழ் இலக்கிய உலகம் ஏற்றுக் கொள்ள மேலும் பதினைந்து, பதினாறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஆயினும் தமிழ் எழுத்து உலகம் 1936 வரை அவரை ஒரு பெருங்கவியாக ஏற்க மறுதலித்தது.

1935இல் பாரதியாரைத் தம் அறிவுத் தராசில் நிறுத்துப்பார்த்த பி.ஸ்ரீயும் எழுத்தாளர் கல்கியும் அவரைப் பெருங்கவிஞராக மதிப்பிடுவது மிகையான மதிப்பீடு என்று எழுதினர். தமிழ்ச் சிறுகதைக்கு வனப்பும் வளமும் சேர்க்க வந்த மணிக்கொடித் தலைமுறை இதற்கு எதிராகப் படை நடத்தி இலக்கியப் போர் நிகழ்த்தியது. வ.ரா தம் கருத்தை உறுதி செய்யும் வண்ணம் மகாகவி பாரதியார் என்ற நூலையே படைத்தார். கு.ப.ராவும் சிட்டியும் 'மகாகவி பாரதியார்' என்ற விவாதத்திற்கு முடிவுகட்டுவது போல் 'கண்ணன் என் கவி' என்ற அரிய திறனாய்வுப் படைப்பையே தந்தனர். இங்ஙனம் பாரதியிடம் முரண்பட்டவர்களின் முகத்திரையையும் சிற்பி கிழித்துக் காட்டுகின்றார்.

பாரதியைப் பெருங்கவி எனச் சுட்டும் சிற்பி தம் கருத்திற்கு ஆதரவாகக் கு.ப.ரா., சிட்டி ஆகியோரின் கருத்துக்களையும் மேற்கோளாகக் காட்டுகின்றார். அவை கீழ்வருமாறு இடம் பெற்றுள்ளன.

"பாரதிக்கு இலக்கிய உலகத்தில் ஷெல்லியுடன் ஸ்தானம் இருப்பது நிச்சயம். ஷெல்லி மகாகவியல்லையென்று யாராவது

சொன்னால் பாரதிக்கும் அப்பட்டம் தேவையில்லை. நாம் இன்று பாரதியை மகாகவி என்று போற்றினாலும் போற்றாவிட்டாலும் காலம் அவருடைய கவிதையின் மகத்துவத்தைத் துலக்கிக் காட்டும் என்பதில் சந்தேகமில்லை" என்று தம் ஆய்வின் முடிவைத் தந்தார்.

"நசித்துப் போய்விடும் போலிருந்த ஒரு பாஷைக்குப் புத்துயிர் அளித்து, பட்டுப்போன கவிதா மரம் மீண்டும் துளிர்த்துப் பச்சைப்பசேல் என்று இலைகளுடன் பலநிறப் புஷ்பங்களோடு இலக்கியச் சோலையில் ஓங்கி வளரும்படிச் செய்த பாரதிதான் நமது பெரியகவி" என்று குறிப்பிடுகின்றவர் சிட்டியாவார்.

இந்த விவாதம் சூடேறிய காலநிலையில் மணிக்கொடி எழுத்தாளராக இருந்த பாரதிதாசன் தம் கவிதை ஆசானைக் குறித்துப் பெருமிதத்தோடு ஒரு கவிதை வரைந்தார். 'பாரதியார் உலக கவி' என்று அறுதியிட்டுத் தொடங்கும் அக்கவிதையின் முடிவில் பாரதிதாசன் எதிர்முகாமை அறைகூவி அழைப்பதுபோல் குரலெழுப்பினார்.

"உலக கவி அல்லர் அவர் எனத் தொடங்கி
அய்யர் கவிதைக் கிழுக்கும் கற்பிக்கின்றார்
அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவார் உண்டோ?

என்று பாரதிதாசன் வரிகளைச் சிற்பி தன் கருத்திற்கு அரணாக்கி யுள்ளார்

பாரதிக்குச் சூட்டிய புகழ்ப் பூந்துணர்

பாரதியாரைக் குறித்த தம் எண்ணங்களைப் பின்வரும் தலைப்புக்களில் அமைந்த கவிதைத் தொகுப்புக்களில் சிற்பி கவிதையாக்கித் தந்துள்ளார். நிலவுப் பூ என்னும் தொகுதியில் பாரதி எங்கள் கண்மணி என்ற கவிதையில் பாரதி பற்றிய சிந்தனையைச் சிற்பி தொடங்கினார். தொடர்ந்து வெளியான சிரித்த முத்துக்கள் என்னும் தொகுப்பில் ஊற்று, சாவைச் சிரித்த கவி என்ற தலைப்புக்களில் பாரதி பற்றிச் சிற்பி பாடியுள்ளார். புன்னகை பூக்கும் பூனைகள் என்னும் தொகுப்பில் காலச் சிறகு என்ற தலைப்பில் அமைந்துள்ள கவிதையுடன் சிற்பி பாரதி பற்றி பாடலை நிறைவாய்

முடித்துள்ளார். பாரதியும் அவரது சிந்தனைகளுமே சிற்பியிடம் ஆழமாக வேரூன்றியுள்ளன.

"வான மணியரங்கில்
வட்டமிட்ட கற்பனையைக்
கூனித் திரிவோர் தம்
குடிசைக் கிழுத்த கவி;
மானம் இழந்தடிமை
வாழ்வொன்று வாழ்ந்ததனை
ஏனென்று கேட்டே
இதயம் வெடித்த கவி;
சாவைச் சிரித்த கவி;
சாத்திரத்துக் குப்பைகளைத்
தீவைத் தெரித்த கவி;
தேம்பும் தமிழர் மனப்
பூவை விரித்த கவி;
புத்தமுத மாய்க் கவிதை
தூவி இறைத்த கவி" (சாவைச் சிரித்த கவி)

என்று சிற்பி பாரதியைப் பலபடப் பாராட்டுகின்றார்.

"அவன் மட்டும்,
நேற்று நமது தமிழ்மண் தளிர்க்க
ஊற்றாய்ச் சுரந்து வாராதிருப்பனேல் -
நரக வாசலில்
புழுதி அணுக்களில்
காரிருட் சிறையில்
கூளக் கிடக்கையில்
செந்தமிழ்க் கவிதை
என்றோ
செத் தொழிந் திருக்கும்" (ஊற்று)

என்ற வரிகளில் தாழ்வுற்றுக் கிடந்த தமிழ்மொழிக்குப் புத்துயிர் ஊட்டிய பாரதியைச் சிற்பி நினைத்துப் பார்க்கிறார்.

"சுருங்கச் சொல்வது
வள்ளுவத் தந்திரம்

சுருங்கிக் கிடந்த
நெஞ்சங்கள் விரிய
சுருக் கென்று சொல்வது
பாரதி மந்திரம்
அழகிய கற்பனைச் சித்திரம்
தந்தச்
சிமிழில் செய்வது
கம்ப சூத்திரம்
பழகிய தமிழில் அடிமைத் தளைகள்
பட்டுத் தெறிக்கக் கூரிய உடைவாள்
படைத்துக் கொடுப்பதில்
பாரதிக்கு ஆத்திரம்!" (காலச்சிறகு)

எனப் பாரதியாரால் பாராட்டப்பட்ட வள்ளுவர், கம்பர் ஆகியோர் கவிதைகளின் இயல்புடன் பாரதி கவிதையின் இயல்பினையும் சிற்பி இணைத்துச் சொல்கிறார்.

பாரதியின் கவிதைகளை அக்கினிக் குஞ்சுகளுக்காக அடைகாத்த முட்டைகளுடன் சிற்பி உவமிக்கின்றார். அதனால் பாரதியின் சொற்களுக்குச் சோதிச் சிறகுகள் முளைத்து விடுகின்றனவாம். அவன் வார்த்தைகளில் வர்ண வியப்புக்கள் நிகழ்கின்றன. அவன் கவிதைப் பொருளில் ஒரு பொன்மய மெருகு ஏற்பட்டு விடுகிறதாம். அவன் பாட்டுத்தரும் சுவை காலம் அறியாத திட்டிப்பாகுமாம். பாரதியின் எழுத்துக்கள் அர்த்தகனத்தால் ஒளிச் சுவாசத்தை உமிழ்கின்ற உயிரோட்ட வைரப்படையல்களுக்குச் சமமானவை எனச் சிற்பி கருதுகிறார். கருத்துக்கேற்ற நிறமும் கவிதைக்கேற்ற மணமும் ஆழத்துக்கேற்ற வளமும் அகலத்துக்கேற்ற களமும் இயல்பாய்ப் பாரதி பாடல்களில் அமைந்துள்ளமையைச் சிற்பி சுட்டிக் காட்டுகின்றார்.

"குடிமக்கள் சொன்னபடி
குடிவாழ்வு மலர்ச்சி பெற
இடிபட்டு ஜார் வீழ
எழுந்த புரட்சியினை
பாழ்த்த கலியுகம் போய்ப்
பண்டைக் கிருதயுகம்

வாழ்த்தெடுக்க வந்ததென
வரவேற்றான் எங்கள் கவி''
(எங்கெங்குக் காணினும் சக்தியடா - யுகத்தில்)

என்ற வரிகளில் பாரதியை மக்கள் கவிஞனாகச் சிற்பி காட்டியுள்ளார்.

சிற்பி கைப்பட்ட பாரதிப் பண்போவியம்

பாரதியார் வாழ்ந்த காலத்தில் அவரை அறிந்தவர்கள் பலர் எழுத்தாளர்களும்கூட. ஆனாலும் அவரைக் குறித்து, அவர் நடை, உடை பாவனைகளைக் குறித்துப் படைப்புக்கள் உருவான சூழல் குறித்துப் பெரிய அளவில் பதிவுகள் இல்லாமல் போனது வருத்தத்துக்குரிய ஒன்றாகும் என்று சிற்பி வருந்திக் கூறுகின்றார். வ.ரா., யதுகிரி அம்மாள், நாகசாமி ஆகியோரின் சில குறிப்புக்களும் செல்லம்மாள் பாரதி, தங்கம்மாள் பாரதி எழுதிய மிகக் குறைந்த செய்திகளும் மட்டுமே கிடைக்கின்றன. வ.உ.சி., மண்டையம் சீனிவாசாச்சாரி ஆகியோரின் கட்டுரைகளும் பாவலர் பாரதியாரின் முன்னுரையும் பாரதியாரின் தம்பி சி.விசுவாத அய்யரின் ஒன்றிரண்டு கட்டுரைகளும் ஓரளவு பாரதியாரை அறிமுகம் செய்துள்ளன. பாரதியார் பற்றிய பாவேந்தர் நினைவுகளும் பயனுள்ளவை. ஆனால் இந்தக் குறிப்புக்களிலேயே மிகுதியான முரண்பாடுகள் காணப் படுகின்றன. பாரதியார் என்ற மனிதரை முழுமையாகக் காட்ட இச்செய்திகள் போதுமானவையாக இல்லை.

தோற்றப் பொலிவு

வ.ராவின் எழுத்து வழியாகப் பாரதியாரின் தோற்றத்தை நம் கண்முன் சிற்பி நிறுத்துகிறார்:

"பாரதியார் சுந்தரரூபன். மாநிறன். ஐந்தரை அடிக்கும் கொஞ்சம் அதிகமான உயரம். அவருடைய மூக்கு மிகவும் அழகான மூக்கு. முகத்துக்கு அளந்து அமைக்கப்பட்டது போலிருக்கும்..... பாரதியாரின் மூக்கு கடைசல் பிடித்தது போலிருக்கும். நீண்ட நாசி. அந்த நீளத்தில் அவலட்சணம் துளிக்கூட இருக்காது.

பாரதியாரின் கண்கள் செவ்வரி படர்ந்த செந்தாமரைக் கண்கள். இமைகளின் நடுவே, அக்கினிப் பந்துகள் ஜ்வலிப்பது

போலப் பிரகாசத்துடன் விளங்கும். அந்தக் கண்களை எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் தெவிட்டாது. பாரதியாருக்கு மீசை உண்டு. அது பார்க்க ரொம்ப நேர்த்தியாக இருக்கும். கண்ணைக் குத்தும் 'கெய்சர்' மீசை அல்ல. கத்திரிக்கோல் பட்ட தருக்கு மீசை அல்ல. தானாக வளர்ந்து பக்குவப்பட்டு அழகும் அட்டகாசமும் செய்யும் மீசை."

நடைமுறைச் சீர்திருத்தவாதி

பிறருக்குச் சொல்வதைத் தாமே ஏற்று நடக்கும் சீர்திருத்த வாதியாகப் பாரதியார் திகழ்ந்ததையும் வ.ராவின் வரிகளிலேயே சிற்பி எடுத்துக்காட்டுகின்றார்.

"எல்லோரும் போனபின், பாரதியார் தாம் போட்டுக் கொண்டிருந்த பூணூலை எடுத்துவிட்டார். என்ன ஓய்! என்று என்னைப் பார்த்துச் சிரித்தார்..... 'நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் எதற்கு? உமக்கும் எனக்கும் வேண்டாம். புதுப்பார்ப்பான் கனகலிங்கத்திற்குப் பூணூல் தேவை. எப்பொழுது நான் அவனுக்குப் பிரம்மோபதேசம் செய்தேனோ அப்பொழுதே எனக்குப் பூணூல் இருக்க வேண்டும். அது முடிந்துவிட்டது. இனிமேல் எனக்கு என்னத்துக்குப் பூணூல்?"

படைப்பாளிக்குப் பாரதி அறிவுரை

ஒவ்வொரு படைப்பாளிக்கும் தேவையான அறிவுரையைப் பாரதிதாசனுக்குப் பாரதியார் தந்ததையும் சிற்பி நம் நினைவிற்குக் கொண்டு வருகிறார்.

"நெசவிலே நாட்டு நெசவுனு விலைக்கு நெய்வதைக் காட்டிலும் புகழுக்கு நெய்வதே மேல். பணம் நல்லது. ஆனால் பணத்தைக் காட்டிலும் தொழிலருமை மேல். காசிப்பட்டுப் போலப் பட்டு நெய்ய வேண்டும். அல்லது உறுதியான, உழவனுக்கு வேண்டிய கச்சை வேஷ்டி போலே நெய்ய வேண்டும். 'மல்' நெசவு கூடாது. மஸ்லின் நீடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம் இத்தனையும் இருக்கவேண்டும். இதற்கு மேலே நல்ல வர்ணம் சேர்ந்தால் குற்றமில்லை, சேராமலிருந்தால் விசேஷம்." பாரதி வழித்தடத்தில் தம்மை ஆழமாகப் பதித்துக்

கொண்ட சிற்பியின் பாடல்களிலும் பாரதி குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம் இத்தனையும் இடம் பெற்றிருப்பதில் வியப்பு ஏதுமில்லை.

பாரதியின் அயல்மொழிப் புலமை

தமிழில் மட்டுமல்ல, ஆங்கிலத்திலும் ஆச்சரியப்படத்தக்க புலமை பாரதியாருக்கு இருந்தமையைத் தக்க ஆதாரத்துடன் சிற்பி எடுத்துக்காட்டியுள்ளார். தம் சொந்தக் கவிதைகள் சிலவற்றையும் ஆண்டாள், நம்மாழ்வார் கவிதைகளை ஆங்கிலத்தில் அவர் மொழி பெயர்த்திருக்கின்றார். பொலிக, பொலிக என்ற நம்மாழ்வார் பாசுரத்தில் 'கலியும் கெடும் கண்டு கொண்மின்' என்ற கூற்றைத் தம் மொழி பெயர்ப்பில் 'The iron age shall change' என்று அற்புதமாகத் தந்திருக்கின்றார். இந்தப் பாசுரத்திற்கு 'Hymn of the golden age' என்று பாரதி தலைப்பிட்டிருக்கிறார். இந்தப் பாசுரமே 'கிருதயுகம்' என்ற பாரதியாரின் புதிய கோட்பாட்டிற்கு வழிவகுத்திருக்கிறது எனலாம்.

"வீழ்க கலியின் வலியெல்லாம்
கிருத யுகம் தான் மேவுகவே"

என்று பாரதியாரை முழக்கமிட வைத்தது நம்மாழ்வார் பாசுரமே. பாரதியாரின் ஆங்கில எழுத்துக்களைத் தொகுத்து மறு பதிப்பு வெளியிட வேண்டிய அவசியத்தையும் சிற்பி வலியுறுத்துகின்றார்.

விடுதலை விடிவெள்ளி

ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல வந்த மாமணியாகப் பெருங்கவி பாரதியைச் சிற்பி கருதுகிறார். பாரதி அவர் கருத்துப்படி விடுதலை வெள்ளி; இலக்கியப் பேராசான்; அரசியல் தெளிவும் சமுதாயக் கூர்நோக்கும் பொருளியல் பார்வையும் சங்கமித்த மேதையாவார்; உணர்ச்சிப் பிரளயத்திலும் நெய்யுந்தறியின் நெருங்கிய நூல்போல் அறிவியலும் தத்துவமும் இழைத்துக் கொடுத்த எழுத்துச் சிகரமாவார். மனித வாழ்க்கையே அவரது இலக்கியக் களமாகும். பாரதியின் கவிதை வரி ஒவ்வொன்றும் ஓர் அனுபவப் பொறி; போதையூட்டாமல் புதுமையூட்டும் அவர் எழுத்துக்கள் மனிதநேச மகரந்த மலர்கள்; கால விளிம்புகளைச் சிறகில் அடக்கும் வியப்புக்கள், வித்தகங்கள்,

இருபதாம் நூற்றாண்டின் இளம்பருவத்தில் கருவாகி, உருவாகி எதிர்வரும் நூற்றாண்டுகள் பெருமைப்பட்டுக் கொள்ளும் மேதாவிலாசச் சாதனை மணிகள்; சரித்திரக் கனிகள்.

இலக்கியப் பேராறு

1882-1921 வரையிலான இக்குறுகிய வாழ்நாளில் அடிமைப் பட்டிருந்த நாடு, மொழி, குமுகாயச் சூழலில் வேதனைகளில் விறகாக்கி வெளிச்சத்தை வணங்கச் செய்தவர் பெருங்கவி பாரதி யாவார். கவிதை, சிறுகதை, காவியம், கட்டுரை, இசைப்பாடல், புதினம், மொழிபெயர்ப்பு என இலக்கியத் துறைகளெல்லாம் தொட்டுத் தழுவி இதழ்கள் பல கண்டு ஆவேச அலைபாய்ந்து பெருகியது இந்த இலக்கியப் பேராறு. தமிழகத்தின் வரலாற்று விளைவும் பாரதக்கலை ஒழுக்கத்தில் வியப்புறு கொடையும் உலகச் சிந்தனைக் களஞ்சியத்தின் புதுவரவே பாரதி ஆவார் என்பதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர் சிந்தனைவளச் சிற்பியாவார். இங்ஙனம் பாரதியைத் தமக்கு ஒரு வகையில் ஆசானாகக் கருதி இன்றளவும் பாரதி நெறியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளாமல் பாரதியின் புகழ்ப் பண்ணை நாளும் இசைத்து மகிழும் கவிஞர் சிற்பி அனைவரின் போற்றுதலுக்கும் உரியவர் ஆவார்.

◈

புதுவை வாழ்வும் புண்மைச் சிறை வாழ்வும்

புதுவை செல்லவைத்த நெருக்கடிச் சூழல்

தம் உயிரினும் மேலாக நேசித்த தம் தாய்த்திரு மண்ணை விட்டு அருகில் உள்ள அயலகமான புதுவைக்குப் பாரதி குடிபெயர்ந்து செல்லவைத்த நெருக்கடிச் சூழலை நாம் நினைவு கூர்வோமாக. 1908 சூன் பதினான்காம் நாள் கேசரி இதழில் எழுதிய அரசுக்கு எதிரான கட்டுரையைக் காரணம் காட்டிப் பாரதியாரின் அரசியல் வழிகாட்டியான திலகர் கைது செய்யப்பட்டார். இதனிடையே தம் நெருங்கிய நட்புக்குரிய வ.உ.சி.யும் சிவாவும் சிறைத்தண்டனைக்கு ஆட்பட்டனர். அதே சூலை மாதத்தில் பாரதியின் ஆருயிர்த் தோழர் சுரேந்திரநாத் ஆர்யா கைதானார். ஆங்கில அரசின் கொடுங்கைகள் பாரதியாரை நெருங்கிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் மறைவாகக் கசிந்தன. இதன் முன்னறிவிப்பாக 'இந்தியா' இதழின் பொறுப்பாசிரியராக அறிவிக்கப்பட்டிருந்த எம்.சீனிவாசன் 1908 ஆகஸ்ட் 21ஆம் நாள் கைது செய்யப்பட்டார். 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஜி.சுப்பிரமணி அய்யரும் சிறையில் அடைக்கப்பட்டார்.

இச்சூழலில் நண்பர்கள் பாரதியாரைப் புதுவைக்குச் சென்று விடும்படி வற்புறுத்தினர். பாரதியார் இசையவில்லை. ஆனால் அன்புக்குரிய பலரும் அவர் எழுத்துத் தடைப்பட்டுவிடக்கூடாது என்று கவலைப்பட்டவர்களாய் மீண்டும் மீண்டும் வற்புறுத்தியதால் மனைவி செல்லம்மாவைக் கடையத்தில் விட்டு விட்டு 1908 செப்டம்பர் முதல்வாரத்தில் காவல் துறையின் கண்ணில் மண்ணைத்தூவி விட்டுப் பிரெஞ்சு ஆளுகையில் இருந்த புதுச்சேரிக்குப் பாரதி போய்ச் சேர்ந்தார்.

சிற்பி தாம் புதிதாகப் படைத்துள்ள 'பாரதி கைதி என் 253' என்ற நெடுங்கவிதை நூலிலும் பாரதி புதுவை செல்ல வேண்டிய நெருக்கடிச் சூழலைக் கீழ்வருமாறு தம் கவிதை வரிகளில் விளக்கி யுள்ளார்:

"கண்ணாய் என்னைக்
காத்த நண்பர்கள்
எழுத்துப் பணிதொடர
இனிய உபாயமாய்
பிரெஞ்சுப் புதுவைக்கு
எனை அனுப்பிவைத்தார்கள்

....

வெஞ்சிறைக்குள் சிக்கி
விடுதலைக்கு நாள் கடந்தால்
கவிஅழிவான் என்று
கவலைகொண்ட காரணத்தால்
வற்புறுத்தி அனுப்ப
வண்புதுவை நகரடைந்தேன்"

இதே நெருக்கடிச்சூழலைக் கவிஞர் வைரமுத்து தாம் பாடியுள்ள கவிராஜன் கதை என்னும் கவிதை நூலில் சற்று விரிவாகவே விளக்கம் செய்கிறார்:

"தோழர் சபை
பாரதியைச்
சூழ்ந்து கொண்டது
.....
நீ மறைந்துகொள்!
நீ மறைவது
எல்லோருக்கும் பிரகாசிக்க.
நீ ஒளிந்துகொள்!
நீ ஒளிவது
உண்மைகள்
ஒளியாதிருக்க.
புறப்படு!
புதுச்சேரி மண் - உன்னால்

புளகிக்கட்டும்
புதுச்சேரி
இந்தியாவில்
வெள்ளைநோய் விழாத
பிரதேசம்!
புதுவைத் தென்றல்
உனது
உடல் நலத்திற்கும்
ஒத்தடம் தரட்டும்!
தப்பித்தால்
பழிவருமோ என்று
பயப்படாதே!
நீ சிறைப்பட்டால்
சரித்திரம்
சாந்தி கொள்ளாது!
தோழர்களின் உரையில்
நியாயத்தின் அடர்த்தி
நிறைய இருந்தது.
பாரதியின்
கால்கள் சம்மதித்தன”

புதுவையில் தொடக்கத் தொல்லை வாழ்வு

பாரதி 1908 ஆம் ஆண்டு தொடங்கி 1918 ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டுகள் புதுவையில் வாழ்ந்தார். ஊர் புதிது; கையில் பசை அதிகமில்லை; அரசுப் பகைமையும் கூடவே இருக்கின்றது. இப்படி நிலையிருக்குமானால் பாரதியார் வாழ்வு பஞ்சுமெத்தை மேல் படுத்துறங்கும் வாழ்வாக இருக்க முடியுமா? தனித்துப் புதுச்சேரிக்கு வந்த பாரதியார் உரையாடலுக்குரிய நட்புக் கிடைக்காமல் திண்டாடிப்போனார். கடன் கொடுக்க வாய்ப்பில்லாத வர்கள் புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்ததால் அவர்களை யாருமே கவனிக்கமாட்டார்கள். நூறோடு நூற்றொன்று என்று சேர்த்துக் கொள்வார்கள். அதற்கு மேலே உள்ளத்தில் ஒன்றுமே பரபரப்பு இருக்காது.

பாரதியார் புதுச்சேரிக்குச் சென்றதும் அவரை மக்கள் சிறிது

சிறிதாகத் தெரிந்து கொள்ளவே, அவரை ஏற இறங்கப் பார்த்தார்கள். கடற்கரையில் அமைக்கப்பட்டிருக்கும் இருப்புப் பாலத்தில் பாரதியார் உட்காரப் போய், வேறு எவரேனும் உட்கார்ந்திருந்தால் அவர்கள் பலகையைக் காலிசெய்துவிட்டுச் சொல்லிக் கொள்ளாமலே அப்பால் நகர்ந்து போய் விடுவார்கள். இது மரியாதையால் அல்ல, அளவு மீறிய அச்சத்தால், இந்த வாழ்வு சிறையிலே தனிக்காவலில் இருப்பதைக் காட்டிலும் கேவலமானதாகும். பசிக்கிற ஒருவனுக்கு நாலா பக்கங்களிலும் பக்குவமான உணவு வகைகள் நிறைந்திருந்தாலும் உண்ண வழியில்லாமல் போனால் அவன் நிலைமை எப்படியிருக்கும்? இத்தனை மக்களுக்கும் முதலில் பாரதியாரை அனுபவிக்க முடியாமல் போனதைப் பற்றி என்ன சொல்வது? இவ்வவல நிலையைக் கவிஞர் வைரமுத்து,

"புதுவைக்குள் நகர்ந்து வரும்
புதுப்புனல் போல
பாரதியின் வருகை அங்கு
பரவியது.

ஆனாலும்
இதயத்திற்குள்
இதமில்லை.
மனித மந்தைகள்
அந்த
மேய்ப்பனைக் கண்டு
மிரண்டன.
கொதிக்கும் மன உலையை
இறக்கி வைக்க ஆளில்லை.
உள் மனசுக்குள்
உப்புக் கரித்தது.
வார்த்தை இருந்தும்
பேசாதிருந்தான்!
வாளிருந்தும் அவன்
வாளாதிருந்தான்"

என்னும் வரிகளில் எடுத்து மொழிந்துள்ளார்.

உற்றுழி நின்று உதவிய பண்பினர்

புதுச்சேரியில் வாழ்ந்தபோது யார் வீடு என்று பாரதி பார்ப்ப தில்லை; என்ன சாதி என்று விசாரிப்பதில்லை. திருமணத்திற்கோ வேறு எந்தச் சிறப்பு நிகழ்ச்சிக்கோ அவரைக் கூப்பிட்டால் உடனே அவர் போய்விடுவார். குமுகாயச் சிக்கல்கள் பற்றிப் புதுச்சேரியில் பல்லிடங்களில் அவர் பொழிவு செய்திருக்கிறார். பத்தாண்டுக் காலத்திற்குள் புதுச்சேரி மக்களின் முழுமையான அன்பினையும் அவர் பெற்றார்.

புதுச்சேரி வாழ்க்கையில் பாரதிக்கு உதவி செய்தவர்களில் முதன்மையானவர் குவளைக்கண்ணன் ஆவார்.

"பாரதிக்கு ஒருவன்
தோள்கொடுக்க வந்தான்.
ஆமாம்! - அவன்
எங்கிருந்தோ வந்தான்.

அவன்
பாரதி என்னும்
குயிலுக்கு ஆடைதந்த
பேகன்!
பார்தியின்
வேர்வையைத் துடைத்த
வெள்ளைத் துணி!
அவனே
குவளைக்கண்ணன் என்னும்
குழந்தை நெஞ்சன்"

என்று ஆதரவற்றுப் புதுச்சேரியில் திசை தெரியாமல் திகைத்து நின்ற பாரதிக்குக் குவளைக்கண்ணன் திசைகாட்டியால் நின்றமையைக் கவிஞர் வைரமுத்து விரிவாகவே விளக்கியுள்ளார். இதனையே கவிஞர் சிற்பியும்

"கண்ணன் என் சேவகன்
கவிதையில்
எங்கிருந்தோ வந்து

என்னை யாட்கொண்ட
குவளைக் கண்ணனே
கொலு வீற்றிருக்கிறான்”

என்ற வரிகளில் குறிப்பிட்டு மகிழ்கிறார்.

பாரதிக்குப் புதுவையில் பெரிதும் துணை நின்ற சுந்தரேச அய்யர் தொடர்பினைக் குவளைக்கண்ணன் வழியாகப் பாரதி பெற்றார்.

“புதுவையில்
அடைக்கலம் தந்த முதல் மனிதர்
ஆருயிர்த்தோழர் சுந்தரேசையர்”

என்ற வரிகளில் பாரதிக்கு உதவிநின்ற சுந்தரேச அய்யர் பற்றிச் சிறப்பாகவே சிற்பி குறிப்பிட்டுள்ளார். ‘வெல்லச்சுச் செட்டியார்’ என்று பாரதியால் செல்லமாக அழைத்த முத்தியாலுப்பேட்டை கிருட்டிணசாமிச் செட்டியார் பாரதியின் பக்தனாகவும் தோழனாகவும் இருந்தார். பொன்னு முருகேசன் பிள்ளையின் குடும்பத்தார் பாரதியாரைத் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று எண்ணி வந்தார்கள். பணிப்பெண் அம்மாக்கண்ணு பாரதியாரிடம் காட்டிய பக்தியையும் நேசத்தையும் வருணிக்க முடியாது.

பாரதி இலக்கியப் பொற்காலம்

பாரதியாரைப் பின்பற்றி அரவிந்தர், வ.வே.சு.அய்யர், சுப்பிரமணிய சிவா போன்ற புரட்சி வீரர்களும் புதுவையில் அடைக்கலம் புகுந்தனர். இவர்களின் கூட்டுறவுதான் பாரதியின் சிந்தனையில் புதிய மாற்றத்தைத் தோற்றுவித்தது. அவரது உள்ளம் ஆன்மீகத்தில் தோய்ந்திருந்தது. இக்காலப் பகுதியைப் பாரதி இலக்கியத்தின் பொற்காலம் என்றே குறிப்பிடலாம். பாரதி அறுபத்தாறு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, பகவத்கீதை மொழிபெயர்ப்பு, வேதமுனிவர்களின் கதை, பதஞ்சலி யோக சாத்திரம் ஆகிய அனைத்தும் புதுவை வாழ்வில் பூத்த பாரதியின் பாமலர்களாகும். நமது கருவூலங்கள் என்று கருதத்தகும் படியான அவரது கவிதைகளெல்லாம் அங்குத் தோன்றின. அரசியல் வாதியாகப் புதுவைக்கு வந்த பாரதி ஆன்மீகவாதியாக வளர்ச்சி

யுற்றார். அதுவரை கடன்காரர்களின் புகலிடமாக விளங்கிய புதுச்சேரியை அரசியல் புகலிடமாக மாற்றிய பெருமை சென்னை மக்களையே சேரும். இதை முதலில் நடத்திக்காட்டியவர் பாரதியாவார்.

தாய்க்கூடு நாடிய தமிழ்ப் பறவை

புதுவையில் வாழ்ந்த இறுதி மூன்றாண்டுகளில் தாங்க முடியாத வறுமையில் பாரதி சிக்கித் தவித்தார். வறுமையின் தாக்கம், காவலரின் கெடுபிடி ஆகியவை பாரதிக்கு மீண்டும் இந்தியா வரவேண்டும் எண்ணத்தைத் தூண்டின. அவருக்குப் புதுவை வாழ்க்கையில் சலிப்பு உண்டாகிவிட்டது. 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இருபதாம் நாள் பாரதி புதுவையை விட்டுப் புறப்பட்டார்.

"ஒற்றைக் காலில் நின்று
யார் தடுத்தும் கேளாமல்
புதுவையை விட்டுப்
புறப்பட்டு விட்டேன்"

என்னும் வரிகளின் வாயிலாகப் பாரதி புதுவையை விட்டுப் புறப்பட்ட நிகழ்வினைச் சிற்பி நமக்கு உணர்த்துகின்றார். இதனையே கவிஞரும் வைரமுத்துவும் சற்று விரிவாகவே விளக்கிக் காட்டியுள்ளார்:

"புதுவை என்னும்
தங்கச் சிறையிலின்னும்
தங்க விருப்பமில்லை.
பாதம்
தாய்மண்ணை மிதிக்கத்
தகித்தது.
மனசு
உள்ளூர்ச் சுகம் வேண்டி
உள்ளுக்குள் அழுதது.
புதுவைக் கூண்டுக்குள்
பத்து வருஷமிருந்த பறவை
தாய்க்கூடு தேடித்
தவித்தது.

கண்ணில் ஆயிரம்
கனவோடு
சிறை என்ன செய்யும் எனும்
தினவோடு
இந்திய எல்லைக்குள்
எட்டு வைத்தான்”

என்ற வரிகளில் கவிஞர் வைரமுத்து பாரதி புதுவையைவிட்டுப் புறப்படவேண்டிய சூழலை மிக விரிவாகவே குறிப்பிட்டுள்ளார்.

சிறைப்பட்ட கவிச்சிங்கம்

1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இருபதாம் தேதி பாரதி செல்லம்மாளுடனும் மைத்துனர் அப்பாத்துரையுடனும் வில்லியனூர்ப் பக்கம் குதிரை வண்டியில் பாண்டிச்சேரியை விட்டுப் பயணமானார். கடலூருக்கு இன்னும் ஆறுகல் தொலைவு இருக்கும் பொழுது ஒரு தலைமைக் காவலர் அவரைக் கைது செய்திருப்பதாகச் சொன்னார். பற்றாணை (வாரண்ட்) தம்மிடம் இல்லையென்றும் அவரைக் கைதுசெய்ய அது தேவையில்லை என்றும் தலைமைக் காவலர் சொன்னார். இந்நிகழ்வினை,

“வண்ண இறகுகள்
உச்சந்தலை வார்ப்பட்டைமேல்
மினுங்க மினுங்க
முன்னங் கால்களை
மாற்றி மாற்றி நிலத்தில் தட்டிப்
பொறுமை இழந்து நின்றது
வண்டியில் பூட்டிய குதிரை
என்னைப் போல ...
மைத்துனன் அப்பாதுரை
முதலில் ஏறி அமர
தொடர்ந்து செல்லம்மாள்
குந்தி உட்கார்ந்தாள்

குலுக்கலுடன் வண்டி நிற்க ...
இன்னும் ஆறுகல் இருக்குமே

கடலூருக்கு?
'யாரது வண்டியில்?'
- ஒரு சுவலனின் குரல்
பாரதி ..... கவிஞர்
சுப்ரமண்ய பாரதி .....
ஓட்டு ஸ்டேஷனுக்கு"

எனக் கவிஞர் சிற்பி தம் கவிதை வரிகளில் கவினுறக் காட்டியுள்ளார்.

துணைச் சிறைக் கூடத்தில் துணையற்ற பாரதி

பாரதியாரைத் திருப்பாதிரிப் புலியூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று காவல்துறை அறிக்கையுடன் கடலூர் துணைக் குற்றவியல் நடுவர் ஆர்.சக்கரவர்த்தி அய்யங்கார் முன்நிறுத்தினார்கள். பாரதியை நான்கு நாள்கள் கடலூர் துணைச் சிறைக்கூடத்தில் வைத்திருக்கும்படி நடுவர் உத்தரவிட்டார். கடலூர் வழக்கறிஞர்கள் சட்கோபாச்சாரியார், நடராச அய்யர் என்ற இருவரும் பாரதியைப் பிணைப் பொறுப்பில் (ஜாமீன்) விடவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். மாவட்டக் குற்றவியல் நடுவரிடம் அன்றே பாரதியார் அனுப்பப்படுவார் என்றும் தம்மிடம் பிணைப் பொறுப்பிற்குரிய மனுவினைக் கொடுப்பதில் பயனில்லை என்றும் குற்றவியல் துணை நடுவர் கூறினார்.

24.11.1918 ஞாயிற்றுக்கிழமைதான் சிதம்பரத்தில் முகாமிட்டிருந்த மாவட்டக் குற்றவியல் நடுவர் முன் பாரதி நிறுத்தப் பட்டார். வழக்கறிஞர்களும் பிணைப் பொறுப்பிற்குரிய மனுவினைத் தந்தார்கள். சென்னைச் சர்க்கார் உத்தரவுப்படியே பாரதியைக் கைது செய்திருப்பதாகவும் போர் தொடங்கிய சமயம் நடைமுறைக்கு வந்த 'இந்தியா பிரதேசச் சட்டத்தின் படியே' நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் அன்றே சென்னைச் சர்க்காருக்கு அறிக்கை அனுப்புவதாகவும் மாவட்டக் குற்றவியல் நடுவர் கூறினார்.

தலைமைச் சிறையில் தனிமைப் பாரதி

கடலூர் துணைச் சிறைக்கூடம் இருப்பதற்கு வசதியானது அல்ல என்றும் மாவட்டத் தலைமைச் சிறையிலாகிலும் அல்லது

வேறு எந்த இடத்திலாகிலும் பாரதியை வைத்திருப்பது தகும் என்றும் அண்மையில் காய்ச்சல் நோயினால் மிகவும் நலம் குன்றியிருக்கும் பாரதிக்கு இயன்ற வசதிகள் செய்து தரவேண்டும் என்றும் வழக்கறிஞர் நடுவரைக் கேட்டுக்கொண்டனர்.

அவ்விதமாகவே செய்வதாக வாக்களித்துக் கடலூர் மாவட்டத் தலைமைச் சிறைக் கண்காணிப்பாளருக்கு அஞ்சல் எழுதி அனுப்புவதாகவும் நடுவர் சொன்னார். அதன்பின் பாரதி கடலூர் மாவட்டத் தலைமைச் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டார். எனவே 1918 நவம்பர் 20 முதல் நான்கு நாள்கள் துணைச் சிறைக்கூடத்திலும் இருபத்தி நான்காம் தேதி முதல் கடலூர் மாவட்டத் தலைமைச் சிறையிலும் கைதி எண் 253 ஆகச் சிறையப்பட்டிருந்தார். சிறையில் அவர் இருந்த நாள்கள் இருபத்தைந்தாகும். இந்நாள்களின் பின்னணி நிகழ்வுகளின் அடிப்படையில்தான் 'பாரதி கைதி எண் 253' என்ற கவிதை நூலை நேரியதாகவும் சீரியதாகவும் புதுக்கவிதை வடிவத்தில் சிற்பி புனைந்துள்ளார்.

சிற்பி சிந்தனையில் சிறைப்பட்ட சீர்திருத்தக் கவி

முத்தாய்ப்பான முன்னுரை

நூலின் கவி நயத்தையும் கற்பனை வளத்தையும் நுவலத் தொடங்கும் முன் நூல் பற்றிய நூலாசிரியர் சிற்பியின் கருத்துக்களை நம் கவனத்திற்கொணர முனைவோம். பாரதியிடம் தோய்ந்த அனைத்துப் பாரதியர்களுக்கும் சிறப்பாக நினைவில் வாழும் சிதம்பர ரகுநாதனின் நினைவிற்கும் தம் நூலைப் படையலாக்கிக் கவிஞர் சிற்பி பரவசமுறுகிறார். பாரதி இந்நாட்டு மக்கள் அனைவரையும் 'மன்னர்' என அழைத்துள்ளதுபோல் பாரதிபால் பற்றுடையோர் அனைவரையும் 'பாரதியர்' என்று அழைத்துப் பெருமைப்படுத்தும் சிற்பிக்குச் சிறப்பாக அமைந்துள்ள பாரதித் தாக்கத்தை உணர்ந்து போற்றுவோமாக.

"இது பாரதியின் கதை. பாரதியின் கதையில் ஒரு பகுதி. ஒரு புதுமுறையில் சொல்லப்பட்ட கதை" என்ற தொடக்க வரிகளுடன் தம் புதிய நூலிற்குச் சிற்பி முன்னுரை வழங்கியுள்ளார். இந்தக் கவிதை நூல் சிறையிருந்த காலத்தில் பாரதி சிந்தித்த தன் வரலாற்று நிகழ்வுகளைப் புனைந்தும் நினைந்தும் எழுதப்பட்டுள்ளதாகச் சிற்பி குறிப்பிடுகின்றார். நிகழ்வுகளில் மிகுதியானவை வரலாற்று உண்மைகளே என மொழியும் சிற்பி அவற்றை இணைக்க ஆங்காங்கே கொஞ்சம் கற்பனைக் கணுக்களைப் பயன்படுத்தி உள்ளதாகவும் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக இந்நூலில் இடம் பெறும் 'வார்டர் மன்னாரு' ஒரு கற்பனைப் பாத்திரம் தான் என்று அவரே கூறுகிறார்.

இருபத்தைந்து நாள் சிறை வாழ்க்கையில் தம் பழைய வாழ்க்கையைப் பற்றிப் பாரதி நினைவு கூர்வதாகவும் தம் கொள்கைகளை அறிவிப்பதாகவும் கற்பனை செய்து இந்நூல் எழுதப் பட்டுள்ளது எனத் தம் கவிதை நூலில் கருக்கொண்ட மையப் பொருளைச் சிற்பி உணர்த்துகின்றார். அவரே குறிப்பிடுவதுபோல் பாரதி பற்றி இதுவரை படைக்கப்பட்ட நூல்களுள் இது புதுத்தன்மை வாயந்ததாகும்.

"தேச பக்தர்கள் இருந்த சிறைகளைப் புண்ணிய ஸ்தலங்கள் என்று பாரதி குறிப்பிட்டிருக்கிறார். இருபத்தைந்து நாள்கள் அவர் இருந்த சிறைச்சாலையைக் கண்டறிந்து புனித நினைவுச் சின்னமாக ஆக்குவதுதான் இந்நூலைப் படிப்பவர்கள் செய்ய வேண்டிய புண்ணியத் திருப்பணி" என்ற படிப்பாளிகள் பாரதிக்கு ஆற்ற வேண்டிய கைம்மாற்றினையும் சிற்பி சுட்டிக்காட்டுகின்றார்.

"நான் பாரதியன். எனக்கு அவனே குரு; அவன் எழுத்தே வேதம். வார்த்தை சட்டம், கவிதை சத்தியம். அந்தப் பரவச அன்பின் வெளிப்பாடு இந்நூல் என்று இந்நூல்" எழுந்துள்ள சூழலையும் நமக்கு அவர் அறிமுகப்படுத்துகிறார். முன்னுரையே முத்தாய்ப்பானால் பின்னுரை பற்றிப் பேசவும் ஒல்லுமோ?

உழுவலன்பரின் உயர் மதிப்பீடு

கல்வியியல் சார்ந்த மரபு வழிப் படைப்பாளரான கவிஞர் மீரா கவிதை, கட்டுரை, திறனாய்வு எனப் பல்வேறு தளங்களில் தம் உணர்வை அழுத்தமாகவே வெளிப்படுத்தியுள்ளார். பல்வேறு கால கட்டங்களில் கவிதை தன் மரபு நிலையிலும் உள்ளடக்க நிலையிலும் பெற்றுவரும் மாறுதல்கள் பற்றியும் அவர் தெளிவுற உணர்ந்தவர் ஆவார்.

"இன்றைய தமிழ்க்கவிதைக்கு இரண்டாயிரம் ஆண்டுக்காலப் பெருமையுண்டு; மரபு உண்டு. மரபைக் கண்டு தமிழ்க் கவிஞர்கள் மருள வேண்டாம்; மாறாகப் பழைய இலக்கியங்களைப் பயில வேண்டும். பழைய இலக்கியம் ஒவ்வொன்றும் புதுமை இலக்கியங்களின் ஊற்றிடம் என்று உணரவேண்டும். இந்த

உண்மையை மறவாது கவிஞர்கள் மரபில் காலூன்றி நின்று புதுக்கனியை எட்டிப் பறிக்கவேண்டும்" என்று மீரா கருதுகிறார்.

கவிஞர் சிற்பியைப் போல் தொடக்கத்தில் மரபுக் கவிஞராய் மலர்ந்து, பின்னாளில் புதுக்கவிஞராக வளர்ந்து, புதுக்கவிதை உலகத்திற்குத் தம் இறுதி மூச்சுவரை வளம்சேர்த்த மீராவைத் தம் உழுவலன்பராகவும் கெழுதகை நண்பராகவும் சிற்பி மதிக்கின்றார். கவிஞர் மீரா எழுத்தாளர்களைச் செதுக்கிய கலை வல்லுநர் என்பது சிற்பியின் கருத்தாகும். தம் காவியப் பயணத்தில் தமக்கு வழிகாட்டும் நட்சத்திரமாக மீராவைச் சிற்பி கருதுகிறார். அங்ஙனம் சிற்பியால் மிக உயர்வாக மதிக்கப்படுகின்ற, மரியாதைப்படுத்தப்படுகின்ற கவிஞர் மீரா இந்நூலிற்கு அணிந்துரை வழங்கியிருப்பது சாலப் பொருத்தமாகும்.

தம் உடல் நலிவையும் பொருட்படுத்தாது இந்நூலிற்குக் கவிஞர் மீரா புதுக்கவிதை வடிவிலேயே வழங்கியுள்ள அணிந்துரை நூல் பற்றிய மணியான மதிப்பீடாக அமைந்துள்ளது. இந்நூலிற்குச் சிற்பி வழங்கியுள்ள தலைப்பே கவிஞர் மீராவிற்குக் கனத்த மலைப்பினைத் தருகின்றதாம். இந்நூலைப் படித்துப் பார்க்கின்ற பொழுது மீராவிற்கு மெய்சிலிர்த்ததாம். அவர் விழிகளின் விளிம்பில் கண்ணீர் நிறைந்து நின்றதாம். அவர்க்கு மட்டுமா, நமக்கும்தான்.

"இது
சிற்பி எழுதிய கவிதையா?
இல்லை இல்லை .....
மகாகவி பாரதி
கூடுவிட்டுக் கூடுபாய்ந்து
சிற்பி உடலில் புகுந்து
உயிரில் கலந்து
இயற்றிய கவிதை இது"

என்ற கூற்று சிற்பியை மற்றுமொரு பாரதியாகவே கருதக் கவிஞர் மீராவைத் தூண்டியுள்ளது என உணர்கிறோம்.

வீர வியட்நாம் பெற்றெடுத்த தீரத்தலைவன் ஹோசிமின் எழுதிய சிறைக் குறிப்புக்களுக்கு இணையாகச் சிற்பி இதனை

எழுதியுள்ளார் என்பது மீராவின் அழுத்தமான கருத்தாகும். பாரதி பற்றி வெளிவந்துள்ள நூல்களையெல்லாம் படித்துக் கரைத்துக் குடித்தவர் சிற்பி என்பதால் இந்நூலைப் படைக்க முழுத்தகுதியும் நிறைபுலமையும் சிற்பிக்கு உண்டு என்பதை மீரா நமக்கு மறை முகமாக உணர்த்துகிறார்.

"பாரதி என் குரு
என்று
பறை சாற்றிய
மற்றும் ஒரு பாரதிதாசன்"

என்று மீரா சிற்பியைப் பாரதிதாசனாக்கி மகிழ்கிறார். எனவேதான் பெருங் கவி பாரதியின் மனத்தை ஊடுருவிப் பார்க்கக்கூடிய உயர் சிறப்பைச் சிற்பி பெற்றிருப்பதாக மீரா கருதுகிறார். நூலுள் காணப்படும் இன்றியமையாச் செய்திகளைப் பகுத்தும் வகுத்தும் தொகுத்தும் தந்துள்ள மீரா இந்நூலைப் படித்ததால் தமக்கு ஏற்பட்ட நல் விளைவையும் கீழ்வருமாறு சுட்டுகின்றார்:

"என் அனுபவம்
படித்து முடித்ததும்
நோயில் கிடக்கும் நான்
நூறுவயது வாழும்
பேறு பெற்றதாய் மகிழ்கிறேன்
நெஞ்சம் நெகிழ்கிறேன்
வரிந்து கட்டிக்கொண்டு
வருகிறேன் சாவே!
தெரிந்து கொண்டென்முன்
நிற்காதே நீயே என்று
நிமிர்ந்து கவிதை படைக்கிறேன்"

என்று காலனுக்குச் சவால்விட்ட பாரதியைப் போல் காலனுக்கு மீரா விடுத்துள்ள சவால் வரிகள் நம் நெஞ்சை உருக்குகின்றன. நம்மை அறியாமல் கண்கள் நீரை உகுக்கச் செய்கின்றன. காலனுக்குச் சவால் விட்ட பாரதி காலனுக்கே இரையானது போல் மீராவும் காலனுக்குச் சவால் விட்டாலும் அணிந்துரை தந்த சின்னாள்களிலேயே காலனுக்கு இரையானது கொடுமையிலும் கொடுமையாகும்.

சிற்பி படைத்த "மௌன மயக்கங்கள்" என்ற நூலைப்படித்த மீரா தம்மைச் சிற்பி வென்றுவிட்டதாகப் புகழாரம் சூட்டினார். இந்நூலைப் படித்தபின் சிற்பி வென்றுகொண்டே இருக்கிறார். எப்போதும் இருப்பார் என்று குறிப்பிட்டுச் சிற்பியின் புகழ் மகுடத்தில் ஒரு புதிய மாணிக்கத்தைப் பதித்துள்ளார். சிற்பி நூல் பற்றிய மீராவின் பாராட்டுரை வெறும் புகழ்ச்சி அல்ல; உண்மை என்பதை இந்நூலைப் படிக்கும் எந்தப் படிப்பாளியும் ஒப்புக் கொள்வார்.

அமைப்பும் உள்ளடக்கமும்

விடுதலைப் போராட்ட வீரர்கள் வதிந்த சிறைச்சாலைகளைப் 'பாரத நாட்டின் புதிய ஸ்தலங்கள்' என்ற தலைப்பில் 'இந்தியா' இதழில் பாரதி வெளியிட்டுள்ள செய்தியை முகப்பில் தந்து தம் நூலைச் சிற்பி தொடங்கியுள்ளார். நூல் முழுவதும் புதுக்கவிதையில் ஆக்கப்பட்டுள்ளது. ஆம்! இந்நூல் பாரதி பற்றிப் புதுக்கவிதை வந்த விதையாகும். பாடலின் ஒவ்வொரு தலைப்பும் தமிழன் நாட்காட்டி எனப் பெயர் பெற்றுள்ளது. 1918 நவம்பர் 20இல் தொடங்கும் இந்நாட்காட்டி 1918 திசம்பர் 14ஐ முடிவாகப் பெற்றுள்ளது. ஆக, இருபத்தைந்து நாள் சிறை வாழ்க்கையில் பாரதிக்குச் சிந்தனையில் தோன்றியிருக்கக் கூடியதாகச் சிற்பி கற்பித்துப் பாடியுள்ள நிகழ்வுகள் பாரதியாரை, அவர் கொள்கைகளை, வாழ்க்கைச் செயற்பாடுகளை, சிந்தனை வளத்தைச் சிறப்பாக உணர்ந்து பாராட்டுவதற்கு நமக்கு உற்ற துணை புரிகின்றன.

கருத்துப் பகுப்பாய்வு

இந்நூலுள் பரவி, விரவிக் கிடக்கும் உணர்ச்சி ததும்பிய, உண்மையைத் தழுவிய, உருக்கத்தை உருவாக்கிக் கண்ணீர் உகுப்பினை நிகழ்த்தச் செய்யும் செய்திகளின் சிறப்புக் கூறுகளை வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள், துடிப்பான கொள்கைப் பிடிப்பு, குன்றா மிடுக்கு, சாதி மறுக்கும் சால்பு, நன்றி மறவா நல்லிதயம், தூய்மை கெடா நேயத்தொடர்பு, மொழி, இன ஈடுபாடும் இலக்கியத் தாகமும், இறவாத இதழ்ப்பணி, தத்துவத்தாக்கம், பாடல்களை உருவாக்கிய உயர்சூழல், சீர்குலைக்கும் சிறை வாழ்வு, உணர்த்தும் முறை என்னும் தலைப்புக்களில் நம் ஆய்வுச் சிந்தனையைப் பதிக்கலாம்.

வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள்

பாரதி சிறைப்பட்டிருந்த காலத்தில் அவர் வாழ்க்கையில் சிறைப்படுவதற்குமுன் நிகழ்ந்த இதமான, பதமான, இன்றியமையாத நிகழ்வுகளைப் பாரதியார் தம் நினைவில் அசை போட்டுப் பார்ப்பதாகக் கவிஞர் சிற்பி கற்பனை செய்து காட்டியிருப்பது நம் கவனத்தையும் கருத்தையும் ஒருசேர ஈர்க்கும் ஆற்றல் பெற்றது.

தாயை இழந்து தவித்த பாரதி

இளசையைப் பிறப்பிடமாகக் கொண்டு வளர்ந்து வந்த பாரதி தம் இளம் வயதில் தாயையும் தந்தையையும் இழந்து தவித்ததைச் சிற்பி தம் கவிதை வரிகளில் நெஞ்சுருகுமாறு வெளிப்படுத்தி உள்ளார்:

"ஐந்து வயதில் என்னை
அழவிட்டுப் பிரிந்த
அன்னை நினைவு வரும்
'அம்மா, அம்மா' என்று அலறும் மனம்
பாயும் நீர், படித்துறை,
பசுமை மணக்கும் கோதுமை வயல்கள்,
சிறகு முளைத்த
பறவைத் தோழமைகள்
பெரியமடி அசைக்கும் பசுக்கள்,
அந்தி விண்மீன்கள்,
ஆலவட்ட முழுநிலவு,
விசுவநாதன், தேவி
விசாலாட்சித் தாயார்
எல்லாமே அம்மா
என் அம்மா எனத் தோன்றும்"

எனக் காணும் பொருள்கள் அனைத்திலும் தாய் பற்றிய சிந்தனையைப் பாரதி படரவிட்டிருப்பதாகக் கவிஞர் சிற்பி குறிப்பிட்டுள்ளமை தாயை இழந்து பாரதி தவித்த தவிப்பை நம் சிந்தனையில் நிறுத்துகின்றது.

"என்னை ஈன்றெனக் கைந்து பிராயத்தில்
ஏங்க விட்டுவிண் ணெய்திய தாய்"

எனத் தம் தாய் இழப்பைச் சுட்டும் பாரதி வரிகள் அவர் தாயாரின் நினைவில் தவிப்பதை நமக்கு உணர்த்துகின்றன.

"அம்மா என்று அவன்
எழுத்துக்கூட்டிப் படித்தபோது
எதிரில் அவள் இல்லை
தனிமை அவனைத்
தத்தெடுத்தது!

என்ற கவிஞர் வைரமுத்துவின் வரிகளும் பாரதியாரின் தாய் இழப்பைச் சோகமாக்கிக் காட்டியுள்ளன.

தந்தை இழப்புத் தந்த தாளாத் துன்பம்

"பதினான்கு வயதில் திருமணம்
பதினைந்து வயதில் அப்பா மரணம்
வறுமை மிதித்த சிறுமைச் சேற்றில்
புதைந்து போனது
புகழ்பெற்ற சின்னசாமி அய்யர் குடும்பம்"

எனப் பாரதியின் தந்தையின் இழப்பையும் அதைவிடக் கொடுமையான வறுமையினையும் அதனால் எழும் சிறுமை யினையும் பாரதி சந்திக்க நேர்ந்த அவலத்தை இவ்வரிகளில் சிற்பி அழுத்தமாகப் பதித்துள்ளார்.

"தந்தை போயினன் பாழ்மிடி சூழ்ந்தது;
தரணி மீதினில் அஞ்சலென் பாரிலர்"

என்று தம் தந்தை இழப்பையும் குடும்ப வறுமைச் சூழலையும் பாரதியே வேதனையுடன் வெளிப்படுத்தியுள்ளார். பாரதியின் தந்தை இயற்கை எய்திய சூழலையும் அதனால் பாரதிக்கு ஏற்பட்ட பாதிப்பையும் கவிஞர் வைரமுத்துவும் கீழ்வருமாறு காட்டியுள்ளார்:

"எந்திரங்களின் சப்தம்
நின்றுபோனது

அவர்
இருதய சப்தமும்
நின்றுபோனது
கண்ணீர் மட்டும்
வடித்து விட்டுக்
கலைந்துவிட்ட சுற்றம் ...
துக்கம் மட்டும்
விசாரித்து விட்டு
விலகிக் கொண்ட ஜமீன் ...
எல்லோரும்
அழுததற்காய்
தானுமழுத மனைவி
பாரதி தனியனானான்.”

சின்ன வயதுச் சிங்காரக் காதல்

பாரதியின் முறையான திருமணமே அவரது மிக இளவயதில் நிகழ்ந்தது. இருப்பினும் திருமணத்திற்கு முன்னரே சின்னஞ்சிறு சிங்காரி ஒருத்தியிடம் இவர் கொண்ட காதல் உறவைச் சிற்பி சிறப்பாகவே எடுத்துக் காட்டியுள்ளார். பாரதிக்குப் பத்து வயதிருக்கும் பொழுது முத்திருளப்பப் புலவர் வீட்டிற்கு ஏதோ வேலையாய்ப் பாரதி போனபோது பெண் என்னும் மின்னல் ஒன்று அவரைக் குதறியாகக் கவிஞர் சிற்பி குறிப்பிடுகின்றார். அந்தச் சிங்காரச் சின்னமயில் பாரதியைப் பார்த்துச் சிரிக்கவே, பாரதி தன்வசம் இழந்தார். தேரை வடம்தான் இழுத்துச் செல்லும். ஆனால் பாரதி காதல் வாழ்வில் அவர் காதலித்த பெண் என்னும் தேர் வடமாகிய தம்மை இழுத்து, இழுத்து அலைக்கழித்த விந்தையைக் கவிஞர் சிற்பி விளக்கிக் காட்டுகிறார். அந்தப் பெண் நல்லாளின் கன்னக் குழியிலிருந்து தப்பமுடியாமல் சுப்பையா பாரதியாகிப் பாட்டுப் புனைந்தாராம்.

“அதற்குமுன்
புலவனாய் இருந்தேன்
அந்தக் கணம் எனைக்
கவிஞனாக்கியது”.

என்ற சிற்பி வரிகளில் காதல் நிகழ்த்தும் பாரதியின் கவிதை விந்தை

வெளியாகியுள்ளது. ஆனால் அக்காதல் கவிஞர் குறிப்பிட்டுள்ளது போல் மின்னலாகவே தோன்றி, வெட்டென ஒளிபரப்பிச் சட்டென மறைந்துவிட்டது.

"சின்ன வயதில் எனைச்
சின்னா பின்னப்படுத்திய மோகினி
என்ன ஆனாளோ?
எங்கு இருக்கிறாளோ?"

என்று பெற்றோரை இழந்ததுடன் இளமைக் காதலையும் பாரதி இழந்ததை மிக உருக்கமாகக் கவிஞர் சிற்பி உணர்த்துகின்றார்.

"ஒன்ப தாயபி ராயத்த ளென்விழிக்
கோது காதைச் சகுந்தலை யொத்தனள்
என்ப தார்க்கும் வியப்பினை நல்குமால்
என்செய் கேன்? பழியென்மிசை யுண்டு கொல்!
அன்பெ னும்பெரு வெள்ளம் இழுக்குமேல்
அதனை யாவர் பிழைத்திட வல்லரே?
முன்பு மாமுனி வோர்தமை வென்றவில்
முன்ன ரேழைக் குழந்தையென் செய்வனே?"

என்று பாரதியும் தம்மைப் பற்றியிருந்த இளமைக் காதல் உணர்வைத் தம் இனிய கவிதை வரிகளில் எடுத்து மொழிந்துள்ளார்.

மங்கலம் நிறை மணவினை

"பெரியவர்கள் செய்த
பிள்ளை விளையாட்டில்
ஏழு வயதில் கைப்பிடித்தாள்
செல்லம்மாள்"

என்ற வரிகளில் பாரதிக்கு நிகழ்ந்த இளம் வயதுத் திருமணத்தைக் கவிஞர் சிற்பி சுட்டுகின்றார். பாரதி வாழ்க்கையில் துணைவியாகப் பங்கேற்ற செல்லம்மா எந்த அளவுச் சிறுவயதினளாய் வாய்க்கப் பெற்றிருந்தாள் என்பதை,

"என் கண்மணி செல்லம்மாவுக்கு
கண்ணா மூச்சி ஆடும் வயது

பாவம்.... பச்சைக் குருத்து
முச்சி வைத்து முறம்வைத்து
விளையாடும் பருவம்”

என்ற வரிகளின் வாயிலாகக் கவிஞர் சிற்பி புலப்படுத்தியுள்ளார். இந்த இளம் வயதுத் திருமணம் பற்றிக் கவிஞர் வைரமுத்து,

“அந்தக் கல்யாணம்
ஏழும் பதினாலும்
இணைந்த வைபவம்!
அவன் சூடும்
மாலையைச் சுமக்கும்
வயதுகூட
மணமகளுக்கில்லை”

என்ற வரிகளின் வழி நமக்கு எடுத்து இயம்புகிறார்.

செல்லத் திருமணம் பற்றிச் செல்லம்மாள்

தமக்கு நிகழ்ந்த திருமணச் சிறப்பைச் செல்லம்மா பாரதி பின்வருமாறு விவரித்துள்ளார்:

“கிருஷ்ண சிவன் (பாரதியின் அத்தை கணவர்) அவர்களின் நண்பர்களான ராமநாதபுரம் ராஜாவிடமிருந்தும், சேத்தூர், தலைவன் கோட்டை ஜமீன்தார்களிடமிருந்தும் பட்டும் பட்டாவளியுமாகச் சால்வை, மோதிரங்கள், முத்துமாலைகள் முதலிய வெகுமதிகள் ஏராளமாய் வந்தன. தங்க நாதஸ்வர வித்வான் ரத்தினசாமியிடம் ராமநாதபுரம் ராஜா அவர்கள் அனுப்பியிருந்தார். அந்தச் சமயம் கியாதி அடைந்திருந்த திருநெல்வேலி அம்மணி பரதநாட்டியம். பாரதியாருக்குப் பால்ய விவாகத்தில் அவ்வளவாகப் பிரியம் இல்லாவிடினும் ரசிக்கத் தகுந்த கேளிக்கைகள் மிகுதியாய் இருந்தமையால் விவாகத்தில் உற்சாகமாகவே காணப்பட்டார்.

விவாகமானவுடன் கணவன் மனைவி பேசுவது வழக்கமாக இல்லாத அந்தக் காலத்திலேயே, பாரதி தமது புதிய கருத்துக்களைக் காட்டத் தொடங்கினார். எல்லோர்க்கும் எதிரில்,

“தேடக்கிடையாத சொன்னமே - உயிர்ச்
சித்திரமே! மட அன்னமே! .....

கட்டியணைத் தொருமுத்தமே - தந்தால்
கைதொழுவேன் உனை நித்தமே”

என்று காதல் பாட்டுக்கள் பாரதி பாடினாராம். நான் நாணத்தால் உடம்புகுன்றி எல்லாரையும் போல் சாதாரணமான ஒரு கணவன் கிடைக்காமல், நமக்கென்று இப்படி ஓர் கணவர் வந்து வாய்க்க வேண்டும் என்று எண்ணித் துன்புறுவேன். கிராமத்தில் பழகிய, ஒன்றும் தெரியாத ஏழு வயசுச் சிறுமிக்குக் கவிஞர்களின் காதல் ரச அனுபவம் எப்படிப் புரியும்?” என்று செல்லம்மாள் தம் இளமைத் திருமண அனுபவத்தை அறிவிக்கின்றாள்.

மாற்றம் நிகழ்த்திய மாசிலாக் காசி

பெற்றோரை இழந்த பாரதி 1898இல் காசியில் தம் அத்தை இல்லத்திற்குத் தம் பாட்டியுடன் சென்று 1903ஆம் ஆண்டுத் தொடக்கம் வரை அங்கேயே தங்கி இருந்தார். அந்த ஐந்தாண்டுக் காலம் பாரதியாரின் உணர்விலும் அறிவிலும் ஆழமும் விசாலமும் அணிசேரக் காரணமாயின. இந்தியும் வடமொழியும் அவருக்குச் சரளமாயின. வறட்சிப் பகுதியிலிருந்து வானாறான கங்கைக் கரைக்குச் சென்றதால் புதிய மொழிவளம், பிறமொழி இலக்கிய அறிமுகம், பண்பாட்டுப் பெருமிதம், நடை உடை பாவனைகளில் புதிய நாகரிகம் இவற்றுடன் தேசிய உணர்வும் அவருடன் கை குலுக்கிக்கொண்டன. தலைப்பாகை, மீசையும் என்ற புறவடிவு மாறுதல்களைப் போலவே செழுமையான மாறுதல்கள் அவர் அகத்திலும் ஏற்பட்டன. சாதி, சமயம், மொழி என்ற தடுப்புச் சுவர்கள் கங்கை வெள்ளத்தில் இடிந்து விழுந்தன.

“கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்

என்ற பாடல் வரிகளைப் பிற்காலத்தில் புனையும் தேசிய ஒருமைப் பாட்டின் விதை கவி பாரதியின் மனத்தில் அன்றே விழுந்தது.

அகப்புற மாற்றம் நிகழ்த்திய அருமைக் காசி

புறத்திலும் அகத்திலும் பாரதியிடம் மிகப்பெரிய மாறுதல்களை விதைத்த பாரதியின் காசி வாழ்க்கை பற்றிக் கவிஞர்

சிற்பி விரிவாகவே பேசியுள்ளார். சாகும் வயதில் போகிற காசிக்கு வாழும் வயதில் பாரதி புறப்பட்டுச் சென்றதாகச் சிற்பி நயம் பொருந்த நவில்கிறார். பகீரதன் கங்கையைக் கொண்டு வந்தது மெய்யோ, பொய்யோ. ஆனால் கங்கைக்குப் பாரதியைக் கொண்டு வந்தவள் அவர் பாட்டி பாகீரதி எனப் பாரதி குறிப்பிட்டதாகச் சிற்பி குறிப்பிட்டுள்ளார்.

புதுமை விளைவித்த புனிதக் காசி

"கங்கை மடிமீது
கழித்த ஐந்தாண்டுகள்
என்னைப் புதுப்பித்தன
நடை, உடை,
நம்பிக்கை, நாகரிகம்
அனைத்தும் புதிதானது"

என்ற வரிகளில் காசி நகர் பாரதியிடம் நிகழ்த்திய புதுமையைச் சிற்பி புகழ்கிறார். காசி வாழ்க்கை பாரதியின் இதயத்தையும் பார்வையையும் விசாலமாக்கிய செய்தியை,

"விசுவ நாதனும்
விசாலாட்சியும்
குடிகொண்ட காசி
என்னையும்
விசால மாக்கியது"

என்னும் வரிகளில் சிற்பி தெளிவாக்கியுள்ளார். இதே செய்தியைக் கவிஞர் வைரமுத்து,

"இங்குதான்
சம்பிரதாயச் சிறையின்
கம்பிகளை - அவன்
கழற்றத் தொடங்கினான்
.....
பாரதி புதிதாய்ப்
பரிணமித்தான்"

என்னும் வரிகளில் புலப்படுத்தியுள்ளார்.

கூடிவாழ்ந்த கோடி இன்பம்

காசி சென்ற பாரதி ஐந்தாண்டுகள் கழித்தபின் தாம் பிறந்த மண்ணாகிய எட்டயபுரத்திற்கு மீண்டும் வந்தார். அங்ஙனம் அவர் அங்கு வந்ததற்குரிய கரணியத்தைச்

"செல்லம்மாவைப் பிரிந்த
காதல் துயரத்தால்
காசி கசந்தது
இளசை இனித்தது"

என்று காதற் சுவை ததும்பக் கவிஞர் சிற்பி மொழிந்துள்ளார். எட்டயபுரம் பெருமாள் கோயில் தெருவில் அருமை மனைவியான செல்லம்மாவுடன் உரிமை இல்லறம் ஓராண்டுக்காலம் நிகழ்ந்ததைச் சிற்பி சுட்டத் தவறவில்லை.

"தாமிர வருணி அவள்,
தழுவும் அகத்தியன் நான்
'வட்டங்கள் இட்டுக்
குளம் அகலாத
மணிப்பெரும் தெப்பம்' போல
குளிரக் குளிரக் காதல்
குளத்திலே முக்குளித்தோம்"

என்ற வரிகளில் பாரதி தம் மனைவியுடன் கூடி வாழ்ந்ததால் பெற்ற கோடி இன்பத்தைச் சிற்பி கோடிட்டுக் காட்டியுள்ளார்.

விடுதலறியா விருப்பம்

பாரதி இளசையை விட்டுச் செந்தமிழ் மதுரை சேர இருப்பதை அறிந்த செல்லம்மாவின் நெஞ்சக் கலக்கத்தினைத்

"தங்கம் சுமந்த
வைரப் பேழைபோல்
அங்கமெல்லாம் தாய்மை
சுமந்திருந்த செல்லம்மாள்
கொஞ்சம் கலங்கினாள்"

என்று சோகம் நிறைந்த வரிகளில் சிற்பி எடுத்துக் காட்டியுள்ளார். செல்லம்மாவை விட்டுப் பிரிய முடியாத, விடுதலறியா விருப்பத்தை அவளிடம் பாரதி கொண்டிருந்ததையும் நம்மால் உணர முடிகின்றது.

ஊடியவரை உணராமை

ஊடல் நிகழாத காதல் வாழ்க்கை சுவைப்பதில்லை. ஆனால் ஊடலும் அளவு கடந்தால் காதல் வாழ்வு கலகத்தைச் சந்திக்க நேரும். புதுவையில் இருந்தபொழுது அப்படியொரு கலகத்தைப் பாரதியும் சந்திக்க நேர்ந்ததைச்,

"சின்ன நகைகூடத்
தன்னிடம் இல்லையென்று
செல்லம்மா ஒரு நாள்
சிணுங்கினாள்
சிறு பொறி நெருப்பாக
சண்டை வளர்ந்தது
வேகமாய் வீட்டை விட்டு
வெளியே வந்தேன்"

என்ற வரிகளில் சிற்பி எடுத்துக் காட்டியுள்ளார்.

சொல்ல முடியாத மகிழ்ச்சி

"மதியம் நான் அழைத்து வந்த
சேரிச் சகோதரர்கள்
வயிறார உண்டு
வாழ்த்தி விட்டுச் சென்றார்கள்
'சொல்ல முடியாத மகிழ்ச்சி
செல்லம்மா' என்றேன்
'எனக்கும் தான்' என்றாள்
வியந்து நான் நிற்கையில்
விளக்கினாள் செல்லம்மாள்
'சமைக்கத் தான் சொன்னீர்கள்
பரிமாறச் சொல்ல வில்லையே
அதனால் மகிழ்ச்சி' என்றாள்"

என்ற வரிகளில் பாரதியிடம் ஆழமாக வேரூன்றியிருந்த சாதி

மறுப்புக் கொள்கை அவர் மனைவியாகிய செல்லம்மாவிடம் இடம் பெறாத அவளது மனப்பக்குவமின்மையைக் கவிஞர் சிற்பி புலப்படுத்தியுள்ளார்.

காக்கை குருவி எங்கள் சாதி

புதுவையில் வாழ்ந்த போது ஒரு நாள் செல்லம்மாள் முற்றம் நிறைய அரிசி மணிகளை வைத்துவிட்டு உள்ளே போனாள். கிணற்றடியில் துண்டுபட்ட அருவிகள் போல் நின்று, நின்று சிட்டுக் குருவிகள் குரல் எழுப்பின. குரல் கேட்ட பாரதி அரிசியை அள்ளி முற்றத்தில் வீசியதும் 'சரிகமபதநி' சுரங்களை மாற்றி, மாற்றிப் போட்டாற்போல் குருவிகள் உற்சாகக்'கூச்சலிட்டன. பாரதியின் சின்னப் பாப்பாவும் குருவிகளைப் போல் உற்சாகக் கூச்சலிட்டாள். சரசரவென்று வந்த செல்லம்மா ஒரு கணம் இக்காட்சியைக் கண்டு அப்பாவும் பெண்ணும் அடிக்கும் கூத்தில் அயர்ந்து போனாள். மறுகணம் தலையில் அடித்துக் கொண்டு செல்லம்மாள் தேம்பியவாறே புலம்பியதை,

"அய்யோ..... குழந்தைக்குச்
சாப்பாட்டுக்கு என்ன செய்வேன்?
அன்னிக்கு அடிச்ச புயல்
என்னையும் சிவனே
கொண்டு போயிருக்கக் கூடாதா?
அரிசிக் கடன்
பருப்புக் கடன்
உப்புக் கடன்
பால் கடன்
பகவானே....
இப்படி ஒரு கடன்கார
வாழ்க்கையா எனக்கு?"

என்ற வரிகளில் சிற்பி விரிவாகவே காட்டியுள்ளார்.

விசும்பின செல்லம்மாவின் அருகில் மெல்லச் சென்று அவள் வடித்த கண்ணீரைத் துடைத்து,

"அடி அசடே.....
வேணுமானா இன்னைக்கு

எல்லாரையும் பட்டினி
போட்டு விடு”

என்று பாரதி செல்லம்மாவைத் தேற்றியதையும் சிற்பி தெளிவாக்கி யுள்ளார். இருப்பினும் செல்லம்மாளின் சிடுசிடுப்பு ஓய்ந்த பாடில்லை. எந்த வெயிலைப் பாரதி பாராட்டி மகிழ்ந்தாரோ அந்த வெயிலைச் சாப்பிடுமாறு பாரதியிடம் மனவருத்தத்துடன் செல்லம்மாள் கூறினாள். பாப்பாவைக் கூப்பிட்டு வெற்றிலைத் தட்டினை எடுத்துவரப் பாரதி சொன்னார். வந்ததும் அவளிடம்,

“நீயும் நானும் இன்று
லங்கணம் - பரம ஔஷதம்”

என்று நகைச்சுவை ததும்பப் பாரதி குறிப்பிட்டதைச் சிற்பி குறிப்பிடத் தவறவில்லை. பாரதி நகைச்சுவையுடன் குறிப்பிட்டதைக் கேட்டு அவர் சிரித்ததோடல்லாமல் பாப்பாவும் அவருடன் சேர்ந்து சிரித்தாளாம். குருவிகளும் அரிசியைக் கொத்திக் குதூகலித்துக் கொண்டிருந்தனவாம். வீட்டினுள்ளே மட்டும் பாத்திரங்கள் உருளும் ஓசை கேட்டுக் கொண்டேயிருந்ததாம்.

இது ஒரு தனிப்பட்ட ஒருநாள் நிகழ்ச்சி அல்ல. பிற்காலத்தில் புதுவையை விட்டுச் சென்னைத் திருவல்லிக்கேணியில் குடியிருந்த போதும் இப்படியே சமையலுக்கான அரிசியைக் காக்கை, குருவி, அணிலுக்கும் அளித்துவிடுவாராம் பாரதி. ‘காக்கை குருவி எங்கள் சாதி’ என்ற இந்தச் சிந்தனை பாரதியின் விரிந்த சிந்தனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். ஆனால் இந்த விரிந்த நோக்கைக் கவிதை அளவில் கொட்டி முழக்குவது எளிது. வாழ்வில், செயலில் செய்து காட்டினால் எவ்வளவு தொல்லை இருக்கும்? பாரதி இதைச் செய்யும் துணிவு பெற்றிருந்தமையை ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளது கவனத்திற்கொள்ளத் தக்கதாகும். பாரதியைப் போல் அவரைத் திறமையாகத் திறனாய்வு செய்துள்ள கவிஞர் சிற்பியும் விரிந்த உள்ளம் பெற்றிருக்கின்றமையை,

“வடக்கும் தெற்கும்
மேற்கும் கிழக்கும்
பேதமாய்ப் பாரோம்।
யாம்

திசைகளை விழுங்கும்
திகம்பரக் கவிகள்!” (கவி முகம்)

என்ற சிற்பியின் வரிகள் வெட்டவெளிச்சமாக்குகின்றன. தாம் ஏற்ற மணவினை நிகழ்வினையும் நிகழ்த்திய இல்லற வாழ்வினையும் பாரதி நினைத்துப் பார்த்து மகிழ்வதாகவும் நெகிழ்வதாகவும் தம் கவிதை வரிகளில் காட்டியுள்ள சிற்பியின் திறன் போற்றத் தகுந்ததாகும்.

தமிழ் வளர்த்த மதுரையில் தணல் கவிஞர்

எட்டயபுரத்தை விட்டு விலகிய பாரதி செந்தமிழ் மதுரை சேர்ந்து அங்குள்ள சேதுபதிப் பள்ளியின் தமிழ் ஆசிரியர் ஆன செய்தியினையும் சிற்பி குறிப்பிட்டுள்ளார்.

“பள்ளிக் கூடத்தில்
பாடம் நடத்தவோ
பாரதி பிறந்தான்?
அந்த அத்தியாயம்
மூன்றே மாதத்தில்
முற்றுப் பெற்றது”

என்று மூன்று திங்களில் முற்றுப்பெற்ற பாரதியின் ஆசிரியப்பணி நிகழ்வினை அருமையாகச் சிற்பி அறிவித்துள்ளார்.

“ஆசிரியப் பணி
காயத்தை மேலும்
கசிய வைத்தது.
ஊர் கெட்டதைப்பற்றி
உரைக்க வந்தவனுக்கு
இலக்கணத்தில்
ஈறுகெட்டதைப் பற்றி
என்ன கவலை?
எண்ணி நூறு நாள்
உத்தியோகத்தை மீண்டும்
உதறி விட்டான்!

என்ற வரிகளில் சேதுபதிப் பள்ளியில் நம் செந்தமிழ்ப் புலவர் பாரதி

ஆற்றிய குறுகிய காலத் தமிழாசிரியப் பணியைக் கவிஞர் வைரமுத்துவும் காட்டி மகிழ்கிறார்.

புதுவை வாழ்வின் தொடக்கமும் முடிவும்

மதுரை வாழ்விற்குப் பின் சென்னை திரும்பி இதழ்ப்பணி நிகழ்த்தி வந்த பாரதியாருக்கு எழுந்த அரசு நெருக்கடி மிகுதியானதால் நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று அரவமில்லாமல் வந்தடைந்த பாரதியின் புதுச்சேரி வாழ்வை நிறைவாகத் தம் கவிதையில் வடித்துக் காட்டியுள்ள சிற்பி நூலின் நிறைவாக 1918 திசம்பர் 14இல் சிறைப்பட்ட பாரதியின் விடுதலையை,

> "பிற்பகல் இரண்டு மணிக்கு
> கைதி எண் 253
> சுப்பிரமணிய பாரதியை
> விடுதலை செய்தார் நீதிபதி"

என்ற வரிகளில் குறிப்பிட்டுத் தம் நூலையும் நிறைவு செய்துள்ளார். இங்ஙனம் பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளைச் சிற்பி வகையாகத் தொகுத்துக் காட்டியுள்ளமை நம் நெஞ்சைத் தொடுகின்றது.

துடிப்பான கொள்கைப் பிடிப்பு

பைந்தமிழ்த் தேர்ப்பாகனான பாரதியின் கொள்கைப் பிடிப்பைச் சிற்பியின் கவிதை வரிகளில் காணப்புகுமுன் கொள்கை பற்றிப் பாரதிப் புலவரின் கருத்தோட்டத்தைச் சிந்திப்பது சிறப்புடையதாகும்.

"ஒரு கொள்கை என்பது என்ன? இதை நாம் ஆராய்ந்து அறிவது அவசியம். ஏனெனில் கொள்கையின்றிக் காரியங்களைச் செய்து திரியும் சில மனிதர்கள் இருக்கிறார்கள். பகுத்தறியும் சக்தியில்லாத எவனுக்கும் கொள்கை என்ற ஒன்று இருக்காது. ஒரு கொள்கையுடையவன் பகுத்தறியும் சக்தி உடையவனாகவே இருக்க வேண்டும். ஒரு கொள்கையாவது பகுத்தறிவின் துணையாகும். செய்யத்தக்கது இது, செய்யத்தகாதது இது என்று ஒருவன் அறிந்து

முன்பின் யோசித்துத் தன் வாழ்நாளில் நீடித்துச்செய்ய மனத்தால் ஒப்புக்கொள்ளும் கருமத்தொடரின் அஸ்திவாரமாகிய ஒரு கருத்தாகும்" என்று கொள்கைக்கு விளக்கம் தந்துள்ள பாரதி கொள்கையின்மையின் கீழ்மை பற்றியும் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஆனால் கொள்கைகளை அவரோடு மனத்தால் கிரகித்தல் வேறு. அவற்றின்படி நடத்தல் வேறு. யாதேனும் ஒரு கொள்கையை ஒருவன் அங்கீகரித்துக் கொண்டு அதன்படி நடக்க முடியாதவனாய் இருந்தால் அவன் ஜீவப்பிரேதம் தான். இதிலிருந்து கொள்கையற்ற மானிடப்பதர்கள், கொள்கையிருந்தும் அதன்படி நடக்க இயலாத மானிடப் பதர்கள் என்ற இரண்டு சாதிகள் உண்டு என்று ஏற்படுகிறது. இவ்விரண்டு வகுப்பாரால் ஜனசமூகத்திற்கு அவ்வளவு கெடுதல் நேரிடாது. அவர்கள் இருக்கும் வரை சோற்றிற்குக் கேடாகவும் நிலத்திற்குப் பளுவாகவும் இருந்து போவார்கள்."

ஆனால் பாரதியோ கொள்கைகளைத் தெளிவாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவற்றைக் காப்பதில் இறுதி மூச்சு வரையிலும் உறுதியாக இருந்தார் என்பது அனைவரும் அறிந்த செய்தியாகும்.

"படைக்கின்ற கரத்தில் வைரங்கள் பூட்டிப்
பார்த்திடும் ஆசை இல்லை;
துடிக்கிற மனிதன் வடிக்கும் கண்ணீரைத்
துடைத்திடத்தான் ஆசை!" (நான்)

என்ற வரிகளில் தம் கொள்கைப் பிடிப்பினை வெளிப்படுத்தியுள்ள கவிஞர் சிற்பி பாரதியின் கொள்கைப் பிடிப்பினையும் தம் நூலுள் ஆங்காங்கே சுட்டிக் காட்டியுள்ளார்.

விரிந்த சிந்தையும் அறிவியல் சிந்தனையும்

"காசிக்கும் போகிறவர்கள்
விட்டுவிட வேண்டுமாம்
சிலவற்றை!
நானும் விட்டுவிட்டேன்
குடுமியை

குறுகிய பார்வையை
குருட்டு நம்பிக்கைகளை!”

என்ற வரிகளின் வாயிலாகப் பாரதி போற்றிய விரிந்த சிந்தையையும் தம் கொள்கையாக அவர் காத்துவந்த அறிவியல் சிந்தனையையும் கவிஞர் சிற்பி விளக்கியுள்ளார்.

தன்மானம் போற்றும் தகுதியான உள்ளம்

“வரும்படி நிறுத்தப்பட்டது
மானமின்றி அரண்மனைக்குப்
போகும்படி நேராது
இனியென்று பூரித்தேன்”

என்று பாரதி தம் காலமெல்லாம் கைவிடாது பாதுகாத்து வந்த தன்மானத்தைத் தக்கவாறு சிற்பி புலப்படுத்தியுள்ளார்.

இணங்கிப் போகும் இயல்பு

“உணவுப் பழக்கம்
அவரவர் உரிமை
உலையில் கொதிப்பது
அவரவர் சுவை
இணங்கிப் போவதே
என்’மனப் பாங்கு”

என்று யாருடனும் பிணங்காது இணங்கிச் செல்லும் பாரதியின் நல்லியல்பைச் சிற்பி குறிப்பிட்டுள்ளார்.

வன்முறை காணா நன்முறை

விடுதலை பெறுவதில் வன்முறை நாட்டம் பாரதியின் கொள்கையாகாது என்பதையும் காந்தியச் சிந்தனையையே, தம் வாழ்க்கைக் கொள்கையாக அவர் கொண்டிருந்தார் என்பதனையும்

“வெடிகுண்டு வீச்சையும்
தனிமனிதக் கொலையையும்
போராட்ட முறை என்றால்

எந்த அரசும் அதை
ஏற்க முடியாது!
'அந்தப் போராட்ட முறையை
நானும் ஆதரிக்கவில்லை,
அன்றும் - இன்றும்
அறப்போர் முறைகள்
ஆயிரம் உண்டு'
காந்திவழி அவற்றில் ஒன்று"

என்ற வரிகளின் வாயிலாகச் சிற்பி உறுதிப்படுத்தியுள்ளார்.

கள்ளமற்ற வெள்ளை உள்ளம்

"நான் திறந்த மனிதன்
மறைப்பதற்கு என்ன இருக்கிறது?"

என்ற வரிகளின் துணைக்கொண்டு பாரதியைக் காந்தியுடன் ஒப்பிட்டுக் காட்டியிருப்பதுடன் பாரதியின் வெள்ளை உள்ளத்தினையும் சிற்பி வெளிப்படுத்தியுள்ளார்.

தவறைத் தட்டிக்கேட்கும் அஞ்சாமை

தவறு செய்பவர் யாராக இருந்தாலும் அத்தவறை வேக உணர்வுடன் தட்டிக் கேட்கும் பாரதியின் யார்க்கும் அஞ்சாத துணிச்சல் கொள்கையை,

"என் இயல்பே அது
யாரென்று பார்க்காமல்
எவரென்று கருதாமல்
பட்டது நெஞ்சில் என்றால்
வெட்டும் வாள் ஆகும்
என் நாக்கு"

என்று துணிச்சலாகவே சிற்பி எடுத்துக் காட்டியுள்ளார்.

அரவிந்தரிடம் முரண்பாடு

பாரதியின் வழிகாட்டியாயினும் சரி, அவரால் வணங்கத்

தக்கவராயினும் சரி, அவர்களிடம் தாம் கருதும் கருத்துக்கு முரண்பாடு எழுமாயின் அதனை உடனே மறுக்கும் மன எழுச்சியும் அவரது கொள்கையாக அமைந்திருந்தது. தம் காலில் விழுந்து பிறர் வணங்கிப் பெறும் சிறப்பைப் பாரதியும் பெறலாம் என்று தாம் போற்றும் அரவிந்தர் சொன்னபோது,

"பிம்பம் நொறுங்கிப்
பொடிப் பொடியானது
நம்பிக்கை எங்கோ
விரிசல் கண்டது"

எனப் பாரதியார் கூறியதாகச் சிற்பி கூறியுள்ள வரிகள் அரவிந்தரிடம் பாரதி கொண்ட கருத்து முரண்பாட்டினை உணர்த்துகின்றன.

காந்தியிடம் கருத்து முரண்பாடு

"தெய்விக மனிதனாய்
நான் தேர்ந்து வைத்திருந்த
காந்தியிடமும்
கருத்து வேறுபட்டேன்"

என்ற சிற்பியின் வரிகள் விதவைத் திருமணம் குறித்துக் காந்தியிடம் கொண்ட கருத்து மாறுபாட்டை எடுத்துக்காட்டுகின்றன.

ஞானியிடமும் கொண்ட நியாய முரண்பாடு

"விவேகானந்தப் பரமஞானி
என் குருவின் குரு
எனவே என் பரமகுரு
....
ஆயினும்
முரண்பாடு அவரிடம்
முகிழ்த்த போது
என் எழுத்தில் கோபம்
கொப்பளித்தது"

என்ற சிற்பியின் வரிகள் விதவை மறுமணம் குறித்து விவேகானந்தரிடம் பாரதி கொண்ட முரண்பாட்டை அறிவிக்கின்றன.

குறைவுபடாக் குறிக்கோள்

வெற்றுச் சடங்குகளும் சம்பிரதாயங்களும் பாரதியைக் கட்டுப்படுத்தியதில்லை என்ற அவரது கொள்கைச் சிறப்பை,

"எதையும்
பிம்பமாக்குவதில் (Idol)
எனக்குச் சம்மதமில்லை
பிம்பங்கள் விக்கிரங்களாகும்
சடங்கும் சம்பிரதாயங்களும்
அதன் சாபல்யத்தைக் குலைக்கும்
நான் லட்சிய மனிதன் (Ideal)

என்னும் சிற்பியின் வரிகள் சிறப்பாகப் பேசுகின்றன.

கறைபடாப் பொதுப்பணி

பொதுப்பணி நிகழ்த்துவதிலும் பொதுப்பணம் பாதுகாப்பதிலும் மிகத் தூய்மையராகப் பாரதி விளங்கினார். புதுவையில் வீசிய புயலின் கேடுகளிலிருந்து மக்களைக் காப்பதற்காகப் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட பொதுப்பணத்தைக் கையாள்வதில் மாசுமறுவற்றவராகப் பாரதி நடந்து கொண்டார். கறைபடாத கைகளுக்கு அவர் சொந்தக்காரர் என்பதை,

"வரவு - செலவுக் கணக்கு
மித்திரனில் வெளியிடப்பட்டது
பொதுப் பணம் அன்றோ?
தெய்வக் குற்றம்
எய்திட லாகாது அல்லவா?"

என்ற வரிகளில் புலப்படுத்திச் சிற்பி பெருமிதம் கொள்கிறார்.

விதிமுறை தவறா விழுமம்

"சட்டம் தவறென்றால்
சாகும்வரை எதிர்ப்பேன்

வட்டமாய்ச் சட்டத்தில் ஓட்டை போட்டு
மலிவாய்த் தப்பும்
எலி அல்ல நான்”

என்ற சிற்பியின் வரிகள் எதையும் விதிமுறை தவறாது செய்வதைத் தம் உயிர்க் கொள்கையாகப் பாரதி போற்றி வந்தமையை அறிவிக்கின்றன.

கடினத்திலும் கைவிடாக் கொள்கைப் பிடிப்பு

“விசுவாசம் மிக்க
குடி மகனாக இருப்பதும்
விடுதலைக் கவிஞனாக இருப்பதும்
கடினம் தான்
முரண்பாடு தான்”

என்ற சிற்பியின் சீர்மிகு வரிகள் பாரதிப் புலவனின் கொள்கைப் பிடிப்பையும் அதனால் துன்பம் விளையினும் அதனைக் கைவிடாத மன உறுதியினையும் விளக்கத் துணைபுரிகின்றன.

சமயப் பொதுமைச் சால்பு

பாரதி போற்றிய சமயப் பொதுமைக் கொள்கையை,

“வேதங்களை எண்ணும்போதே
வேற்றுச் சமயங்களையும்
கருதிப் பார்ப்பது என் வழக்கம்
....
‘அல்லா, அல்லா’
என்று பாடுவதிலும்
‘ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்’
என இசைப்பதிலும்
சமத்துவம் கண்டவன் நான்
‘பட்டினத்துப் பிள்ளையார்’
பற்றியும் உரையாற்றி இருக்கிறேன்
இசுலாம் மார்க்கத்தின் மகிமை
குறித்தும் பேசி இருக்கிறேன்”

என்னும் வரிகளில் சிற்பி சற்று விரிவாகவே விளக்கம் செய்துள்ளார்.

தோல்விக்கும் தோய்ந்த பாராட்டு

வென்றவனை விட்டுவிட்டுத் தோற்றவனைப் போற்றுவது கூடப் பாரதி வாழ்வில் பெருங்கொள்கையாய் இடம் பெற்றிருந்தது என்பதை,

"மதத்தில் மட்டுமா
சமத்துவம் கண்டேன்?
வென்றவனை விட்டுத்
தோற்றவனைப் போற்றுவதிலும் கூட!
.....
தோற்றது பெல்ஜியம்
'அறத்தினால் வீழ்ந்து விட்டாய்'
என்று பெல்ஜியத்தை
வாழ்த்தியது என் பேனா
.....
'இடிபட்ட சுவர்போல'
ஜார் ஆட்சி வீழ்ந்தபோது
சமதர்மத்தின் போர்க் கப்பல்
என்பதால்
ருஷ்யப் புரட்சியை
'யுகப் புரட்சி' என்றேன்"

என்ற வரிகளில் சிற்பி தக்க ஆதாரங்களுடன் சிறப்பாகவே எடுத்துக் காட்டியுள்ளார்.

உயர்வான உலகப் பார்வை

"மண்ணுலகத்து மானுடன் தன்னைக்
கட்டிய தளையெலாம் சிதறுக"

என்ற வரிகளில் காணப்படும் பாரதியின் பரந்துபட்ட உலகப் பார்வையைச் சிற்பி சிறப்பாகவே உணர்த்தியுள்ளார். குறுகிய பார்வைக் குறைபாடுகள் அவர் வாழ்வில் என்றும் குறுக்கிட்ட தில்லை என்பதையும் சிற்பி மறைமுகமாக நம் மனத்தில் பதிய வைக்கிறார்.

குன்றா மிடுக்கு

பாரதி கொள்கைப் பிடிப்பில் எந்த அளவிற்கு வலுவாய்க் காணப்பட்டாரோ, அந்த அளவிற்கு அவரது மிடுக்கும் இறுதி வரை குன்றாமலும் குறையாமலும் இருந்து வந்தது.

"விழித்த விழியிலே வெறியும்
எடுத்த தொனியிலே மிடுக்கும்
நடக்கும் நடையிலே துடிப்பும் - ஏற்றித்
திறந்தவிட்ட நெற்களஞ் சியமாய்ப்
பிறந்து வந்தனன் பாரதிப் புலவன்!" (ஊற்று)

என்று 'ஊற்று' என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள சிற்பியின் வரிகள் பாரதியின் மிடுக்குப்பற்றி மிடுக்காகவே பேசுகின்றன.

பாரதியாரின் மிடுக்குப் பற்றியும் வீர உணர்வு பற்றியும் பி.ஸ்ரீ. கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"தேசிய உணர்ச்சிக்கு அடுத்தபடியாக எங்களைக் கவர்ந்தது பாரதியாரின் வீர உணர்ச்சி. சாப்பிடும் பொழுது வீரமாகவே சாப்பிடுகிறாராம் என்றார் ஒருவர். காரசாரமாகச் சாப்பிடலாம், வீரமாகச் சாப்பிடுவது எப்படி என்றார் மற்றொருவர். பாரதியாரின் நடை, உடை, சாப்பாடு முதலான பழக்கவழக்கங்கள் எல்லாம் சாதாரணமாக இருப்பதில்லையே என்று திருநெல்வேலி நண்பர்கள் அந்நாளில் பேசிக் கொள்பவர்களும் உண்டு; இகழ்பவர்களும் உண்டு.

மார்பை முன்னே தள்ளிக்கொண்டு சிப்பாய் மாதிரி நடக்கிறாரே! ஐயராக இருந்தும் நாமம் போட்டுக் கொள்வானேன்? தென்னாட்டவராக இருந்தும் வடநாட்டவர்போல் வேடம் போட்டுக் கொள்வானேன்! என்றெல்லாம் பாரதியார் காதில் விழும் படியாகவும் பேசியவர்கள் உண்டு. பாரதியாரோ மரியாதை செய்யாமல் மிகுதியும் பதில் சொல்லாமலே போய்விடுவார்.

தம்மை ஒரு விநோதப் பிராணியைப் பார்ப்பவர் போல் யாராவது பார்ப்பதாகத் தோன்றினால் இவர் கண்களில் பணிவின் அதாவது எதிர்ப்புச் சக்தி விளங்கும். தோற்றத்தில் மிடுக்கும்

மிகுதியாகும். வற்றி உலர்ந்த உடம்புதான். வாடிப்போன கன்னம்தான். எனினும் மார்பு முன்னே தள்ளி, தலை நிமிர்ந்து ஒரு வெற்றி வீரனைப் போல நடந்து உள்ளே வந்தார், தாடியும் மீசையுமாக! ஆனால் எந்தச் சிப்பாய்க்குத் தான் இவ்வளவு காம்பீரியம் இருக்க முடியும்?"

காவல் துறையில் காட்டிய மிடுக்கு

பாரதி புதுவையை விட்டுத் தாயகம் திரும்பும்பொழுது கடலூரை நெருங்கும் முன் அவர் கைது செய்யப்படுகின்றபொழுது,

"யாரது வண்டியில்?"

என்று காவலன் ஒருவன் வினா எழுப்பப்

"பாரதி ..... கவிஞர்
சுப்ரமண்ய பாரதி ....."

என்று பாரதியிடமிருந்து காவல்துறைக்கு மிடுக்காக வந்த பதிலைச் சிற்பி தொட்டுக் காட்டுகின்றார்.

கன்றிச் சிவந்த மிடுக்கு

"அண்ணா இருக்கார்
ஒண்ணுத்துக்கும்
பயப்படாதீங்கோ?"

என்று பாரதியைச் சிறையில் பார்க்க வந்த நடராச அய்யர் இயம்ப,

"அது கேட்டு
கன்றிச் சிவந்தது
என் மூக்கு நுனி
மென்றன உதட்டைப் பற்கள்"

என்று சிற்பி குறிப்பிடுவதன் வாயிலாகப் பாரதியின் மிடுக்குணர்வு வெளிப்படுகின்றது.

"பயம் அவரைப் பார்த்து
பயப்படும் ....."

என்று வழக்கறிஞர் நடராச அய்யருடன் வந்திருந்த வழக்கறிஞர் சடகோபாச்சாரியைச் சிற்பி பேசவைத்திருப்பதன் வழியாகவும் பாரதியின் மிடுக்குணர்வு பற்றி அறிகின்றோம்.

இமையாமல் பார்த்த மிடுக்கு

பாரதியைப் பற்றி இருந்த குன்றாத மிடுக்கினை,

"விண்ணப்பம் கேட்ட
வெள்ளை நீதிபதி
ஏறிட்டு நோக்கினார் என்னை
இமையாமல் பார்த்தன
என் கண்களும்"

என்ற சிற்பியின் கவிதை வரிகள் கவினுறக் காட்டுகின்றன.

எட்டா உயரம் தொட்ட மிடுக்கு

"கட்டற்றுத் திரியும்
காற்று நான்
கரை புரண்டு திமிறி விழும்
காட்டாறு நான்
எட்டாத உயரத்தில்
எல்லைகளைத் தோற்கடித்த
வான விரிவு நான்"

என்று காற்றுடனும் ஆற்றுடனும் வானத்துடனும் பாரதியை ஒப்பிட்டுக் காட்டி அவரது ஒப்புமை இல்லாத மிடுக்கினைச் சிற்பி நம் உணர்விற்கு விருந்தாக்குகின்றார்.

புலமை மிடுக்கு

"இளமைத் தறுக்கும்
மண்டி வளர்ந்திருக்கும்
இலக்கியச் செருக்கும்
மன்னர்க் கிறுக்குகளை
ஏற்க மறுத்தன"

என்று மன்னரைக்கூட மதிக்காத அளவுக்கு மதிநலம் பாரதியிடம் சிறந்திருந்தது எனச் சிற்பி காட்டியுள்ளார்.

பள்ளி கடந்த பரந்த மிடுக்கு

செந்தமிழ் மதுரையில் சேதுபதிப் பள்ளியில் ஆசிரியராகப் பாரதி ஆற்றிய பணி மிகக்குறுகிய காலத்திலேயே முற்றுப் பெற்றது. அதனைக் குறிப்பிடவந்த சிற்பி,

> "பள்ளிக் கூடத்தில்
> பாடம் நடத்தவோ
> அந்த அத்தியாயம்
> மூன்றே மாதத்தில்
> முற்றுப் பெற்றது"

என்ற வரிகளில் ஆசிரியப் பணியையே மறுக்கின்ற பாரதியின் மேலான மிடுக்கினைச் சிற்பி தொனிக்கச் செய்துள்ளார்.

உடை நடை உருவாக்கிய மிடுக்கு

> "தலைப்பாகை கட்டிக் கொண்டேன்
> கோட் அணிந்தேன்
> சிப்பாய்போல் நடந்தேன்
> அறைக்குள் ஒரு
> சிறுத்தைபோல் நுழைந்தேன்"

என்று பாரதியின் மிடுக்கான உடையினையும் நடையினையும் சிற்பி வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

அதட்டும் அதிகார மிடுக்கு

சிறையினுள் இருந்த பாரதிக்கு அவரைப் பார்க்க வந்த அம்மாக் கண்ணுவின் மைந்தன் வேணு என்பான் ஆசையோடு தின்பண்டலப் பொட்டலத்தை நீட்ட, வார்டன் ஒருவனின் ஒரு தடி குறுக்கே நீளத்

> " 'தடியைக் கீழே போடு
> உனக்கு மேலே

ஒருத்தன் இருக்கிறான்
அவங்கிட்ட கேளு
அனுமதி உண்டா
இல்லையாண்ணு
ஓடு, ஓடு
அங்கே போய்க் கேளு'
என் அதட்டலில்
அடங்கிப் போனான் அவன்"

என்று பாரதியைப் பேசவைத்துள்ள சிற்பி அவரது மிடுக்கான குரலையும் எடுப்பான பேச்சையும் நமக்குக் காட்சியாக்கியுள்ளார்.

வறுமையிலும் வன்மை குன்றா மிடுக்கு

வறுமை நிலையிலும் பாரதியின் மிடுக்கு குன்றியதில்லை; குன்றிலிட்ட சுடராய் ஒளி வீசியது.

"நான்கு பன்றிகள் அல்லது நான்கு நாய்கள் கூடி யாதேனும் ஓர் ஊரில் அல்லது ஓர் காட்டில் கிடைக்கக்கூடிய ஆகாரம் முழுவதும் தஸ்தாவேஜிப்படி சொந்தம் என்றும், தாங்களாக இஷ்டப்பட்டுத் தாங்கள் திட்டம் செய்து கொடுக்கும் அளவுப்படிதான் மற்றெல்லாம் பன்றிகளும் அல்லது எல்லா நாய்களும் உண்ணக்கூடும் என்றும் விதிபோடுகிற பழக்கம் (மனிதருக்குள் இருப்பது போல்) அந்த ஜந்துக்களிடையே காணப்படுவதில்லை. சிறுதொகையான மனிதருக்கு அடுத்தவேளை ஆகாரம் கிடைப்பது நிச்சயம் ஆகவும், பெருந்தகையோருக்கு அடுத்தவேளை சோறு நிச்சயம் இல்லாமலும் ஏற்பட்டிருக்கும் சம்பிரதாயம் மனிதரைத் தவிர வேறெந்த ஜாதி ஜீவர்களிடத்திலும் கிடையாது" என்பது பாரதியை அவரது வாழ்நாள் முழுமையும் வாட்டி வதைத்த வறுமை பற்றிய பாரதியின் அருள் வாக்காம்.

"எனைத் துயர்ப்படுத்த வந்தெய்தியது உலகில்
கொடியென யாவுளும் கொடியதாம் மிடிமை"

எனத் தம்மை உருக்குலைத்த வறுமை பற்றிப் பாரதி பாடுகிறார். தம்முடைய 'சித்தக்கடல்' என்ற நினைவுக் குறிப்புக்களில் வாட்டிய, வருத்திய வறுமை குறித்துப் பாரதியே நொந்து எழுதியவற்றைச் சிற்பி,

"வைத்தியனுக்கு கொடுக்கப்
பணமில்லை. குழப்பம், குழப்பம்
தீராத குழப்பம். எத்தனை நாட்கள்
எத்தனை மாதங்கள், எத்தனை
வருடங்கள் .....
செட்டி பணத்துக்கு எத்தனை நாள்
பொய் சொல்லுகிறது. பொய் வாயிதா,
பொய் வாயிதா, பொய் வாயிதா .....
சீச்சீ ....."

என்றும் கவிதை வரிகளில் தந்துள்ளார். அந்தப் பகுதியை நிறைவு செய்த நிலையில் சிற்பி குறிப்பிட்டுள்ள,

"பராசக்தி, உன்னை நான் நம்புவதை
முற்றிலும் விட்டு நிச்சயமாக நாஸ்
திகனாகி விடுவேன் - நீ என்னை
அற்பத் தொல்லைகளுக்கு உட்படுத்திக்
கொண்டே இருந்தால் ....."

என்னும் வரிகளின் வழியாக அன்னை பராசக்தியைக்கூட அதட்டிக் கேட்கும் பாரதியின் மிடுக்காற்றலை எடுத்து மொழிந்துள்ளார்.

"பாரதியின் தேகத்தைத்
தின்று விட்டது வறுமை!
....
சூரியன் சுருங்கிவிட்டாலும்
அது
வீசும் வெளிச்சத்தில்
அழுக்கில்லை.
பாதைகளைப் பயமுறுத்தும்
அதே நடை!
காற்றைக் கிழிக்கும்
அதே கைவீச்சு!
முன் மார்பு பிதுக்கி
முறைக்கும் பார்வை
கவிஞனுக்கு இவை

கூடப் பிறந்த
குணங்கள்|"

என்று வறுமையிலும் தம் மிடுக்கான தோற்றத்தை வெளிப்படுத்தத் தவறாத பாரதி பற்றிக் கவிஞர் வைரமுத்து குறிப்பிட்டிருப்பதைப் போல் கவிஞர் சிற்பி,

"ஆணிக்கால் தொல்லையை
சிப்பாய் நடையால்
தெரியாமல் மறைத்திருப்பேன்
பூஞ்சை உடம்பை
கோட் அணிந்து
மறைத்திருப்பேன்
மனதைக் குடையும்
ரகசியத் துயரையெல்லாம்
வேட்டுச் சிரிப்பாலும்
மேதக்க படைப்பாலும்
போட்டு மறைத்திருப்பேன்"

என்ற வரிகளில் வாட்டிய வறுமைக்கு அவரது மிடுக்கினை வறுமைப்படுத்தும் வலிமை இல்லாததை நம் பார்வைக்குக் கொணர்ந்துள்ளார். இங்ஙனம் பாரதியின் கொள்கைப் பிடிப்பினையும் குறைவிலா மிடுக்கினையும் பிடிப்புடனும் மிடுக்குடனும் சிற்பி தம் பாடல்களில் கொலுவிருக்கச் செய்கின்றனர்.

சாதி மறுக்கும் சால்பு

இந்தியக் குமுகாய அமைப்பு மக்களிடையே சாதியை முதன்மையான இடத்தைப் பெறச் செய்துள்ளது. சாதிப் பிரிவினையின் கரணியமாக மனித வாழ்வில் புதிய சிக்கல்கள் தோன்றியுள்ளன. சமயத்தின் பிரிவாகக் கிளைவிட்ட சாதிப் பாகு பாடுகள் என்று குமுகாயத்தில் மிக ஆழமாக வேரூன்றி வளர்ந்துள்ளன. இதன் கரணியமாக மக்கள் சமயத்தால், இனத்தால், சாதியால் பிரிந்தே வாழ்கின்றனர். சாதி இந்திய மக்களின் இயல்பாகவே மாற்றம் பெற்றுவிட்டது. இனம், சமயம், பொருளாதாரம், அரசியல் என்று பல துறைகளிலும் இன்று சாதி

ஊடுருவி ஆட்சி செய்து வருகின்றது. பாரதி வாழ்ந்த காலத்திலும் இச்சாதிப் பிரிவினைகள் மேலோங்கி இருந்தன. அடிமைப்பட்டிருந்த நிலையிலும் சாதிப் பாகுபாடு பேசித் திரிந்த மூடரைக் கண்டு மனம் வெறுத்த பாரதி இத்தகைய இழிநிலையை மாற்ற வேண்டும் என்று கருதிச் சீர்திருத்தக் கருத்துக்களைத் தம் பாடல்கள் வாயிலாகவும் கட்டுரைகள் வாயிலாகவும் வெளிப்படுத்தினார்.

நம் நாட்டில் உயர்வகுப்பார் கீழ் வகுப்பாருடன் நட்பாய் இருந்தாலும் கூட அவர்களது வீடுகளுக்குச் சென்று உணவருந்து வதும் தெய்வம் தொழுவதும் மிக வியப்பான செயல்களாக இருந்தன. பாரதி இதற்கு விதிவிலக்கு, பார்ப்பார் முதல் பள்ளர் வரை எல்லாருடைய வீடுகளுக்கும் அவர் போய் வந்தார். அந்தக் காலத்தில் இது பெரும்புரட்சி என்று சொல்லத் தேவையில்லை. சாதி மதப் பேதத்தைப் பாரதி அறியாதவர். எந்தச் சாதி மதத்தினர் ஆனாலும் நண்பர்கள் என்றால் அவர் வேறுபாடின்றிப் பழகுவார்; உரையாடுவார்; உண்டு உறங்குவார். வெள்ளைக்காரனை வீட்டிற்குப் போகச் செய்வது, சாதி எனும் நச்சுப்பூண்டை வேருடன் களைவது, பெண்களுக்கு விடுதலை பெறுவது இந்த மூன்றும் இன்றியமையாதன என்று அடிக்கடி பாரதி சொல்வாராம். இவற்றை அக்காலத்திலேயே செயலிலும் காட்டி வந்த வீரர் அவர் ஆவார்.

"சகல மனிதரும் சகோதரர். மனுஷ்ய வர்க்கம் ஓர் உயிர். இப்படியிருக்க, நாம் ஒரு வீட்டுக்குள்ளே மூடத்தனமான ஆசாரச் சுவர்கள் கட்டி, நான் வேறு ஜாதி, என் மைத்துனன் வேறு ஜாதி இருவருக்கும் பந்தி போஜனம் கிடையாது. அவனை ஜாதிப் பிரஷ்டம் பண்ணவேண்டும் என்பது சுத்தமடமை" எனத் தம் கட்டுரையில் சாதி மறுப்புக் கொள்கையைப் பாரதி அழுத்தமாகவே குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் காலத்தில் சென்னையில் "ஸோஷல் ரிபார்ம் அஸோஸியேஷன்" என்ற மிக மிதவாதமான சமூகச் சீர்திருத்தச் சங்கம் ஒன்று இருந்தது. பாரதி அதில் தம்மை இணைத்துக் கொண்டார். அதன் பேரில் பல சாதிகளைச் சேர்ந்த, பல மதங்களைச் சேர்ந்த இளைஞர்கள் தங்களுள் பிராமணர் அல்லாத ஒருவரைச் சமையல் செய்யச் செய்து, அந்த உணவை எல்லாரும் உண்டார்கள். இந்த விருந்து நடத்தியதுடன் இதில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் இதைப் பற்றிப் பெருமையாக எல்லாரிடமும் சொல்வதென்று

தீர்மானித்து அவ்வாறே சொன்னார்கள். சென்னையில் இது பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

"சநாதனக் கானகத்தின்
சாத்திரப் புதரில்
யுகம் யுகமாகப்
படமெடுத் தாடிய
ஜாதிச் சர்ப்பங்கள்
வருணாசிரமப் போலிப் புற்றின்
மறைவில் பதுங்கிய
மரணக் கயிறுகள்" (பெரியார் ஒரு சகாப்தம் அல்ல....)

என்ற வரிகளின் வழிச் சாதிக் கொடுமையை உணர்த்தியுள்ள சிற்பியும் பாரதியின் உயிர்ப்பாய் விளங்கிய சாதி மறுப்புக் கொள்கையைத் தம் கவிதையில் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

சாதி மறுத்த சாப்பாடு

சிற்பியின் கற்பனையில் தோன்றிய பாத்திரமும் சிறைச்சாலை வார்டருமான 'மன்னாரு' என்பான் சிறைவயப்பட்ட பாரதியிடம்,

"வக்கீல் சடகோபாசாரியார்
உத்தரவு வாங்கியாச்சு சாமி
பிரமணாள் சமையல்
வெளியிலிருந்து வாங்கி வரலாம்"

என்று கூறத்

"தம்பி நமக்கு
வேதியராயினும் ஒன்றே - அன்றி
வேறு குலத்தவராயினும் ஒன்றே"

என்று பாரதியாரின் வரிகளிலேயே சிற்பி பேசியுள்ளதன் வாயிலாகப் பாரதியின் சாதி மறுப்புக் கொள்கையைச் சரியாகவே உணர்த்தி யுள்ளார்.

இசுலாமியரின் இனிக்கும் தேநீர்

சிறை விடுதலை பெற வெள்ளை நீதிபதியிடம் விண்ணப்பம் செய்யச் சென்ற பாரதி விடுதலை செய்ய மறுத்த நீதிபதியின் தீர்ப்பைத்

தாங்கி மீண்டும் சிறைச்சாலை திரும்பும்பொழுது அவருடன் வந்த அனைவரும் இடைவெளியில் இனிய தேநீர் பருக விரும்பிய பொழுது,

"இசுலாமியர் கடையில்
எனக்குப் பிடிக்கும் தேநீர்
அங்கே நிறுத்துங்கள்"

என்று பாரதியாரைப் பேசவைத்ததன் மூலமாக அவர்தம் சாதி மறுப்புக் கொள்கையைச் சிற்பி அழுத்தம் திருத்தமாகவே அடையாளம் காட்டியுள்ளார்.

சாதியை எதிர்த்துச் சமர்

"பிறப்பால் சாதி
வளர்ப்பால் சாதி
தொழிலால் சாதி
இதுவா நீதி?
சாதியை எதிர்த்துச்
சமர் புரியவென்றே
எழுத்துக் களைப்
பாசறைகள் ஆக்கியவன் நான்"

என்று நாட்டில் சதிராடும் சாதியக் கொடுமையை எதிர்த்து மக்களுக்கு எடுத்து உரைப்பதுவே பாரதியின் எழுத்துக்களின் குறிக்கோளாகச் சிற்பி காட்டியுள்ளார்.

குடும்ப அளவிலும் கூட விரும்பாத சாதி

தம்முடைய குடும்பத்தினரும் தம்மைப் போன்றே சாதி உணர்வு அற்றவராக இருக்கவேண்டும் என்னும் பாரதி கொண்டிருந்த புரட்சிக் கருத்தை,

"என்னுடைய மகள் ஒருத்தி
தாழ்த்தப்பட்ட இளைஞருடன்
கடல் கடந்த நாட்டுக்கு
ஓடிப்போய், அங்கிருந்து
அப்பா நான் சவுக்கியம்

என்று எழுதும் கடிதம்
எத்தனை பேரின்பம்”

என்னும் வரிகளில் சிற்பி வெளிப்படுத்தியுள்ளார். சாதி வெறி தலைவிரித்தாடிய அந்நாளில் உயர்வகுப்பைச் சார்ந்த பாரதிக்குச் சாதி பற்றிய குடும்ப அளவில் இத்தகைய சிந்தனை இருந்ததென்பதைக் கற்பனை செய்தே பார்க்க முடியவில்லை.

அரிசனத்திடம் ஆழ்ந்த பற்று

“ஹரிஜனங்கள் ..... ஆ .....
வாக்குச் சீட்டை
அடை காக்கும் முட்டைகள்
தேர்தல் தீர்ந்தால்
திகுதிகுவென எரிய
நல்ல விறகுக் கட்டைகள்”

(இந்தியா இந்தியா இணையற்ற இந்தியா)

என்ற சிற்பியின் மிக வேதனை வரிகளில் நமக்கு அறிமுகம் செய்யப் பட்டுள்ள அரிசன மக்களிடம் உறவாகவும் உரிமையாகவும் இருப்பதிலும் பாரதி பெருவிருப்பினராக இருந்து வந்துள்ளார் என்பது நாடறிந்த செய்தியாகும். ‘ஆறிலொரு பங்கு’ என்ற தமது நீண்ட சிறுகதையைப் பாரத நாட்டில் உழவுத்தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்துக் காப்பாற்றுகின்ற பள்ளர், பறையர் முதலிய தூய்மைத் தன்மை வாய்ந்த வைசிய உடன் பிறப்புக்களுக்குப் படையலாக்கியுள்ளார். எந்த ஒரு தனி மனிதருக்கும் படைய லாக்காமல் பாடுபடும் தாழ்த்தப்பட்ட மக்கள் குமுகாயத்திற்கே பாரதி படையல் செய்திருப்பது கூர்ந்து நோக்கத்தக்கதாகும்.

புதுப்பாப்பானுக்குப் பூணூல்

சீர்திருத்தம் பாரதியாரிடம் இருந்து தான் முதன் முதலில் தொடங்கியது. கனகலிங்கம் என்று தாழ்த்தப்பட்ட சிறுவனுக்குக் காயத்ரி மந்திரம் சொல்லிப் பூணூல் போட்டு விட்டார். அந்தக் காட்சியை நேரில் கண்டவர் வ.ரா.ஆவார். இனி, வ.ரா. வரிகளிலேயே இந்நிகழ்வினைத் தருவோம்:

“ஒருநாள் பாரதியார் வீட்டில் ஒரு சிறு கூட்டம். நடுவில் தீ

வளர்த்துத் தீயைச்சுற்றி வேதமந்திரங்களை ஓதிக்கொண்டிருந்தனர். தீயைச் சுற்றி வ.வே.சு.அய்யர், மண்டையம் சீனிவாசாச்சாரி, பிரம்மராய அய்யர், குவளைக் கண்ணன், ராமசாமி அய்யர், கோவிந்தராசலு என்ற நண்பர் முதலியோர் வீற்றிருந்தனர். ஒரு பலகையில் பாரதி அமர்ந்திருந்தார். மற்றொரு பலகையில் கனகலிங்கம். கனகலிங்கத்துக்குப் பிரம்மோபதேசம் செய்து பூணூல் அணிவித்தார் பாரதி. "நீ இன்று முதல் பிராமணன். யார் உனக்குப் பூணூல் போட்டு வைத்தது என்றால் அதட்டியே பாரதி என்று சொல்" என்றும் சொன்னார்.

நாடறிந்தவனுக்கு நற்பூணூல் எதற்கு?

எல்லோரும் போனபின் பாரதியார் தாம் போட்டுக் கொண்டிருந்த பூணூலை எடுத்துவிட்டார். "என்ன ஓய்! என்று என்னைப் பார்த்துச் சிரித்தார். நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் எதற்கு? உமக்கும் எனக்கும் வேண்டாம். புதுப்பார்ப்பான் கனகலிங்கத்துக்குப் பூணூல் தேவை. எப்பொழுது நான் அவனுக்கு பிரம்மோபதேசம் செய்தேனோ அப்பொழுது எனக்குப் பூணூல் இருக்க வேண்டும். இனிமேல் எனக்கு என்னத்துக்குப் பூணூல்?" என்று தம்மிடம் கூறியதாக வ.ரா. கூறுகிறார். இவ்விரு நிகழ்ச்சிகளையும் சிற்பி கீழ்வரும் கவிதை வரிகளில் வரைந்து காட்டியுள்ளார்:

"வேள்வித்தீ வளர்த்தேன்
சிறுவன் கனகலிங்கத்தை
மடி மீது இருத்தினேன்
காய்த்ரி மந்திரம்
வேறு மந்திரங்களும்
காதில் ஓதினேன்
.....
இன்று முதல் பிராமணன் நீ!
எவர் கேட்டாலும்
என் குருநாதர் பாரதி
இட்ட பூணூல் என்றுசொல்
எக்காரணம் கொண்டும்
தரித்த பூணூலை
அறுத்து விடாதே"

என்று அரிசனப் பையனாகிய கனகலிங்கத்துக்குப் பாரதி பூணூல் இட்டதையும்

"நாடறிந்த பாவலன் எனக்குப்
பூணூல் கிடையாது
இந்த ரகசியம்
ஊரறியும் உலகறியும்...."

என்று பாரதி தாம் இட்டிருந்த பூணூலை எடுத்துவிட்டதையும் சிற்பி ஏற்றமுற எடுத்துக் காட்டுகின்றார்.

"புஷ்வண்டி தள்ளும்
அரிஜனத் தோழரிடம்
அன்பு அவனுக்கு"

என்று கவிஞர் வைரமுத்து பாரதிக்கும் அரிசன மக்களுக்கும் இடையே உறவுநிலை உலவியது என்பதை உறுதிப்படுத்துகிறார். பாரதி கனகலிங்கத்துக்குப் பூணூல் பூட்டியதையும் தாம் அணிந்திருந்த பூணூலைப் பாரதி அறுத்தெறிந்ததையும் கவிஞர் வைரமுத்து,

"கனகலிங்கத்திற்குப்
பூணூல் பூட்டினான்.
வேதத்துக்கே
அன்றுதான்
பூணூலின் அர்த்தம்
புரிந்தது.
.....
அணியாதவனுக்கோ
அணிவித்தானவன்
அணிந்திருந்ததையோ
அறுத்தெறிந்தானவன்"

என்னும் கவிதை வரிகளில் காட்டியுள்ளார்.

விடை கிடைக்கா வினா

"இழிந்த சாதியில்
பிறந்த ஒருவன்

எல்லா வேதமும்
ஞானமும் பெற்றாலும்
சிருங்கேரி மடத்தின்
தலைவராக முடியுமோ?
இந்த வினாவை
'இந்து'வில் எழுப்பினேன்
இதுவரை யாரும் பதில் சொல்லவில்லை
இனியும் எவரும்
பதில் சொல்வார் என
எனக்குச் சற்றும் நம்பிக்கை இல்லை"

என்று தாம் வாழ்ந்த காலத்தில் பாரதி எழுப்பியதாகச் சிற்பி சுட்டியுள்ள வினாவிற்கு இதுவரையிலும் பதில் கிடைத்ததாகத் தெரியவில்லை. அந்த அளவிற்குச் சாதிப் பித்தும் சாதிப் பிதற்றலும் இன்றும் மக்கள் மனத்திலேயே வேரூன்றி இருப்பதை நம்மால் மறுக்க இயலவில்லை. எனவேதான் சாதிய ஐக்கியத்திற்குப் பெருந்தீங்குகள் நிகழ்வதையும் நம்மால் தடுக்கவோ, தவிர்க்கவோ இயலவில்லை. சாதி வெறியிலிருந்து நம்மை முற்றிலும் விடுவித்துக் கொள்வது பாரதிக்கு நாம் ஆற்றுகின்ற செய்ந்நன்றிக் கடனாகும்.

நன்றி மறவா நல்லிதயம்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பது வான்மறை வள்ளுவமாகும்.

"நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ"

என்று புறநானூறு செய்ந்நன்றி பற்றி எடுத்துரைக்கிறது.

"நன்றி கெட்ட மனிதரைவிட
நாய்கள் மேலடா"

என்பது கவிஞர் கண்ணதாசனின் செய்ந்நன்றி பற்றிக் குறிக்கும் சிறந்த பாடல் வரிகளாகும்.

"உப்பிட்டவரை உள்ளளவும் நினை"

என்பது ஆன்றோர் மொழியாகும். இராமாயணத்தில் கும்பகர்ணனும் பாரதத்தில் கர்ணனும் செய்ந்நன்றி உணர்வை மக்களுக்கு உணர்த்து வதற்காகவே படைக்கப்பட்ட பாத்திரங்களாகும். செய்ந்நன்றி கொன்றவர்கள் வள்ளுவர் காலத்திலும் இருந்திருக்கிறார்கள். நாம் வாழ்கின்ற காலத்திலும் இருக்கின்றனர். ஒரே வேறுபாடு என்னவெனில் வள்ளுவர் காலத்தில் செய்ந்நன்றி கொன்றவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்திருக்கலாம். இன்றோ எண்ணிக்கையில் செய்ந்நன்றி கொன்றோர் மிகுதியாகப் பெருகி விட்டனர் என்பதாகும். ஆனால் பாரதியைச் செய்ந்நன்றி மறவாச் செம்மலாகத் தம் கவிதையில் சிற்பி படைத்துக் காட்டியுள்ளார். புதுவையை விட்டுத் தாயகம் புறப்பட்டபொழுது அதற்கு முன்னே புதுவையில் வந்து போய்ப் பழக்கப்பட்டதால் அவர்தம் நினைவில் நின்ற இடங்களையும் அவரது துன்பம் துடைக்க உதவிய உயரிய பண்பாளர்களையும் நன்றி உணர்வுடன் நன்றாகவே நினைந்து பார்க்குமாறு பாரதியைச் சிற்பி காட்டியிருப்பது நம் கருத்திற் கொள்ளத் தக்கதாகும்.

மண்ணை மறக்கா மாண்பு

"ஆதரவும் அடைக்கலமும்
சோதனைப் பொழுதில்
தந்தமண் .... இந்தமண்

என்று வேதனைப்பொழுதில் ஆதரவற்ற நிலையில் தஞ்சம் தந்து தம்மைக்காத்த புதுவை மண்ணிற்கு நன்றி படைக்குமாறு பாரதியைச் சிற்பி செய்துள்ளார். அதுமட்டுமல்லாமல் வேதபுரமாகிய புதுவை மண்ணெடுத்துத் தம் நெற்றியில் பாரதி இட்டுக் கொண்டதாகவும் சிற்பி குறிப்பிடுகின்றார்.

நீலக்கடலுக்கு நீங்கா நன்றி

புதுவைக் கடற்கரை சென்னைக் கடற்கரையைப் போல் விரிந்ததல்ல. என்றாலும் அச்சிறு கடற்கரையும் அழகாகவே இருந்தது. மற்றவர்களெல்லாம் காலையோ மாலையோ மட்டும் வந்து கடற்கரை இன்பத்தை நுகர்வர். ஆனால் பாரதிக்கோ நேர வரையறை கிடையாது. உச்சிப் பகலிலும் அவர் வருவார்;

நள்ளிரவிலும் வருவார்; பல சமயங்களில் தூக்கம் வராமலோ கற்பனை வெறியிலோ கடற்கரைக்கு வந்தவர் இரவெல்லாம் அங்கேயே தங்கிவிடுவார். எனவேதான் புதுவையை விட்டுப் புறப்பட்டபொழுது,

"நீலக்கடலே
வேகத் திரைகளினால்
வேதப் பொருள்பாடும் கடலே,
வைகறைப் பொழுதுகளில்
எனக்கு வாய்த்த தியான மண்டபமே,
விடைகொடு ..... விடைகொடு"

என்று தம் கற்பனைக்குக் களமாய் இருந்த கடலிடம் கூடப் பாரதி விடைபெற்றதாகச் சிற்பி குறிப்பிடுகின்றார்.

குயில் தோப்புக்குக் கைகுவிப்பு

"கோட்டுப் பெருமரங்கள்
கூடிநின்ற குயில்தோப்பே
பாட்டும் கனவும்
பகிர்ந்தளித்த தோழி
நிழல் விரிப்பில் எனது
நெஞ்சை விட்டுப் போகின்றேன்"

என்று தம் சிறு காப்பியமான குயில் பாட்டு உருவான சூழலை வழங்கிய குயில் தோப்பையும் நன்றியுடன் பாரதியை நினைத்துப் பார்க்குமாறு சிற்பி செய்துள்ளார். இத்தோப்பு 'வெல்லச்சு' கிருட்டிணசாமி செட்டியாருக்குப் புதுவையை அடுத்த முத்தியாலுப் பேட்டைக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. அந்தத் தோப்பில் பாரதியார் மணிக்கணக்காய்ச் சஞ்சரித்திருப்பார். இந்தத் தோப்பே பாரதியின் குயில் பாட்டிற்குக் காட்சித் திருவிடமாயிற்று. தமிழ் உள்ளளவும் அவ்விடம் சாகாவரம் பெற்றுவிட்டது. எனவே பாரதி அவ்விடத்தையும் நன்றியுடன் நினைந்து பார்க்கிறார்.

சித்தாந்த மடத்தில் வைத்த சித்தம்

வேதபுரத்துக்கு வடக்கே இரண்டு கல் தூரத்தில்

சித்தாந்தசாமி கோயில் இருக்கின்றது. அதற்கு அருகே ஒரு மடம் உள்ளது. அந்த மடத்தில் பல ஆண்டுகளுக்கு முன் சித்தாந்தசாமி என்ற பரதேசி ஒருவர் இருந்தார். அவருடைய சமாதியிலேதான் அக்கோயில் எழுப்பப்பட்டுள்ளது. இதன் அமைதியான சூழ்நிலையில் பாரதி பகல் பொழுதைக் கழிப்பதுண்டு.

"சித்தாந்தசாமி திருக்கோயில் வாயிலில்
தீப வெளியுண்டாம்"

என்று தொடங்கும் பாடலைச் சித்தாந்தக் கோயிலுக்காகவே பாரதி பாடியுள்ளார். அங்ஙனம் அவர் பாட்டிலேயே இடம் பெற்றுள்ள சித்தாந்தசாமி திருமடத்திடமும் பாரதி பிரியா விடை கொண்டதாக,

"எனக்குள்
வெளிச்ச விளக்கு ஏற்றி வைத்த
சித்தாந்த சாமி திருமடமே
பிரியாவிடை கொண்டேன்"

என்ற வரிகளின் வழியாகச் சிற்பி குறிப்பிடுகின்றார்.

மாரியம்மாவிற்கும் மைந்தனுக்கும் நன்றி

உலகத்து நாயகியான உப்பளத்து மாரியம்மாவையும் அவர் மைந்தனான மணக்குள விநாயகரையும் நன்றிப் பெருக்கால் பாரதி நினைத்துப் பார்ப்பதைச் சிற்பியின் பாடல் வரிகள் நமக்கு அறிவிக்கின்றன:

"உலகத்து நாயகியே
உப்பளத்து மாரியம்மா
காவல் இருக்க, என்
கையோடு வாடியம்மா"

என்று உப்பளத்து மாரியம்மாவையும்

"மணக்குள விநாயகா
பேசாப் பொருளைப் பேசவும்
கேட்கா வரத்தைக் கேட்கவும்
தூண்டிவிட்ட கணநாதா

எம்குடியை வாழ்வித்து
அருள்புரி நீ”

என்று மணக்குள விநாயகரையும் பாரதி நினைவு கூர்ந்ததைச் சிற்பி நம் நினைவிற்குக் கொணர்கிறார்.

மடுவிற்கு மனமார்ந்த நன்றி

ஒருநாள் குவளைக் கண்ணன் பாரதியிடம் புதுவையில் தியாகராசபிள்ளை மடு ஒன்று இருக்கின்றது. குளிக்கச் சிறந்தது; ஆனால் கொஞ்ச தூரத்தில் இருக்கின்றது. தாங்கள் நாளும் அங்குக் குளிக்க வரமுடியுமா என்று கேட்டார். பாரதியாரும் அவருடன் வரச் சம்மதித்தார். ஊருக்கு மேற்கே ஒரு கல் தொலைவில் அம்மடு இருக்கின்றது. காலை நான்கு மணிக்கு எழுந்து சென்றால்தான் அமைதியாகக் குளிக்கலாம் என்றார் குவளை. எப்பொழுது வந்து எழுப்பினாலும் வருவதாகப் பாரதி சொன்னார்.

மறுநாள் குறித்தபடி நான்கு மணிக்குக் குவளை பாரதி வீட்டுக் கதவைத் தட்டினார். யார் என்ற அதிகாரமான கேள்வியுடன் பாரதி வெளியே வந்தார். இருவரும் மடுவை நோக்கி நடந்தனர். சாலையின் இரு மருங்கிலும் உள்ள நஞ்சை புஞ்சை வயல்களும் தென்னந் தோப்புக்களும் விடிகாலையில் மந்த மாருதமும் பாரதியைத் தம் வசப்படுத்திய புட்களின் குரல் ஒலியும் பாரதியைப் பரவசப்படுத்தியது. மடுவில் குளித்துப் பாரதி மகிழ்ந்து திரும்பினார். இம்மடு பற்றிய சிந்தனையைப் பாரதி நன்றியுணர்வுடன் தம்முள் கொண்டிருந்தார் என்பதனை,

“இது சித்தாந்தசாமி கோயில் மடு
குவளை சொன்ன
குளிர்நீர்ப் பொய்கை
முங்கி எழுகிறேன்
முகத்தில் படிந்த
நீரைத் துடைக்கிறேன்”

என்ற வரிகளின் வாயிலாகச் சிற்பி வெளிக்கொணர்ந்துள்ளார்.

துணை நின்ற தூயோர்

இங்ஙனம் அடிக்கடி வந்து போய்ப் பழக்கப்பட்டதால் தம்

நினைவில் பதிந்த இடங்களை மட்டும் நினைவில் கூர்வதுடன் நிற்காமல் புதுவை வாழ்க்கையில் தமக்குத் துணையாய் நின்ற தூயோர் பற்றியும் நினைந்து பார்த்து அவர்கட்கு நன்றி படைக்கும் நல்லிதயம் கொண்டவராகப் பாரதியைச் சிற்பி தம் கவிதை வரிகளில் சித்திரித்துக் காட்டியுள்ளார்.

வார்டர் மன்னாருக்கு வாழ்த்து

சிறைத் தாழ்வாரத்தில் கைதி எண் 253யைப் பார்க்க வழக்கறிஞர் வந்திருப்பதாக யாரோ ஒருவனின் குரல் ஒலிக்க, அதை அவசரமாய் அடித்துக் கீழ்வருமாறு மற்றொரு குரல் மறுத்தது.

"அடேய், சாமியெ
ஆருண்ணு நெனச்சே
பாட்டுக் கட்டுற
பாரதீடா ....
மடையா மண்ணாங்கட்டி

மகாண்ட அவரு
மருவாதையாய்ப் பேசு
இங்க அவரு வந்தது
நம்ம புண்ணியம்டா"

என்ற வரிகளை மறுகுரலாக ஒலித்த வார்டர் மன்னாரு கவிஞர் சிற்பியின் கற்பனைப் பாத்திரமாகும். அவன் பெற்றெடுத்த மகளான திலகா, மகனான சுப்பையா ஆகிய இருவரும் பாரதியின் பேரன்பைப் பெற்றவர்களாவர். திலகா, சுப்பையா ஆகிய பெயர்கள் பாரதியின் அரசியல் சிந்தனையை நினைவூட்டிய செய்தியினைச்

"சுப்பையா..... திலகா.....
இந்த இரண்டு துருவங்களுக்குள்
தானே என்னுடைய உலகமும்?
சுப்பையாவாகப் பிறந்தேன்
திலகரால் ஆட்கொள்ளப்பட்டேன்"

என்னும் வரிகளில் சிற்பி நமக்கு நினைவூட்டுகிறார்.

"இந்த மன்னாருவுக்குத்தான்
என்ன விசுவாசம்

கண்ணன் - என் சேவகன்
ஆனது போல!”

என்ற வரிகளின் வாயிலாகச் சிறை இருந்தபொழுது தமக்கு மன்னாரு செய்த சேவகத்தை நினைத்துப் பார்த்து அவனை நன்றியுடன் பாராட்டிப் பாரதி மகிழ்வதாகச் சிற்பி நமக்குக் காட்டியுள்ளார்.

சிறை வீடு பெற்றுக் கடலூரை விட்டுப் புறப்பட்ட பாரதி கைநிறையப் பொம்மைகளையும் மிட்டாயையும் வாங்கிக் கொண்டு மன்னார் வீட்டை நோக்கிச் சென்றதாகச் சிற்பி குறிப்பிடுகின்றார். சென்ற இடத்தில் நிகழ்ந்ததாகச் சிற்பி காட்டும் பாச நிகழ்ச்சி நம்மை நெகிழச் செய்கின்றது. ஊருக்குப் புறம்பே இருந்த ஒரு சிறு குடிலுக்குள் பாரதி நுழைந்தவுடன் வார்டர் மன்னாருவின் பிள்ளைகளான திலகாவும் சுப்பையாவும் ‘பெரியப்பா’ என்று அன்பொழுக அழைத்துப் பாரதியின் காலைக் கட்டிக் கொண்டதாகச் சிற்பி பேசுகின்றார். காலில் விழுந்த மன்னாருவைத் தடுத்துத் தழுவி அவன் வீட்டில்தான் தமக்குச் சாப்பாடு என்று பாரதி அறிவிக்கச் சிறப்பாகத் தமக்கு உணவிட்டுத் தம் பாசத்தை வெளிப்படுத்திய மன்னாரையும் அவன் மனைவி இலக்குமியையும் மனமார பாராட்டப் பாரதி நிமிர்ந்தபோது அந்தப் பஞ்சமன் முகத்தில் கண்ணீர்க் கோடுகள் படிந்திருந்ததாக சிற்பி காட்டுகின்ற இடத்தில் நம் முகத்திலும் கண்ணீர்க் கோடுகள் படியத்தான் செய்கின்றன.

இனிய மனிதர்களுக்கு இதய நன்றி

சிறைக்குள் தம்மை வந்து பார்த்த வழக்கறிஞர் சடகோபாசாரியாருக்கும் அவருடன் வந்து பாரதிக்கு அறிமுகமான வழக்கறிஞர் நடராக அய்யருக்கும் பாரதி நன்றி படைத்ததாகச் சிற்பி குறிப்பிடுகிறார். சுதேசமித்திரன் அரங்கசாமி அய்யங்கார், அன்னி பெசண்ட், சி.பி.இராமசாமி அய்யர் ஆகியோர் தம் விடுதலைக்காக முயற்சிக்கின்றமையை வழக்கறிஞர் சடகோபாசாரியார் வழியாக அறிய வந்த பாரதி அவர்கட்கும் தம் இதயமார்ந்த நன்றியினைப் புலப்படுத்திக் கொண்டதாகச் சிற்பி நமக்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

சிறையிலிருந்த காலை மாலைக்குளிரால் பாரதி வாட்டப் படுவதைத் தவிர்க்க மன்னாரு வழியாகக் கம்பளி தந்துதவிய வழக்கறிஞர் சடகோபாசாரியாருக்குச்

“சடகோபா சாரியர்
எத்தனை இனிய மனிதர்
‘குப்பாய ஞானத்தால்
மரணம் என்ற
குளிர்நீக்கி எனையாண்ட’
குருவைப் போல
இவர் மெய்க்குளிரை நீக்கினார்”

என்னும் வரிகளில் தம் நன்றியைக் கூறிப் பாரதி பாராட்டியதாகச் சிற்பி குறிப்பிட்டுள்ளார்.

புதுவை நட்பினருக்குப் பூத்த நன்றி

புதுவையில் தமக்கு அடைக்கலம் தந்த முதல் மனிதரும் ஆருயிர்த் தோழருமான ‘சூனா அய்யர்’ என்ற சுந்தரேச அய்யர், தம்முடன் நட்புக் கொண்டு பழகிய ‘எலிக்குஞ்சுச் செட்டியார்’ என்ற அன்புக்குரிய ஆறுமுகம் செட்டியார், தாம் குடியிருந்த வீட்டிற்குரிய வாடகையினைக் கேட்கத் தயங்கிய விளக்கெண்ணெய்ச் செட்டியார் என்ற அய்யாக்கண்ணுச் செட்டியார், குவளைக் கண்ணன் என்ற தமக்கு இனிய கிருட்டிணமாச்சாரி ஆகிய நல்லோர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கித் தம் நன்றிப் பெருக்கினைப் பாரதி புலப்படுத்திக் கொண்ட செய்தியினைச் சிற்பி நமக்கும் புலப்படுத்தியுள்ளார்.

நன்றி கற்கட்டும் நம் தேசம்

பாரதியின் நெருங்கிய தோழரான வ.உ.சி. சிறை மீண்ட போது ஏனென்று கேட்கவும் ஏறெடுத்துப் பார்க்கவும் ஆளில்லாமல் போன தமிழ் மக்களின் நன்றியுணர்வு கொன்ற நச்சுப்பண்பாட்டினை,

“என்ன கொடுமையடா!
நன்றி கெட்ட தமிழ்நாடு”

என்னும் வரிகளில் பாரதி வழியாகவே சிற்பி சிறப்பாகவே வெளிப் படுத்தியுள்ளார். வாழ்நாளெல்லாம் நன்றியுணர்வை மறக்காமல் போற்றி வளர்த்த பெருமகனாகிய பாரதி இறந்த பொழுதிலும் நன்றி கெட்ட மனிதர்களாகவே சிறிதும் வெட்கமில்லாமல் தமிழர்கள் தங்களைக் காட்டிக் கொண்டனர்.

ஞாலம் போற்றும் ஞானக்கவியின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை இருபதுக்கும் குறைவாக இருந்ததாம். அவர் உடம்பில் மொய்த்த ஈக்களின் எண்ணிக்கை அளவில் கூட ஆள்களில்லையாம். நம் தேசம் புலிகளை மதிக்காத புழுக்களின் தேசமாகவும் உணரத் தெரியாத ஊமைகளின் பூமியாகவும் இருப்பதனால்தான் தமிழர்கள் நன்றி கெட்டவர்களாக உள்ளனர் என்று தமிழர்களின் நன்றி கெட்டுப்போன நயமற்ற பண்பாட்டிற்குரிய அடிப்படைக் கரணியத்தைச் சுட்டும் கவிஞர் வைரமுத்து,

"இனி மனிதர்க்கல்ல....
நாற்சந்தியெங்கும் நாம்
நாய்களுக்குச்
சிலை வைப்போம்
நன்றி கற்கட்டும்
நம் தேசம்"

என்ற வரிகளில் தமிழரின் நன்றி கெட்ட செயலுக்காகத் தம் கழிவிரக்கத்தைப் பதிவு செய்துள்ளார். இனியாவது நன்றியறிதல் என்னும் வள்ளுவப் பண்பாட்டைத் தமிழகத்தில் வளர்ந்தோங்கச் செய்யும் முயற்சியில் முனைவோம்.

தூய்மை கெடா நேயத் தொடர்பு

உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து உயிரிடத்தும் அன்பு பாராட்டும் மனிதநேயம் மிக்கவர் பாரதி ஆவார். அரவிந்தர் முதல் 'புஷ்' வண்டிக்காரன் வரை, குவளைக் கண்ணன் முதல் கனகலிங்கம் வரை, பாரதிதாசன் முதல் பிரம்மராயர் வரை, துரைசாமி முதல் சடகோபன் வரை, செல்லம்மா முதல் அம்மாக்கண்ணு வரை, வ.உ.சி. முதல் வெல்லச்சுச் செட்டியார் வரை அவரை அறிந்த எல்லோருமே அவரை அன்பின் மறுபிறப்பு என்கிறார்கள். இந்த அன்பின் ஆற்றல் வாய்ந்த பிணைப்பிலேதான் தம் ஞானத் தந்தையான விவேகானந்தர், அரவிந்தர், திலகர் ஆகியோரிடம் கருத்து முரண்பாடு ஏற்பட்ட பொழுது அதைச் சுட்டிக்காட்டிப் பாரதி கடிந்து கொண்டார். இத்தகைய அன்புள்ளத்தைப் பாரதி கொண்டிருந்தமையால்

அவருடன் தொடர்புகொண்ட நேயர் கூட்டம் எண்ணிக்கையில் பெருகியது. அவர்களைப் பற்றி எல்லாம் பாரதி எண்ணிப் பார்த்து எண்ணமுடியாத பேரின்பத்தில் திளைத்ததாகச் சிற்பி காட்டும் கவிதை வரிகள் நம் பாராட்டை ஈர்ப்பனவாகும். இனி, சிற்பியால் சுட்டப்பட்டுள்ள பாரதி நேயர்களிடம் நம் சிந்தனையைப் படரச் செய்வோம்.

இணைபிரியா இரட்டையர்

தம்மைச் 'சுப்பு' என்று கொஞ்சலாய் அழைத்து மகிழ்ந்த 'சோமு' எனப்படும் நாவலர் சோமசுந்தர பாரதியாரும் நற்கவிஞர் பாரதியாரும் இளமைப்பருவத்தில் எட்டயபுரத்தில் இரட்டைக் குழந்தைகள்போல் இணைபிரியாதிருந்தனர். இருவருக்கும் வீதி விளையாட்டுக்கள், கிணறு, நீச்சல் எதிலும் நாட்டமில்லையாதலால் புத்தகம், சுவடி, பாட்டு, படிப்பு என்பனவே இவ்விருவரின் வாழ்க்கையாகவே இருந்து வந்துள்ளன. ஆளரவமற்ற நடுப்பகலில் சிவன்கோயில் ஆனை, குதிரை வாகனங்களின் மரக்காதுகள் சாய்த்துக் குறுகுறுத்துக் கேட்கும்படியாக இவ்விருவரும் மடலையும் கோவையையும் மாலையையும் படித்துப் பரவசம் எய்துவராம். மறைவாக விறலி விடு தூதும் இருவரும் படிப்பராம் என்றெல்லாம் எழுதி இரு பாரதியர்க்கும் நட்பில் ஏற்றத்தை நிகழ்த்தியுள்ள சிற்பி அவ்விருவருக்குமிடையே நிலவியிருந்த நட்பின் ஆழத்தை,

> "சோமு மட்டும் கொஞ்சலாய்
> சுப்பு, சுப்பு என்றழைப்பான்
> இரட்டைக் குழந்தைகள் போல்
> இருந்தவர் நாங்கள்"

என்னும் வரிகளில் சிற்பி உணர்த்தியுள்ளார்.

மாமனும் மருகனும்

மழை நீரில் அழகான காகிதக் கப்பல்கள் அல்லிப் பூக்களாய் மிதப்பதைப் பார்த்துச் சுவைத்த பாரதியின் நினைவில் தூத்துக்குடிக் கடலில் மிதந்த சுதேசிக் கப்பல் குழுவின் தேசியக்கொடி பறக்கும் கப்பல்களும் தேசபக்தச் சிங்கமான சிதம்பரம் மிதக்கவிட்ட

கப்பல்களும் வலம் வந்தன. தாய்நாட்டுப் பற்று, தாய் மொழிப்பற்று என்பனவற்றை இரட்டைப்பிள்ளைகளாக வளர்த்து வந்த வைர நெஞ்சினரான வ.உ.சி.யுடன் பாரதி பேரன்பு கொண்டிருந்தார். சூரத்தில் நிகழ்ந்த காங்கிரசுக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற இவ்விருவரின் தோழமை அங்கு இறுக்கம் பெற்றது. அலைகடல் நடுவில் பலகலம் செலுத்திய வீரசிதம்பரத்துக்குப் பங்குதாரர்களைச் சேர்க்கத் தாம் பொறுப்பேற்றிருந்த 'இந்தியா' என்னும் இதழைப் பாரதி விரையச்செய்தார்.

தூத்துக்குடியைச் சுதந்திரப் பண்ணையாக வ.உ.சி. மலரச் செய்ததால் கண்ணை உறுத்திய காவல்துறை வழக்குகள் போட்டுச் சொந்த மண்ணை நேசித்த குற்றத்திற்காக வ.உ.சி.க்கு ஆயுள் தண்டனை அளிக்கப்பட்ட பொழுது தாம் ஆக்கிய அழியாத கவிதை வடிவில் தம் அவலத்தையும் ஆதங்கத்தையும் பாரதி தீர்த்துக் கொண்டார். சிறையில் தொல்லைப்பட்ட வ.உ.சி. சிறைவிட்டு வெளிவந்தபோது அவரை வரவேற்க ஆளில்லாமல் போனதற்காகப் பாரதி மிக வருந்தினார். அந்தப் பொழுதில் தாம் மட்டும் இருந்திருந்தால் சிறைக்கதவு திறக்கப்பட்டுச் சிதம்பரம் வெளியில் வருகின்றபொழுது செயப்பறைகள் முழக்கி அவரை வரவேற்றிருப்பாராம். வானம் வரை நீண்ட மாலைகளை அவருக்குப் போட்டு மகிழ்வாராம். பல்லக்கில் அமரவைத்துப் பாண்டியன் போல் கொண்டாடித் தோள்கொடுத்து வீடுவரை அவரைத் தூக்கிச் சென்றிருப்பாராம். இவற்றையெல்லாம் ஏன் பாரதியார் செய்யமுடியவில்லை? வ.உ.சி. சிறை வீடு பெற்ற பொழுது பாரதி இந்தியத் திருநாட்டில் இல்லை; புதுவை வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். எனவேதான் வ.உ.சி.க்குத் தாம் விரும்பியவாறு வரவேற்பை நிகழ்த்தப் பாரதிக்கு முடியாமல் போயிற்று. வ.உ.சி. சிறைமீண்டதும் மாமா என்று செல்லமாகத் தம்மால் அழைக்கப்பட்ட பாரதியைப் பார்க்கத் தென்புதுவை வந்து விட்டார். மாப்பிள்ளையான வ.உ.சி. தம் மாமனாரான பாரதியுடன் நண்பகல் விருந்தினை வயிறார உண்டார்.

மேற்குறித்தவாறு விரிவான நிலையில் கவிச்சிங்கம் பாரதிக்கும் கப்பல் சிங்கம் வ.உ.சிக்கும் இடையே நிகழ்ந்த உறவுச் செயல்களை மிக உருக்கமுடன் தம் கவிதையில் விளக்கம் செய்துள்ள கவிஞர் சிற்பி,

"சிதம்பரம்
ஆருயிர்த் தோழன் எனக்கு
மாமா, மாமா என
வாஞ்சையுடன் அழைப்பார்"

என்று பாரதியிடம் சிதம்பரனார் கொண்டிருந்த ஆழமான நட்பை நமக்கு அறிமுகம் செய்கிறார்.

தமிழராம் சிதம்பரம் தொல்லைப்பட்டும் துயர்ப்பட்டும் சொந்தமாக வாங்கி வந்த கப்பல்களை வ.உ.சி. சிறைப்பட்ட காலத்தில் வ.உ.சி.யால் நிறுவப்பட்ட கப்பல் குழுவின் உறுப்பினர்களாகிய உணர்ச்சிகெட்ட தமிழர்களே வெள்ளைக் காரனுக்கே விற்றுவிட்ட செய்தியை அறிந்த பாரதி கப்பலை விற்று விட்டதற்குப் பதிலாக அதனைச் சுக்கல் சுக்கலாய் உடைத்துக் கடலில் கரைத்திருக்கலாமே என்று வேதனையுடன் கூறக்கேட்ட வ.உ.சி.,

"மாமா, உங்களுக்குத் தெரியாதா
மானங் கெட்ட நாடு இது!"

என்று கூறியதாகக் குறிப்பிடும் சிற்பி,

"நாட்டை இகழாதீர்கள்
சிதம்பரம் -
மானம் கெட்ட மக்கள்"

என்ற வரிகளில் பாரதியைப் பதில் பேச. வைத்துத் தமிழரின் இகழத்தக்க இழிநிலையை எடுத்துக்காட்டியுள்ளார். கப்பலோட்டிய தமிழரான வ.உ.சி. தம்மிடமிருந்து விடைகேட்டுப் போன பின்னும் உள்ளத்தில் படரவிட்ட நாட்டுப் பற்றாகிய தீ உலையாய்ப் பாரதிக்கு எரிந்துகொண்டிருந்ததாகத் தம் கவிதை வரிகளில் சிற்பி காட்டியுள்ளார். பாரதிக்கு நன்றிக்கடன் ஆற்ற மறந்த தமிழர்களே வ.உ.சி.க்கும் நன்றிக்கடனை ஆற்ற மறந்தனர் என்ற செய்தி நம் நெஞ்சை நெருடச் செய்கிறது.

இதழ்க் களத்தில் இராணுவ வீரர்

"இராமலிங்க சுவாமிகளும் சுதேசமித்திரன் சுப்பிரமணிய அய்யரும் இவர்களைப் போன்ற வேறுசில மகான்களும்

தமிழ்நாட்டின் புதிய விழிப்பிற்கு மூலக்கர்த்தாக்களாக விளங்கினர்'' - என்று பாரதியார் எழுதியிருப்பதிலிருந்து அய்யரின் பெருமையை உணரலாம். அரசியலில் பாரதி அக்கறை கொள்வதற்கும் அவரது பிந்தைய அரசியல் வாழ்விற்கும் ஜி.சுப்பிரமணிய அய்யரே அடிப்படைக் கரணியமாக விளங்கினார். ஜி.சுப்பிரமணிய அய்யர் தொடங்கி நடத்திய 'மித்திரனில்' பணியாற்றிய பாரதிக்கு மிகுதியான ஊதியம் தரப்படவில்லை. ஆகையால் அவருக்குப் பணமுடை இருந்து கொண்டே இருந்தது. ஜி.சுப்பிரமணிய அய்யர் வஞ்சனையற்றவர். பாரதியின் திறமை அவருக்கு மிக நன்றாகவே தெரியும். ஆனால் மிகுதியான ஊதியம் கொடுக்க அவருக்கு வசதியில்லை.

"பாரதி, நீ காளிதாசன் தான். ஆனால் அட்சர இலட்சம் கொடுக்க நான் போசனாக இல்லையே" என்று பாரதியிடம் சுப்பிரமணிய அய்யர் கூறுவார். அத்தகைய அருளாளர் சுப்பிரமணிய அய்யரின் இதழ் நடத்தும் திறன் பற்றி,

"இந்து ஆங்கில இதழையும்
மித்திரன் தமிழ் இதழையும்
விடுதலைப் போர்க்களத்தில்
ராணுவ வீரராய்
நிறுத்தியவர் அய்யர்"

என்ற வரிகளில் காட்டியுள்ள சிற்பி,

"சமுதாய சீர்திருத்த
வீரர் அவர்.
இளம் விதவை மகளுக்கு
மறுமணம் செய்துவைத்த
நிகரிலாப் புரட்சிக்காரர்
ஆசார சீர்திருத்த சபையில்
என்னையும் அங்கமாக்கி
புதிய சிந்தனைகளால்
அதிர வைத்தார்"

என்ற வரிகளில் பாரதியைப் பெருமைப்படுத்திய அய்யரின் சீர்திருத்தச் சிந்தனையைச் சிறப்பாகச் சொல்லியுள்ளதுடன்,

"பெரிது பெரிது அவர் பெருமை
அறியாது போனது தமிழ்நாட்டின் மடமை"

என்று மனிதர்களின் சிறப்பறிந்து பாராட்டத் தவறும் தமிழரின் பழிபடர் செயலையும் பாங்குடன் சிற்பி எடுத்துக் காட்டியுள்ளார்.

அன்னை நிவேதிதாவின் அருட்பார்வை

பாரதியிடம் தோன்றிய சீர்திருத்தக் கருத்துக்களுக்கு உருக்கொடுத்து ஒளியேற்றியவர் அன்னை நிவேதிதா ஆவார். அவர்களிடம் கொண்ட தொடர்பு பாரதியாரின் உலகளாவிய நோக்கிற்குப் பக்கபலமாய் நின்றது. இத்தகைய பரந்த பார்வையே நாட்டின் அடிமை வாழ்வு பற்றியும் பெண்ணுரிமை, சாதி, சமய வேறுபாடுகள் போன்ற கருத்துக்கள் அமைந்த பாடல்களை எழுதப் பாரதியைத் தூண்டின. "மகனே, உன் மனத்தில் பிரிவுணர்ச்சியை நீக்கு. சாதி, மதம், குலம், கோத்திரம் என்ற அநாகரிகமான வித்தியாசங்களை விடு. அன்பை மட்டும் அகத்தில் கொள். பிற்காலத்தில் நீ ஒரு தீரனாகச் சரித்திரப் பிரசித்தி பெற்ற வேதனாக வருவாய்" என்ற அருள்வாக்கினால் பாரதியை அரவணைத்தார்.

பிறகு பாரதிக்குத் திருமணம் ஆகவில்லையா என்று அன்னை கேட்டார். தமக்குத் திருமணமாகி இரண்டு வயதுப் பெண் குழந்தை இருப்பதாகப் பாரதி பதிலிறுத்தார். பின் ஏன் மனைவியை உடன் அழைத்து வரவில்லை என அன்னை வினவினார். இன்னும் மனைவியைச் சரிசமமாகப் பொது இடங்களுக்கு அழைத்துச் செல்லும் வழக்கம் தங்கள் நாட்டவரிடம் இல்லை என்று மறுமொழி பாரதி தந்தார். இதைச் செவிமடுத்த நிவேதிதா மிகச் சினந்து, "சமூகத்தில் பாதி அடிமைப்பட்டிருக்கையில் மறுபாதி விடுதலை பெறமுடியுமா? போனது போகட்டும். இனி அவளைத் 'தனி' என்று நினைக்காமல் உனது இடதுகை என மதித்து மனத்தில் இவளைத் தெய்வம் எனப் போற்றி நடந்து வா" என்று அன்னை திருவாய் மலர். அப்படியே வாக்களித்துக் கொடுத்தார் பாரதி. 1908, 1909, 1910 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக வெளியிட்ட தமது முதல் நான்கு நூல்களையும் அன்னைக்குப் பாரதி படையலாக்கியுள்ளார்.

கல்கத்தா நகர் அருகே கண்ட மறுகணமே 'வா மகனே வா' என்று பாரதியை அழைத்து ஆட்கொண்ட அன்னை நிவேதிதாவை

மானுட வீணையில் இறை உணர்வுகளை இசைத்த தாயாகப் பாரதி கருதியதாகச் சிற்பி சுட்டுகின்றார்.

"பெண் விடுதலைப் பிரளயமாய்
என்னை உருமாற்றியதும்
மண் விடுதலைக்கு என்னை
வடிவேலாய்ச் சமைத்ததும்
அன்னை நிவேதிதா
அருட்பார்வை தந்த வரம்"

என்று அன்னை நிவேதிதாவின் அருட்பார்வை பாரதியிடம் நிகழ்த்திய மறுமலர்ச்சியைச் சிற்பி நமக்கு உணர்த்துகின்றார்.

"மகாபாரத யுத்த
களப் போர்த் தருணம்
அர்ச்சுனனாய் எனை
ஆக்கி நிறுத்திய
கண்ணன் - என் சற்குரு
நிவேதிதா தேவி"

என்ற வரிகளில் அன்னை நிவேதிதாவைப் பாரதி தம் குருவாக ஏற்றுக் கொண்டதைச் சிற்பி ஏற்றமுற இசைக்கின்றார்.

அன்னை நிவேதிதாவைச் சந்திப்பதற்கு முன் பாரதி எழுதியதெல்லாம் வெறும் இலக்கணச் செய்யுள்களாம். ஆனால் அன்னையைச் சந்தித்த நாள் முதல் பாரதியின் பேனா முனை கவிதை ஆச்சரியங்களை வெளிப்படுத்தியதாம். ஐந்து வயதாகி அறியாப் பருவத்தில் தம் அன்னையை இழந்த பாரதியின் கண்கள் ஞானத்தாயாகிய அன்னையை இழந்த பொழுதில் குருதி கசிந்ததாம். அன்னையைப் பிறர் எள்ளி நகையாடிய பொழுது, உண்ணாநோன்பு பூண்டு, 'தாயே, தாயே' என விக்கி விக்கி அழுது அலறியதாகப் பாரதியைத் தம் கவிதை வரிகளில் சிற்பி காட்டியுள்ளார்.

அக நோக்கில் ஆழ்த்திய அரவிந்தர்

புதுவை வாழ்க்கையில் பாரதி பெற்ற மாற்றத்திற்கு அடிப்படையாக அரவிந்தரைச் சுட்டலாம். புறநோக்கிலேயே

வாழ்வைக் கழித்து வந்த பாரதியைத் திருப்பி அக நோக்கில் அவரைச் செலுத்திய பெருமை அரவிந்தரையே சாரும். பன்மொழி அறிவு பெற்ற இவ்விருவரும் விடுதலைப் போரில் ஈடுபட்டதோடல்லாமல் விடுதலைக்கு வேண்டிய கூறுகளுள் ஆன்மீகத்தையும் ஒன்றாகக் கருதினர். பாரதி அரவிந்தரிடம் உருக்கு வேதம் பயின்றார். அவரது நட்புக்குப் பின்னரே கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்றவற்றைப் படைத்ததுடன் கீதைக்கு முன்னுரையும் பாரதி எழுதினார். எனவே, பாரதியின் படைப்புக்களில் அரவிந்தர் பெருமகனின் தாக்கம் ஓரளவு இருந்ததெனக் கருத இடமுண்டு.

இத்தகைய தாக்கத்தைப் பாரதியிடம் ஏற்படுத்திய அரவிந்தரிடமிருந்து 1910 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஓர் அஞ்சலை எடுத்துக் கொண்டு ஒரு வங்க இளைஞர் புதுவை வந்தார். தாம் புதுவை வரத் தீர்மானித்து விட்டதாகவும் குறித்ததோர் நாளில் ஒரு பிரெஞ்சுக் கப்பலில் வருவதாகவும் தம்மைச் சந்தித்து அழைத்துச் செல்லுமாறும் புதுவையில் தாம் மறைவாகத் தங்கியிருக்க இடமொன்றை ஏற்பாடு செய்யும்படியும் புதுவையைச் சார்ந்த பார்த்த சாரதிக்கு அரவிந்தர் எழுதியிருந்தார். இவ்வஞ்சலைச் சீனிவாசாச் சாரியார் பாரதியிடம் காட்டினார். பிறகு இருவரும் கலவைச் சங்கரன் செட்டியாரிடம் போனார்கள். அரவிந்தர் செட்டியார் வீட்டு மாடியில் வாழ ஏற்பாடாயிற்று. குறித்த நாள் மாலை கப்பலில் அரவிந்தர் புதுவை வந்து சேர்ந்தார். பாரதியும் சீனிவாசாச்சாரியும் படகில் ஏறிக் கப்பலுக்குச் சென்று அரவிந்தரைச் செட்டியார் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

கலவைச் சங்கரன் செட்டியாரின் மாளிகை மாடியில் அரவிந்தரைப் பாரதி குடியிருக்கச் செய்தமையைப்,

“புதுவைக்கு நான் - சென்ற
இரண்டாம் ஆண்டில்
பாபுவும் வந்தார்
உடுத்த உடையும்
அடுத்த வேளை உணவும்
எங்கே என்று
அறியா நிலையில்
கலவை சங்கரன் செட்டியார்

மாளிகை மாடியில்
குடி இருத்தினோம்”

என்ற வரிகளின் வாயிலாகச் சிற்பி மெய்ப்பித்துள்ளார். அரவிந்தர் மகா ஞானி மட்டுமல்லர். அவர் சிறந்த யோகியும் ஆவார். வேத விற்பன்னராகவும் உபநிடத வித்தகராகவும் விளங்கிய அரவிந்தர் தமக்குள் இதிகாசச் சாரங்களை படித்ததாகப் பாரதி கூறியதாகச் சிற்பி கூறுகின்றார்.

“ஒரு கலாசார மடை மாற்றம்
என் கவிதையிலும் திசை மாற்றம்
யாக சத்தியும்
யோக சித்தியும்
என் பனுவல்களில்
குறியீடும் யதார்த்தமும் ஆயின”

என்று பாரதியின் படைப்புக்கள் பெற்ற அரவிந்தத் தாக்கத்தைச் சிற்பி நம் சிந்தனையில் தங்க வைக்கின்றார்.

பாரதி ஆட்கொண்ட தாசன்

பாரதிதாசன் எனப் புனை பெயர் சூட்டிக் கொண்டமைக்கான கரணியத்தைக் ‘குயில்’ இதழில் (1961 இல்) பாரதிதாசன் இவ்வாறு வெளியிட்டிருக்கிறார்.

“நான் பாரதிதாசன் என்று புனை பெயர் வைத்துக் கொண்டுள்ளேன். அதற்குக் கரணியம் அப்போது அவர் உள்ளத்தில் முதலிடம் பெற்றிருந்ததுதான். சாதிக் கொள்கையை நன்றாக, உண்மையாக எதிர்த்தவர் பாரதியார் தான். அவருக்கு முன் பன்னூறு ஆண்டுகளுக்கு முன் அவ்வாறு சாதிக் கொள்கையை எதிர்த்தவரை நான் கண்டதில்லை. பாரதி எதிர்த்துப் பணிபுரியத் தொடங்கிய பன்னாட்களுக்குப் பின்னரே பெரியார் இயக்கம் தோன்றியது. நான் ஆதரித்ததும் பாரதிதாசன் என்று நான் புனைபெயர் வைத்துக் கொண்டதும் ஏதாவதொரு கூட்டத்தாரிடம் நன்மையை எண்ணியன்று; சாதி ஒழிப்பு விளம்பரமாதல் வேண்டும் என்பதற்காகவும் பாரதியாரைப் போல் எளிய நடையில் மக்களுக்கு இன்றைக்கு வேண்டிய கருத்தை வைத்துப் பாடல் இயற்றல்

வேண்டும் என்பதைப் புலவரும் நினைவூட்ட வேண்டும் என்பதற்காகவுமே.”

‘தராசு’ என்ற இதழ்க் குறிப்பில் பாரதிதாசன் ‘எழுக நீ புலவன்’ என்று பாரதியார் தம்மை வாழ்த்திய செய்தியை அவரே பதிவு செய்திருக்கிறார். ‘எங்கெங்கு காணினும் சக்தியடா’ என்ற பாடலைப் பாடக் கேட்ட பாரதி ஓர் அருமையான நல் வாழ்த்தைத் தாசனுக்கு நல்கினார். பாரதிதாசன் பற்றிய பாரதியாரின் நம்பிக்கை வீண் போகவில்லை. ஒரு தீபத்தில் கொழுத்த தீப்பந்தமாகப் பாரதிதாசன் சுடர் வீசினார். பாரதிதாசனைப் போலப் பாரதியாரைக் கவிதையில் சித்திரித்தவர் யாருமிலர் இருபதுக்கும் மேற்பட்ட கவிதைகளாலும் பல அரிய கட்டுரைகளாலும் பாரதியார் நினைவுகளை நமக்கூட்டியவர் பாரதிதாசன். தமக்குப் பேரன் பிறந்த பொழுது ‘பாரதி’ என்று பாரதிதாசன் பெயர் வைத்தார். அன்னை நிவேதிதா பாரதியை ஆட்கொண்டது போல் பாரதி பாரதிதாசனை தமக்குரியவராக ஆட்கொண்டதை,

“நெஞ்சில் பதைப்பும்
விழி விளிம்பில் கசிவுமாக .....
கட்டித்தழுவிக் கொண்டேன்
என் நெஞ்சு
சுப்புவின் நெஞ்சுடன்
இணைந்து விம்மியது

என் அன்புச் சாம்ராச்சியத்தில்
ஒன்றிப் போனான் சுப்பு
.....
என்னைப் போலவே பாடி
என் இன்னொரு பகுதி
ஆனான் சுப்பு”

என்ற கவிதை வரிகளில் சிற்பி அரங்கேற்றியுள்ளார்.

வழித்துணை நண்பர் வ.ரா

மணிக்கொடி வார இதழின் ஆசிரியர் வ.ரா. ஆவார். பாரதி என்றால் உயிர் என்பது அவருடைய பேச்சிலும் எழுத்திலும்

தெரிந்தது. 'காந்தி' என்ற திங்கள் இதழில் 'சுப்பிரமணிய பாரதியார்' என்ற தலைப்பில் பாரதியின் வாழ்க்கை வரலாற்றைத் தொடர் கதையாய் அவர் எழுதத் தொடங்கினார். பாரதி என்ற மேதையின் பலதரப்பட்ட உண்மைகள் அக்கட்டுரைகள் வாயிலாக வெளியாகின. தம் உயிராகக் கருதிய வ.ரா. பாரதியின் நட்பு வட்டத்துக்குள் வந்த நிகழ்வினைச் சிற்பி சுவையாகச் சுட்டுகின்றார்:

அரவிந்தரைப் பார்க்கப் பாரதியின் துணையை வ.ரா. நாடியுள்ளார். தம் விருப்பத்தைப் பாரதி போற்றிய குறுந்தமிழில் வெளிப்படுத்தாமல் அமிலமாகப் பாரதி கருதிய ஆங்கிலத்தில் வ.ரா. வெளிப்படுத்தியதால் அதனை விரும்பாத பாரதி அவருக்குப் பதில் சொல்லாமல் பக்கத்திலிருந்த நண்பரை வ.ரா.விடம் பேசுமாறு பணித்துள்ளார். பாரதி மொழியுணர்வைத் தக்கவாறு புரிந்து கொண்ட கற்பூர அறிவு பெற்ற இளைஞராகிய வ.ரா. அந்நிய மொழியில் பேசியதற்காகத் தம்மை மன்னிக்குமாறு பாரதியை வேண்ட, அதன் பின்னரே, பாரதி வ.ரா.வை ஏற்றுக் கொண்டமையை,

"அந்த இளைஞனை
என் வட்டத்துக்குள் வர
அதற்குப் பிறகு தான்
அனுமதித் தேன்"

என்ற வரிகளின் வாயிலாகச் சிற்பி எடுத்துரைத்துள்ளார். நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த வ.வே.சு அய்யர் புதுவையை விட்டுப் பாரதி நீங்கிய பொழுது அவரை ஆதரவாய்த் தோளைத் தழுவி விடைதந்தார் என்று சிற்பி குறிப்பின் வழி அறிகின்றோம்.

அடக்கமிகு ஆச்சாரியார்

பாரதியின் தேசிய முயற்சிகளுக்கெல்லாம் உறுதுணையாக இருந்த மண்டையம் குடும்பத்தைச் சார்ந்த அடக்கமிகுந்த பெரியவர் தான் மண்டையம் சீனிவாசாச்சாரியார் ஆவார். எதிர்பாராத நிலையில் காற்றுத்தேவன் புதுவையைக் கடும் சோதனைக்கு உள்ளாக்க, அழகிய புதுவை நகரம் அனுமன் புகுந்த இலங்கை போல் அழிந்து கிடந்தது. வ.வே.சு. அய்யரைத் துணைக்கொண்ட பாரதி மண்டையம் ஆச்சாரியாரையும் தம்முடன் இணைத்துக்கொண்டு

புதுவையைப் புதுப்பிப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கும் மக்களிடமிருந்து பணத்தை நன்கொடையாகப் பெற்று முதல் வேலையாகப் பசித்த ஏழை மக்களுக்குக் கஞ்சி காய்ச்சி வழங்கினார்; அடுத்த வேலையாகச் செத்த பறவைகள், மாடு கன்றுகளை அகற்றிப் புதுவையைத் தூய்மையாக்கினார்; மற்றொரு திட்மாகக் குடிசைகள் இழந்த வறுமைக் குடும்பங்களுக்கு ஒரு கூரை போட்டுக் கொடுத்தார். இவற்றிற்கெல்லாம் மண்டையம் சீனிவாசச் சாரியார் பாரதிக்குத் துணை நின்றுள்ளார். அரசு திட்டங்கள் இயற்றி நன்மை செய்வதற்கு முன்னரே தம் குழு செயல்பட்டு மக்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்ததால் புதுவை மக்கள் நன்றியுடன் பாரதியையும் அவர் குழுவினரையும் பாராட்டினர் என்ற நிகழ்வினைப்,

புதுவையின்
மக்கள் அரசாக
எம்குழு செயல்பட்டது
மக்களின் நன்றிக்குரல்
மனதை நந்தவனமாக்கியது”

என்ற வரிகளின் வழியாகச் சிற்பி நம் நினைவிற்குக் கொணர்ந் துள்ளார். புதுவையை விட்டுப் பாரதி நீங்கிய பொழுது வருத்தம் தோய்ந்த புன்னகையுடன் பாரதியை ஆச்சாரியார் வழியனுப்பியதாக சிற்பி வழி அறிகின்றோம்.

புதுவையில் மூவரின் விடுதலை முயற்சி

நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த வ.வே.சு. அய்யர் வழக்கறிஞர் பட்டம் பெற இலண்டனில் படித்துக் கொண்டிருந்த பொழுது இந்தியாவில் ஆங்கில ஆட்சி செய்து வந்த கொடுமைகளை எடுத்துக்கூறி வீரமுழக்கம் செய்தார். ஆங்கில அரசு அவரைச் சிறைப்படுத்தக் கருதியது. உடனே மாறுவேடம் பூண்டு கடலில் குதித்து நீந்திய பிரெஞ்சுக் கடற்கரையை அவர் அடைந்தார். அங்கிருந்து பல துன்பங்களுக்கு ஆளாகி அவர் புதுவை.வந்து சேர்ந்தார். பாரதியாருடனும் அரவிந்தருடனும் அவர் தொடர்பு கொண்டார். இம்மூவரும் புதுவையில் இருந்து கொண்டே நாட்டு விடுதலைக்கு இணைந்து தொண்டாற்றினர். இச்செய்தியினை,

"அய்யரும் புதுவை வர
நாங்கள் மூவரும்
மெய்யியல் பயணங்களில்
சக யாத்திரிகர் ஆனோம்"

என்ற வரிகளில் சிற்பி பொற்புற எழுதிக் காட்டியுள்ளார்.

அன்பில் திளைத்த அம்மாக்கண்ணு

இத்தகைய ஆற்றலும் அறிவும் வாய்ந்த சான்றோர்களிடம் மட்டுமல்லாமல் மிகச் சாதாரணமானவர்களிடமும் பாரதி தூய நட்புக் கொண்டிருந்தார் என்பதற்குச் சான்றாகப் பணிப்பெண் அம்மாக்கண்ணுவின் உறவைச் சுட்டுவது மிகப்பொருத்தமுடைய தாகும். அம்மாக்கண்ணு பொன்னு முருகேசன் என்ற செல்வர் வீட்டின் பணிப்பெண் ஆவாள். அவள் பாரதியிடம் வாஞ்சை மிகுதியாய்க் கொண்டிருந்தாள். அவள் பற்றிய வ.ரா.வின் கருத்துரையை நம் கவனத்தில் கொள்வோம்:

"வேலைக்காரி அம்மாக்கண்ணு பாரதியாரிடம் காண்பித்த பக்தியையும் பிரியத்தையும் வர்ணிக்க என்னால் முடியாது. அம்மாக் கண்ணு தனிப்பிறவி. அவள் அஞ்சாநெஞ்சம் படைத்தவள்."

மனைவியிடம் என்ன சினமோ, யாரிடமும் சொல்லாமல் பாரதி தனியே கிளம்பிவிட்டார். பாரதி கிளம்பிப்போய்விட்ட சேதி தெரிந்து அனைவரும் அவரைத் தேடினர். தொடர்வண்டி நிலையத்தில் இயல்பாகச் சந்தித்த பாரதிதாசன் அவரைச் சமாதானம் செய்து திரும்ப அழைத்து வந்தார். 'புஷ்' என்று புதுவையில் அழைக்கப்பட்ட வண்டியில் பாரதியும், பாரதிதாசனும் வந்து கொண்டிருந்தார்கள். இதை அறிந்த அம்மாக்கண்ணு வழியில் அவர்களைச் சந்தித்தாள். கையில் வைத்திருந்த சுண்டல் முதலிய தின்பண்டங்களை அவர்களுக்கு அம்மாக்கண்ணு வழங்க, அவற்றை உண்ட பாரதி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். இந்நிகழ்வைச் சிற்பி கீழ்வருமாறு தம் ஏற்றமிகு கவிதை வரிகளில் சுவையேற்றிக் குறிப்பிடுகின்றார்:

"ஏனுங்க சாமி
இது உங்களுக்கே
நல்லாருக்கா?

இம்மா நேரமா
அம்மா அழுவுதே .....
என்ற குரல் கேட்டு
இருவரும் நின்றோம்
அம்மாக் கண்ணு!
பசி தாங்க மாட்டீங்களே
இந்தாங்க பட்டாணிசுண்டல்
துண்ணுசாமி
.....
அம்மாக்கண்ணு போனதும்
புஷ் வண்டி ஏறினோம்
ஒரு பிடி சுண்டலை
வாயில் போட்ட சுப்பு
அடடா அமுதம் .....
அமுதம் என்றான்.
என்றதும் கற்பனை
எகிறியது எனக்குள்
புதுவை
பூலோக சொர்க்கமாயிற்று
ஒதியஞ்சாலை
கற்பகப் பூங்கா வாயிற்று.
ஓட்டடா ரதத்தை
என்றேன்
ஓயாத சிரிப்பு சுப்புவுக்கு"

என்று சிறுநிகழ்வையும் சீரிய முறையில் சித்திரிப்பதில் வல்லவர் சிற்பி ஆவார்.

பாரதி சிறைப்பட்டிருந்த பொழுது அவரைப் பார்க்க வந்த அம்மாக்கண்ணுவின் மைந்தனான வேணு தின்பண்டம் நிறைந்த பொட்டலத்தைத் தன் அம்மா கொடுத்ததாகக் கூறிப் பாரதியிடம் கொடுத்த பொழுது,

"பலே ..... பலே .....
அம்மாக்கண்ணு கை பக்குவம்
அருமையா இருக்குமே"

என்று பாரதி அம்மாக்கண்ணுவின் கைப்பக்குவத்தைப் பாராட்டியதைக் கவிஞர் சிற்பி பக்குவமாய்க் காட்டியுள்ளார்.

அம்மாக்கண்ணுவின் ஆசைப்பிள்ளை

வேணு என்பவன் அம்மாக்கண்ணு பெற்றெடுத்த ஆசைப் பிள்ளையாவான். குத்துச்சண்டையில் அவன் வல்லாளன் ஆவான். அவனைத் தம் ஆருயிர் உடன்பிறப்பாகப் பாரதி கருதினார். புதுவையில் இருந்த பொழுது தம்மைப் பொன்போல் காத்தமைக்காக வேணுவைப் பாரதி நன்றியுடன் நினைவு கூர்ந்தார். சிறையில் பாரதியைப் பார்த்ததினால் எழுந்த துன்பத்தினால் மாவீரன் வேணுவுக்குப் பேச்சே வரவில்லை. குசேலர் கண்ணனைப் பார்க்கச் சென்றபோது அவல் கொண்டுவந்தது போல் வேணுவும் பாரதியைச் சிறைக்கூடத்தில் பார்க்க வந்தபொழுது தன் அம்மா கொடுக்கச் சொன்னதாக அன்பைச் சுமந்த பொட்டலம் ஒன்றைப் பாரதியிடம் தந்தார். ஆசையோடு வேணு அப்பொட்டலத்தைப் பாரதியிடம் நீட்ட, வார்டன் ஒருவனின் தடி குறுக்கே நீண்டு தடுத்தது. அதைக் கண்ட வேணுவின் முகம் சினத்தால் சிவந்தது. இவ்வரலாற்று நிகழ்ச்சிக்குரிய வேணுவுக்கும் பாரதிக்கும் இடையே நிலவிய பேரன்பினை,

> "இந்தக் கொட்டடிக்
> குத்துச் சண்டை வேணு
> அம்மாக் கண்ணுவின்
> ஆசைப் பிள்ளை
> என் ஆருயிர்ச் சகோதரன்
> புதுவையில் என்னைப்
> பொன் போல் காத்தவன்"

என்ற வரிகளின் வழியாகச் சிற்பி நம்மைப் புரியுமாறு செய்துள்ளார். வேணுவின் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட பொழுதுதான் பாரதி கவனத்தைத் தம் பாட்டால் ஈர்த்து அவரது நட்பு வட்டத்தில் தம்மையும் இணைத்துக்கொண்ட பெருமையைப் பெற்றவர்தான் பாரதிதாசன் ஆவார் என்ற உண்மையையும் சிற்பி தம் கவிதையில் சுட்டத் தவறவில்லை.

திலகரின் தீவிரத்தாக்கமும் காந்தியின் அருளணைப்பும்

தொடக்கத்தில் திலகரைப் பின்பற்றி அரசியல் தொடங்கிய

கவிஞர். பாரதி அவரை அன்பு மலர்களால் யாத்த கவிதை பாடியுள்ளார். 'வாழ்க திலகன் நாமம்' என்ற கவிதையில்,

"துன்பமென்றும் கடலைக் கடக்குந்
தோணி யவன்பெயர்
சோர்வென்னும் பேயை யோட்டுஞ்
சூழ்ச்சியவன் பெயர்
அன்பெனும் தேன் ஊறித் ததும்பும்
புதுமலர் அவன் பேர்"

என்று மனம் சிலிர்க்கப் பாரதி பாடியுள்ளார். தென்னாப்பிரிக்கப் போராட்டப் பொழுதில் காந்தியடிகளுக்கு நிதி திரட்டி அனுப்பியவர் பாரதி. ஆயினும் அரசியலில் திலகரிடம் இருந்து காந்தியம் நோக்கிப் பாரதியார் திரும்பக் காலம் பிடித்தது. தம் வாழ்நாளின் இறுதி நெருங்குகையில் காந்தி நடத்திய சத்தியாக்கிரகப்போரின் ஆற்றலைப் பாரதி அடையாளம் கண்டுகொள்கிறார். இந்திய மொழிகளிலேயே தலைசிறந்த காந்தியப்பனுவல் என்று கருதத்தக்க 'வாழ்க நீ எம்மான்' பஞ்சகத்தில் 'மகாத்மா' என மனங்குளிரப் பாரதி பாடுகின்றார். 'பாரத மாதா நவரத்னமாலை' என்ற பாடலில் ஒரு தீர்க்க தரிசனத்தையே பாரதியார் முன் வைக்கிறார்.

"காந்திசொல் கேட்டால் காண்பார்
விடுதலை கணத்தினுள்ளே"

என்பது அந்த வாக்காகும். திலகரைத் தொடக்கத்தில் அரசியல் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்ட பாரதிக்கு நாளடைவில் காந்தியத் தாக்கம் ஏற்பட்டதையும் அவ்விரு தூய சான்றோர்களிடம் பாரதி உறவு பூண்டிருந்ததையும்

"சூரத் காங்கிரசில்
தீவிரவாதத் திலகரின் கட்சியில்
முதல் அணி வீரன்
இன்று காலம் அழுத்தம் திருத்தமாய்
கண்துடைத்துப் பார்க்கிறது
என் நம்பிக்கை விண்மீனாய்
காந்தி சுடர் வீசுகிறார்
கன்னி குமரியையும்

பொன்னிமய முடியையும்
ஒன்றுபடுத்துகிறது
காந்தியின் குரல்
இனி அவர் சொல்வது தான்
விடுதலைப்போர் நிகழ்ச்சி நிரல்”

என்ற வரிகளின் துணைக்கொண்டு சிற்பி உறுதிப்படுத்திக் காட்டியுள்ளார்.

தேசம் உய்ய வந்த மகான்

இந்திய மண்ணின் ஆன்மீகச் சிந்தனை அயலகத்தில் முதன் முறையாக ஒலித்த விவேகானந்த ஞானியும் பாரதியின் போற்றுதலுக்கும் பாராட்டிற்கும் உரிமைப்பட்டவராய் இருந்தார் என்ற உண்மையினை,

“விவேகானந்தப் பரமஞானி
என் குருவின் குரு
எனவே என் பரம குரு
சுயாதீனக் கிளர்ச்சிகளுக்கு
அவரே ஆதிமூலம்
மாசிலாத குரவன் அச்சங்கரன்
மறுபடியும் இந்த
மண்ணுக்கு வந்ததுபோல்
தேசு மிகும் சோதியாய்
தேசம் உய்ய வந்த மகான்
விவேகானந்தர்”

என்னும் வரிகளின் வாயிலாகச் சிற்பி நிறுவுகிறார்.

அன்பே உருவான கோவிந்தசாமி

புதுவையில் பாரதிக்குப் பல பண்டாரங்களும் சாமியார்களும் நட்பினராய் இருந்துள்ளனர். குள்ளச்சாமி என்ற மாங்கொட்டைச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துச்சாமி என்ற பரதேசிகள் ஒவ்வொருவரிடமும் ஓர் உயர் பண்பைப் பாரதி கண்டார். கோவிந்தசாமி என்ற பண்டாரம் பாரதிக்கு இறந்துபோன

அவருடைய தந்தை, தாய் ஆகியோரின் உருவங்கள் தெரியும்படித் தமக்குக் காட்டியதை,

"அன்பே திருவுருவாய்
அவதாரம் எடுத்த கோவிந்தசாமி
என்றோ மறைந்த
எந்தை உருக் காட்டினான்
என் சொல்வேன், மீண்டும்
அன்னை லட்சுமியின்
அழகு வடிவெடுத்தான்
என் குருவாய் நிலைத்து விட்டான்"

என்ற வரிகளில் சிற்பி விளக்கமுறக் காட்டியுள்ளார்.

குறியீட்டுத் தத்துவக் குள்ளச்சாமி

மண் போலே, சுவர் போலே வாழ்தல் வேண்டும் என்று குறிப்பால் தமக்கு உணர்த்தியதாய்ப் பாரதி கூறியதை,

"ஆயிரம் நூல் எழுதிடினும் முடிவுறாது
அய்யன் குள்ளச்சாமி
ஞானானு பவத்துக்கு
.....
குட்டிச்சுவரும், கிணறும்
பரிதியும் காட்டிக்
குறியீடாய்த் தத்துவத்தைப்
புரிய வைத்தான்"

என்ற வரிகளில் சிற்பி சுட்டிக்காட்டி உள்ளார்.

தேவிபதம் மறவாத் தீரஞானி

யாழ்ப்பாணச்சாமியின் அருளையும் துய்க்கும் பேறு பெற்றவர் பாரதியார் என்பதை,

"அருளமுதம் எனக்குள்
சொரிய விட்ட ஞானி
'தேவி பதம்' மறவாத
தீரஞானி யாழ்ப்பாணசாமி"

என்ற வரிகளில் சிற்பி நிலைநிறுத்திக் காட்டியுள்ளார். இம்மூவரும் பாரதி தேடிக்கொண்ட தெய்வ மனிதர்கள் என்றும் தமக்குக் கோடிநலம் அளித்த ஆத்ம விஞ்ஞானிகள் என்றும் பாரதியார் குறிப்பிட்டதைச் சிற்பியும் தம் கவிதையில் குறிப்பிட்டுள்ளார். இங்ஙனம் பாரதி தூய்மைகெடாச் சான்றோர்களிடமும் சாமியார்களிடமும் கொண்டிருந்த நேயத்தொடர்பினைச் சிற்பி அகலமாகவும் ஆழமாகவும் தம் கவிதையில் விளக்கியுள்ளமை நம் நெஞ்சம் தொடும் விஞ்சை ஆகும்.

மொழி, இன ஈடுபாடும் இலக்கியத் தாகமும்

பண்டிதத் தமிழைப் பாமரனும் புரிந்து கொள்ளும் அளவிற்கு எளிமைப்படுத்திய ஏற்றமிகு பணியை முதலில் தொடங்கி வைத்தவர் பாரதியே ஆவார். கரடு முரடாகக் காணப்படும் பலாப்பழத்திற் கொப்பாக இருந்த புலமைத் தமிழைச் சுவைப்பதற்கு இனிமையும் எளிமையும் தருகின்ற வாழைப்பழம் போல் மக்கள் தமிழாக மலரச் செய்த பெருமை மறுமலர்ச்சிக்கவிஞரான பாரதியையே சாரும். தாய்மொழியாம் தமிழ்பால் தள்ளரிய பற்றுப் பாரதியிடம் இருந்ததென்பதை இப்பாரே அறியும். ஆனால் பண்டுகண்ட சீரையும் சிறப்பையும் தமிழ் இழந்து, கேட்பாரற்ற நிலையில் கிடந்ததை அறிந்து பாரதி மனத்தளவில் மிக நொந்தார். உலகத்திறமை பெறுவதற்குரிய உயர் சிறப்புக்கள் அனைத்தையும் தமிழ் அடையப் பெற்றிருந்தாலும் மக்களிடம் அது அடையப் பெறாமலிருந்ததை நினைந்து நெக்குருகினார். எனவேதான் பாரதி,

> "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்
> தொழுது படித்திடடி பாப்பா!"

என்று தமிழின் இறைத்தன்மையைச் சிறு குழந்தைப் பருவத்தி லிருந்தே தமிழர் அறிந்திருக்க வேண்டுமென்பதில் பாரதி மிக ஆர்வம் கொண்டிருந்தார்.

> "வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
> வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ"

என்ற வரிகளில் தாய்மொழி தவிர்ந்த பிறமொழி வெறியர்களைப் பைந்தமிழ்ப் பாரதியார் வேகமாகச் சாடியுள்ளார். இழந்த சிறப்பை

மீண்டும் தமிழ் பெற்று வளர்ந்தோங்க நாம் ஆற்ற வேண்டிய கடமை பற்றிப் பாரதி வரிகளிலேயே காண்போம்.

"தமிழ் மக்கள் தமது மொழியை மேன்மைப்படுத்த விரும்பினால் அதற்கு முதலாவது செய்ய வேண்டிய காரியம் ஒன்று உண்டு. அதாவது, கால விசேஷத்தால் நமது தேசத்திலே விசாலமான லௌகீக ஞானமும் அதனைப் பிறருக்கு உபயோகப்படும்படி செய்வதற்கு வேண்டிய அவகாசம், பதவி முதலிய சௌகரியங்களும் படைத்திருப்பவராகிய இங்கிலீஷ் படித்த வக்கீல்களும் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்து வாத்தியார்களும் தமது நீதிஸ்தலங்களையும் பள்ளிக் கூடங்களையும் விட்டு நாம் தமிழரென்பதை அறிந்து நடக்க வேண்டும். பந்தாடும் போதும், சீட்டாடும் போதும், ஆசாரத் திருத்த சபைகளிலும், வருணாசிரம சபைகளிலும் எங்கும் எப்போதும் இந்தப் 'பண்டிதர்கள்' இங்கிலீஷ் பேசும் வழக்கத்தை நிறுத்தினால், உடனே தேசம் மாறுதலடையும். கூடிய வரை இவர்கள் தமிழிலெழுதக் கற்றுக்கொள்ள வேண்டும். இவர்கள் அத்தனை பேரும் தமிழ்ப் பத்திரிகை வாங்கிப் படிக்க வேண்டும். புஸ்தகரூபமாகவும், பத்திரிகைகளில் லிகிதங்களாகவும் இவர்கள் எழுதுகிற கதை, காவிய விளையாட்டு வார்த்தை, வினை வார்த்தை, சாஸ்திர விசாரணை, ராஜ்ய நீதி எல்லாவற்றையும் தமிழில் எழுத வேண்டும்.

தமிழ்நாட்டில் தேசியக் கல்வி என்பதாக ஒன்று தொடங்கி, அதில் தமிழ் மொழியை முதன்மையாக நாட்டாமல் மிகுதியான கல்வி ஆங்கிலம் மூலமாகவும் தமிழ் ஒருவிதத் துணை மொழியாகவும் ஏற்படுத்தினால், அது தேசியம் என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் பகையாக முடியும் என்பது பாரதியின் அழுத்தமான கருத்தாகும். தமிழ்நாட்டிலிருந்து முழுமையான நன்மையை எதிர்பார்க்க வேண்டுமானால் இந்த முயற்சிக்குத் தமிழ் மொழியே ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் அறைவிக்க வேண்டுமென்பது பாரதியாரின் வேண்டுகோளாகும். வானம் அளந்ததனைத்தையும் அளக்கும் அளப்பரிய ஆற்றல் பெற்ற தமிழ்பால் பாரதி கொண்டிருந்த தணியாக் காதலைச் சிற்பி சிறப்பாகவே தம் கவிதையில் குறிப்பிட்டு நம்மை மகிழ்விக்கின்றார்.

திருட்டில் படித்த தீந்தமிழ்

இளமைத் தோழரான சோமசுந்தர பாரதியும் பாவலர்

பாரதியும் திருட்டுத்தனமாய்க் கோயில் பல்லக்குகளின் நடுவே உட்கார்ந்து கொண்டு தமிழிலக்கியம் படித்தார்களாம். இவர்களின் வீட்டிலும் இன்பத் தமிழ் படிக்க அவ்வளவு தடையிருந்தது. தமிழ் படித்துக் கெட்டுப் போகிறார்களே என்ற வசவும் அவர்கட்குக் கிடைக்குமாம். இவ்வரலாற்று நிகழ்வை,

"ஆளரவமற்ற நடுப்பகல்
சிவன்கோயில் ஆனை
குதிரை வாகனங்கள்
மரக் காதுகள் சாய்த்துக்
குறுகுறுத்துக் கேட்க .....
மடலும் கோவையும்
மாலையும் படிக்கும்
விடலை வயது
ரகசியமாய்
விறலிவிடு தூதும் படிப்போம்
அப்பாவுக்குத் தெரிந்தால்
உரித்து விடுவார் தோலை
பார்வையாலேயே!"

என்ற வரிகளில் சிற்பி புலனாக்கியுள்ளார்.

கசக்கும் வேம்பு பேசிய இன்பத்தமிழ்

தாமிரவருணிக் கரை ஓரமாக வளர்ந்து நின்ற ஒரு நெடிய வேப்ப மர நிழலில் உறங்குகின்ற பொழுது வேப்பமரமே தமிழில் பாரதியிடம் உரையாடியதாகப் பாரதி குறிப்பிடுவதைக்

"கேளாய் மானிடனே
தமிழில் தான் பேசுகிறேன்
அதெப்படி என்கிறாயா?
அகத்தியர் தந்த வரம் ....."

என்ற வரிகளில் சிற்பி வெளிப்படுத்தியுள்ளார். மரம் கூட மாத்தமிழ் பேசும் வேட்கை பெற்றிருக்கும் இத்தமிழ் மண்ணில் தமிழின் அருமை தெரியாத, மரத்துப்போன உணர்ச்சிக்கு உரிமைக்காரர்களான தமிழர் இனியாவது தமிழைப் போற்ற முன் வருவரா என்ற ஏக்கம்

பாரதிக்கும் ஏன் சிற்பிக்கும் பன்மடங்கு இருப்பதையும் நம்மால் உணர முடிகின்றது.

செப்பரிய செந்தமிழ் மதுரை

பாரதி சின்னாள்கள் ஆசிரியப்பணி ஆற்ற இடம் தந்த மதுரையம்பதி மணக்கும் தமிழ்ச் சங்கத்தின் இருப்பிடமாகவும் இருந்தமையால் கவிஞர் சிற்பி மதுரை மாநகரைச் 'செந்தமிழ்' என்னும் சிறப்படையுடன் புணரச் செய்து 'செந்தமிழ் மதுரை' எனத்தம் கவிதையில் அழைத்துத் தம் தமிழ்ப் பற்றையும் நமக்குப் பறை சாற்றியுள்ளார்.

புத்துயிர் ஊட்டும் கடமை

தன்னிகரில்லாத் தமிழைப் புதுப்பிக்க வேண்டுமென்று பாரதி உள்ளத்தில் குடியிருந்த சிந்தனையைத்

"தமிழுக்குப் புதிய உயிர்
தருவது என் கடமை
இலக்கியத்தில் புது ரத்தம்
பாய்ச்சுவது என் உரிமை

என்ற வரிகளில் சிற்பி வெளிச்சப்படுத்தியுள்ளார்.

அமில மழை ஆங்கிலம்

ஆங்கிலத்தில் பேசுகின்ற அரைவேக்காட்டுத்தன்மை கொண்ட தமிழரிடத்தில் அளவிறந்த சினம் பாரதிக்கு எழும் என்பதைக் கீழ்வரும் சுவையான நிகழ்ச்சியின் துணைக்கொண்டு சிற்பி நிலைநாட்டியுள்ளார்.

ஒரு மடைச் சாம்பிராணிக்கு ஒப்பான தமிழன் ஒருவன் மிகப் பொறுப்பற்ற நிலையில்,

"ஓய் ..... பாரதி
ஒங்க டிலக்
இப்ப என்ன
பண்ணீண்டிருக்கான்?"

என்று பாரதி வினவ, அது கேட்டுப் பொறுக்காத பாரதி பிரளய காலத்து உருத்திரனாகி,

"எழுந்திரடா.....
என்னடா 'டிலக்'
திலகர் என்று சொல்
தேசபக்த திலகத்தை
அடி முட்டாளே
டிலக் என்கிறாயா நீ!"

என்று கொதிப்பில் கொப்பளித்த வரிகளைக் கேட்டு, வந்தவன் வெலவெலத்துப் போனானாம். மன்னிப்புக் கேட்கும்வரை பாரதி அவனை விடவில்லையாம். மற்றுமொரு நிகழ்ச்சி.

புதுவையிலிருந்த அரவிந்தரைப் பார்க்கப் பாரதியின் துணையை நாடிய வ.ரா என்பவர் ஆங்கிலத்தில் பேச அதனைச் செவி மடுத்துச் சினம் கொண்ட பாரதியை,

"நல்லது..... பேசியது
நறுந்தமிழில் அல்ல
ஆங்கில மழை
எனக்கு அது அமில மழை யானது
மொழி அடிமைத்தனம்
முழு அடிமைத்தனம் அல்லவா?

என்ற வரிகளை விடையாக்கித் தந்ததன் மூலம் தமிழை இகழ்பவனைத் தாங்கிப் பிடிக்காமல் வேகமான சொற்களால் பாரதி தாக்கித் தீர்ப்பார் என்ற பேருண்மையைச் சிற்பி நம் கருத்தில் நிறுத்துகிறார்.

தமிழ் மக்கள் ஆங்கிலத்தில் அஞ்சல் எழுதுவது கூடப் பாரதியாருக்கு ஏற்புடையதாகவில்லை என்ற கருத்தைப் பாரதி வாழ்வில் நடந்த நிகழ்ச்சி கொண்டு சிற்பி விளக்கம் செய்துள்ளார். பாரதியின் இளவலான விசுவநாதன் பாரதிக்கு ஆங்கிலத்தில் எழுதிய அஞ்சலைச் சுவைக்க முடியாமல் போயிற்றாம். பதிலாகப் பாரதி விசுவநாதனுக்கு எழுதிய அஞ்சலில்,

"எனக்கு இனிமேல் இங்கிலீஷில்
காயிதம் எழுதாதே. நீ எழுதும்

தமிழ் எத்தனை கொச்சையாக
இருந்த போதிலும் அதைப்
படிக்க நான் ஆவலுறுவேன்”

என்று இடம் பெற்றுள்ள வரிகளின் மூலம் அயல்மொழி ஆளுமையை மிகக்கடுமையாக மறுக்கும் பாரதியின் நற்றமிழ் உணர்வை நம் கவனத்தில் சிற்பி பதிவு செய்து விடுகிறார். தமிழை அழிக்கத் தமிழன் கைகளே பயன்படுவதால் தன்னைத்தானே அழித்துக்கொண்ட பஸ்மாசுரனுக்கு ஒப்பாகத் தமிழரைப் பாரதி கருதினார் என்பதையும் சிற்பி தம் கவிதையில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

தமிழை முதன்மையாக்குக

“தம்பி, நான் ஏது செய்தேனடா? தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்தம் உண்டாகிறது. தமிழனை விட மற்றொரு சாதியான் அறிவிலும் வலிமையிலும் உயர்த்திருப்பது எனக்குச் சம்மதம் இல்லை. தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு சாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் எனது மனம் புண்படுகிறது. தம்பி, உள்ளமே உலகம். ஏறு! ஏறு! ஏறு! மேலே!” என்ற தமிழை மேம்படுத்திக் காட்டும் மேலான வரிகள் நெல்லையப்பருக்குப் பாரதி எழுதிய அஞ்சலில் இடம் பெற்றுள்ளன. இக்கருத்துக்கு அரண் சேர்ப்பதாய்ச் சிற்பியின் கீழ்வரும் வரிகள் காணப்படுகின்றன.

“பாரதத்து பாஷைகளில்
தமிழ் பின்தங்குவது
எனக்குச் சம்மத மில்லை
பாட்டுக் கச்சேரிகளில்
தமிழைப் புறந்தள்ளும்
சதியை வெறுக்கிறேன்
தமிழ்ச்சபைகளிலே எப்போதும்
அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில்
பழம்பாட்டுகளை மீட்டும் மீட்டும்
சொல்லுதல் நியாயமில்லை”

பாரதியின் தெளிந்த நம்பிக்கை

“எனது தமிழ்நூல்கள் யாவும்

வெளியாகுமானால் உலக இலக்கியங்களில்
உயர்வானதொரு ஸ்தானத்திற்கு எனது
நூல்கள் தமிழ் இலக்கியத்தை உணர்த்தும்.
அத்துடன் தமிழ்மக்கள் உலகமக்களின்
மதிப்பில் உயர்வர்.
தாகூரின் நூல்கள் வங்காளத்துக்கு
என்ன பெருமை சேர்த்துள்ளனவோ
அதே போன்ற பெருமையை எனது நூல்கள்
தமிழ் நாட்டுக்கு அளிக்கும்"

என்று சிற்பியின் கை வண்ணத்தில் மலர்ந்துள்ள கவிதை வரிகள் பாரதியின் தனியாத தமிழ்ப்பற்றை அறிவிப்பதோடல்லாமல் தமிழில் அவர் பெற்றிருந்த ஆழமான புலமைச் செருக்கையும் செம்மையாகக் காட்டுகின்றார்.

"வாழிய செந்தமிழ்
வாழ்க நற்றமிழ்
வாழிய பாரத மணித்திருநாடு"

என்ற பாரதியின் வரிகளையே மேற்கோளாக்கி அந்தந்த வரிகளுக்குள் பாரதியின் கனவு வாழ்வதாகச் சிற்பிச் சுட்டும் இடம் கருதத் தக்கதாகும்.

இனத்தின் எழுமுடியா வீழ்ச்சி

"திசைகெட்ட ஓடம்போல்
தேய்ந்த நிலை; சிறுமையினால்
பசையற்ற உள்ளங்கள்
பண்பிழந்த தமிழ்க்கூட்டம்" (ஆழ்கடலே கேள்!)

என இற்றைத் தமிழரின் தாழ்நிலையை வேதனையுடன் வெளிப்படுத்தியிருக்கும் சிற்பி தமிழ் மக்களின் தாழ்ந்து தரம் கெட்டுக் கிடக்கும் நிலையைப் பாரதி சுட்டியிருப்பதையும் தம் கவிதையில் இடம்பெறச் செய்துள்ளார்.

"எண்ணிலா நோயுடையார் - இவர்
எழுந்து நடப்பதற்கு வலிமையிலார்;
கண்ணிலாக் குழந்தை கள்போல் - பிறர்
காட்டிய வழியிற்சென்று மாட்டிக் கொள்வார்;

நண்ணிய பெருங்கலைகள் - பத்து
நாலாயிரங்கோடி நயந்துநின்ற
புண்ணிய நாட்டினிலே - இவர்
பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்”

என்ற வரிகளில் நெறிகெட்ட தமிழரைப் பொறிகெட்ட விலங்கு களாக்கிக் காட்டி,

“விதியே, விதியே, தமிழச்சாதியை
என் செய நினைத்தாய் எனக்குரையாயோ?”

என்று விதியிடமே பாரதி தமிழர் வாழ்வைப் பொறுப்பாக்கிக் காட்டும் பாரதி தமிழரைப் பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சி சொல்லும் அளவில் பான்மை கெட்டுப் பெயரளவில் மட்டும் தமிழர் எனக் கொண்டு ஊமையராகவும் செவிடராகவும் குருடராகவும் அவர்கள் வாழ்ந்து வந்த பழிபடர் இழிவாழ்க்கையை எடுத்துக் காட்டியும் உள்ளார். வீழ்ச்சியுற்று வீணாகிப்போன தமிழரின் தகுதியற்ற வாழ்க்கை பற்றிப் பாரதியார் கருதியிருந்ததைச் சிற்பி வரிகளில் இனிக் காண்போம்:

ஈரம் உலரா இழிவுத்தமிழன்

“மழை பெய்கிறது
ஊர் முழுதும் ஈரமாகி விட்டது
தமிழ் மக்கள் எருமைகளைப் போல
எப்போதும் ஈரத்திலேயே நிற்கிறார்கள்
ஈரத்திலேயே உட்கார்ந்திருக்கிறார்கள்
ஈரத்திலேயே நடக்கிறார்கள்
ஈரத்திலேயே படுக்கிறார்கள்
ஈரத்திலேயே சமையல்
ஈரத்திலேயே உணவு.
உலர்ந்த தமிழன்
மருந்துக்குக்கூட அகப்படமாட்டான்”

என்று வசன கவிதையில் பாரதியார் பயன்படுத்தியுள்ள வரிகளைக் கொண்டே உதவாக்கறையான தமிழர்களின் உருக்குலைந்து போன நிலையைச் சிற்பி தம் கவிதைத் தொடக்கத்திலேயே தொட்டுக் காட்டியுள்ளார்.

தன் மானம் இழந்த தமிழன்

வ.உ.சி. தொடங்கிய கப்பல் குழு வெள்ளைக்காரனுக்கே தமிழரால் விற்கப்பட்ட செய்தியைப் பாரதி புதுவையில் தம்மைச் சந்தித்த வ.உ.சி.யிடம் பரிமாறிய பொழுது,

"மாமா, உங்களுக்கு தெரியாதா
மானங்கெட்ட நாடு இது!"

என்று வ.உ.சி பதிலுரைத்ததாகக் காட்டும் சிற்பி,

"நாட்டை இகழாதீர்கள்
சிதம்பரம் -
மானங்கெட்ட மக்கள்"

என்று பாரதி குறிப்பிட்டதாகக் குறிப்பிட்டுள்ள வரிகளில் தமிழரின் தன்மான இழப்பினைத் தக்கவாறு உணர்த்தியுள்ளார்.

உணர்ச்சியற்ற ஊமைத்தமிழர்

"பிரக்ஞை இல்லாத தமிழரிடையே
பிறந்த கவிதைகள் சாகுமோ?"

என்று சிற்பி நம்மைப் பார்த்து வினாவும் வினாவில் உணர்ச்சியற்றவர் களாய்த் தமிழரைக் கருதிய பாரதியின் கருத்தைத் தொனிக்கச் செய்துள்ளார்.

நன்றி மறந்த தமிழர்

வ.உ.சி சிறை மீண்டபோது சிறைத் துன்பத்தால் தொழு நோயைத் தமக்கு உரிமைப்படுத்திக் கொண்ட சிவாவைத் தவிர அவரை வரவேற்க எவரும் வரவில்லை என்பதைப் புதுவையில் இருந்த பாரதி அறிந்த பொழுது தமிழ்நாடு பற்றி என்ன கருதினார் என்பதை,

"என்ன கொடுமையடா!
நன்றி கெட்ட தமிழ்நாடு
என் தோழன் சிறைமீண்ட போது

ஏனென்று கேட்கவில்லை
ஏறெடுத்துப் பார்க்கவில்லை”

என்னும் வரிகளில் சுட்டிக்காட்டியுள்ள சிற்பி தமிழரின் நன்றிகெட்ட தன்மையினையும் நயம்பட உரைத்துள்ளார்.

பாரதியின் இலக்கியத் தாகம்

இலக்கியச் செழிப்பும் பொலிவும் நிறைந்த மொழியே உலக அரங்கில் முதன்மை பெறுகின்றது. மொழிக்கு அணி சேர்க்கும் இலக்கியம் நல்லிலக்கியமாக அமைந்திருத்தல் வேண்டும். உயிரைக் கொல்லும் நச்சிலக்கியமோ உணர்வினையே அழித்து விடும். இலக்கியங்கள் என்னும் சால்வடித்து, நச்சிலக்கியங்கள் என்னும் களைகளை அகற்ற வேண்டும் என்று சிற்பி கூறுகிறார்.

“இலக்கியம்
தொடுவானக் கிழக்கின்
அருண தோரணம்
சுதந்திரக் காற்றின்
சுவாசப்பை
தாகத்தை வளர்க்கும்
தண்ணீர்ப் பந்தல்” (கவிமுகம்)

என்ற வரிகளில் நல்ல இலக்கியத்தின் இலக்கணத்தை வரையறுத்துள்ள சிற்பி பாரதியிடம் காணப்பட்ட என்றும் குறையாத இலக்கியத்தாகத்தையும் தம் கவிதையில் தகவுப்ட மொழிந்துள்ளார்.

காம இலக்கிய ஆளுமை

பாரதி தோன்றிய பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய உலகம் சிற்றிலக்கியங்களின் காலகட்டத்தில் இருந்தது. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் மறைக்கப்பட்டுக் காமச்சுவை ததும்பிய இன்ப இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிய காலமாக யிருந்தது. உயர்ந்த காப்பியங்கள், பண்டைச் சிறப்புக்கள், கவிஞர் பரம்பரையின் பெருமைகள் அனைத்தும் மறைந்து,

“வெண்பாவின்
ஈற்றடியைப்போல

இளைத்த சமஸ்தானங்களில்
கறிவேப்பிலைக் கவிதைகள்
கருத்தரித்த காலம்!
பாதாதி கேசங்களில்
பஞ்சணை வார்த்தைகள்!
பெண்ணுறுப்புகளுக்குக்
காரணப் பெயர் கூறும்
கவிதைகள்!
எச்சிலை ருசியாக்கும்
இனிப்புச் சிலேடைகள்”

என்று வைரமுத்து குறிப்பிடுவது போல் அலங்காரச் சொற்களுக்குத் தமிழ் அடிமைப்பட்டிருந்தது.

ஆழ்வார் இலக்கிய ஈடுபாடு

இத்தகைய சூழலில் தமிழ்ப் புலவர்களின் கூண்டில் சிறைப் பட்டிருந்த தமிழைக் கடிய நடையில் பாமரர்க்கு அயலாகிப் போன தமிழைத் தம் நீரோட்டமான நடையில் எளிமைப்படுத்தியவர் பாரதியாவார். தமிழ் மொழி தந்துள்ள இலக்கியங்கள்பால் பாரதி கொண்டிருந்த தாகத்தை எளிதில் எடுத்தியம்ப இயலாது. அனைத்து இலக்கியங்களிடத்தும் தம் பற்றினைப் பாரதி வளர்த்துக் கொண்டாலும் ஆழ்வார்கள் இயற்றிய இறவா இலக்கியங்கள் இவரை மிகவும் ஈர்த்திருக்கின்றன. புதுவையிலிருந்த பொழுது தியாகராசபிள்ளை மடுவிற்குப் போகும்போது தம்முடன் வந்த குவளைக் கண்ணனிடம் ‘ஆழ்வார்கள் எத்தனை பேர்’ என்று வினவினார். ‘பன்னிரெண்டு பேர்’ எனக் குவளைக்கண்ணன் பதிலிறுத்தார். அவர்கள் பாடிய பாடல்கள் எண்ணிக்கை எவ்வளவு என்ற அடுத்த வினாவைப் பாரதி தொடுத்தார். நாலாயிரம் எனக் குவளைக்கண்ணன் விடை தந்தான். இவ்வளவு தானா என்று அலட்சியமாகக் கேட்ட பாரதி தாம் ஒருவரே ஆறாயிரம் பாடல்கள் பாடுவதாகச் சொன்னாராம். ஆழ்வார்கள் அனைவரும் நாலாயிரம் பாடினால் தாம் தனியாக மட்டும் ஆறாயிரம் பாடப்போவதாகப் பாரதி பகர்ந்தாராம்.

ஆழ்வார்களுள்ளும் நம்மாழ்வாரிடம் பாரதி மிக ஈடுபாடுடையவராய் இருந்திருக்கிறார். ‘பொலிக பொலிக’ என்ற

நம்மாழ்வார் பாசுரத்தில் 'கலியும் கெடும் கண்டு கொண்மின்' என்ற கூற்றைத் தம் மொழிபெயர்ப்பில் 'The iron age shall change' என்று சிறப்பாகப் பாரதி தந்திருக்கிறார். இந்தப் பாசுரத்திற்கு 'Hymn of the golden age' என்று தலைப்பிட்டிருக்கிறார். இந்தப் பாசுரமே 'கிருதயுகம்' என்ற பாரதியின் புதிய கோட்பாட்டிற்கு வழிவகுத்திருக்கின்றது எனலாம்.

"வீழ்க கலியின் வலியெல்லாம்!
கிருதயுகத்தான் மேவுகவே"

என்று பாரதியாரை முழக்கமிட வைத்தது நம்மாழ்வார் பாசுரமே யாகும். ஆழ்வார்களிடம் பாரதி கொண்டிருந்த ஈடுபாட்டினை,

"எழுதாத வேளைகளில்
பொழுது போக
ஆழ்வார் பிரபந்தம் இருந்தால்
ஏழு ஜன்மம் கூட
இந்தச் சிறையில் இருப்பேன்"

என்ற வரிகளில் சிற்பி வகையாகப் பொறித்துள்ளார். ஆழ்வார் பிரபந்தத்திற்கு முன்னால் சிந்திக்க முடியாத சிறைத்துன்பம் கூட மிகச் சிறிதாகிவிடும் என்று பாரதியார் கருதியதைச் 'சிற்பி கவனப் படுத்தியுள்ளார். பிரபந்தம் வரப்பெற்ற சிறைப்பட்ட பாரதி பாசுரத் தொகுதியின் பக்கம் திறந்தபொழுது திருவாய்மொழியின் 'உண்ணும் சோறு பருகும் நீர்' என்ற பாசுரத்தின் ஏழாம் பாட்டு அவர் கண்ணில் பட்டது:

"இன்றெனக்கு உதவாது அகன்ற
இளமான் இனிப்போய்
தென்திசைத் திலகமனைய
திருக் கோளூர்க்கே
சென்று தன் திருமால்
திருக்கண்ணும் செவ்வாயும் கண்டு
நின்று நின்று நையும்
நெடுங்கண்கள் பனி மல்கவே....."

என்ற பாரதி பார்வையில் பட்ட நம்மாழ்வார் பாட்டினைத் தம் நூலில்

இடம்பெறச் செய்த சிற்பி, நம்மாழ்வார் குறிப்பிட்ட திருக்கோளூர் கடையமாகவும் நம்மாழ்வார் கண்ட இளமான் செல்லம்மாகவும் பாரதிக்குப் பட்ட பொழுது அவருக்குக் கண்ணீர் பனித்தது என்று நம் கண்ணீரும் பனிக்கும் நிலையின் அச்செய்தியைத் துலக்கியுள்ளார்.

காம இலக்கியக் கடும் வெறுப்பு

தாம் பிறந்த மண்ணாகிய எட்டயபுரத்து அரண்மனைப் பணியில் இருந்த பொழுத அந்தாதி, கலம்பகம், தூது போன்ற காமரச இலக்கியங்கள் தொடக்கத்தில் பாரதிக்குச் சுவையூட்டியுள்ளன. அரண்மனைச் சேவகம் அலுத்தபொழுது காம இலக்கியம் அவருக்குப் புளிக்கத் தொடங்கியது. தென்னிளசை அரண்மனை மன்மத இலேகியம் தின்று கொண்டிருப்பது முட்டாள் தனத்துக்கு எக்காளமாகப் பாரதிக்குப்பட்டது; மனது தவித்தது. திசைகளுக்குப் பொன்னாடை போர்த்திப் பிறந்தவன் பாரதி என்பதால் அரண்மனைச் சேவகத்தை அவர் அறவே கைவிட்டார். அதன் பின் தமிழுக்குப் புதிய உயிர் தருவதைக் கடமையாகவும் இலக்கியத்தில் புதுக்குருதி பாய்ச்சுவதை உரிமையாகவும் பாரதி கருதினார்.

இலக்கியப் படைப்பில் இடையறா ஈடுபாடு

“அண்மைக் காலமாய்
என்னுடன் பிறந்த
எழுத்துக் கிறுக்கும்
உள்ளங்கை நமைச்சலாய்
உறுத்துகின்ற பேனா”

என்ற வரிகளின் வழி இலக்கியப் படைப்பில் பாரதியாருக்கு இருந்த இடையறாத ஈடுபாட்டைச் சிற்பி இயம்புகின்றார்.

தொடக்கக்காலப் படைப்புக்கள்

“காதலின்பம் வழிய வழிய
காமச்சுவை கசியக்கசிய
மன்மதனுக்கு நடத்திய வேள்வி போல்
சின்ன வயதில் நான்
எழுதிய பாடல்கள் ஏராளம்”

என்ற வரிகளில் பாரதியின் தொடக்கக்காலப் பாடல்களின் தன்மையையும் தகுதியையும் சிற்பி எடுத்துக்காட்டியுள்ளார்.

புதுக்கவிதைத் தாக்கம்

"வேத ரிஷிகளின் கவிதையிலும்
விட்மன் பாட்டிலும் தோய்ந்து
கவிதை கொஞ்சும் வசனத்தில்
இல்லை வசன கவிதையில்
ஒரு சிலிர்ப்பை அனுபவித்தேன்
யாப்புக்கள் மட்டும் கற்று
யந்திரப் படைப்புகள் செய்வதை விட
தீப்புகுந்தாற் போல் வசனத்தில்
தீட்டிய கவிதை நன்று"

என்ற வரிகளில் பாரதி பெற்றிருந்த புதுக்கவிதைத் தாக்கத்தினையும் சிற்பி புலப்படுத்தியுள்ளார். பாரதி புதுக்கவிதையில் தம் படைப்புக்களை உருவாக்கியுள்ளார் என்ற உண்மையைப்

"புதுவகைக் கவிதையும்
புனைந்து பார்த்தேன்
புயலைச் சிமிழில்
அடைக்க முற்பட்டேன்
இலக்கியத்தில்
பரிசோதனைகளுக்கு
முடிவு ஏது"

என்ற வரிகளின் துணைக் கொண்டு சிற்பி நிறுவியுள்ளார்.

உதவாமலே போகுமோ உயர் படைப்புக்கள்

தம் படைப்பிலக்கியம் தமிழ் மக்கள், தமிழ்த் தோழர், தமிழ்ப் பெண்டிர், தமிழ் இளைஞர் ஆகியோர்க்குப் பயன்படாமலும் பாராட்டைப் பெறாமலும் வீணாகி விடக்கூடாதே என்ற பாரதியின் ஆதங்கத்தை,

"என் மக்கள் வாசிக்க
என் தோழர் உணர்வு பெற

என் பெண்டிர் விழிப்பெய்த
என் இளைஞர் கொதித்து எழ
உதவாமல், ஆகா! என் எழுத்து
தகரப் பெட்டிகளில்
நகராது கிடப்பதோ?”

என்ற வரிகளில் சிற்பி வெளிச்சப்படுத்தியுள்ளார். பாரதி எழுதிக் குவித்த கவிதைகள், கதைகள் மக்கள் பயன்பாட்டிற்கு உரியன ஆகாமல் குகைக்குள் உறங்கும் வேங்கைகள் போல் எழுதப்பட்ட தாள்களிலேயே தூங்குவதனால் பாரதிக்கு ஏற்பட்ட வருத்தத்தை,

“எழுதிக் குவித்தேன்
கவிதைகள், கதைகள்
இன்னும் அவை
வெளிச்சத்தைப் பார்க்கவில்லை
தமிழ் மனத்தில்
விளைச்சல்களைக் காண வில்லை
தூங்குகின்றன
காகிதங்களில்
குகைக்குள் உறங்கும்
வேங்கைகள் போல்”

என்ற வரிகளில் சிற்பி வடித்துக் காட்டியுள்ளார்.

“படிக்க வாய்ப்பற்றுக்
கிடக்கும் கவிகளைத்
தேடிக் கரையான் அரிக்குமோ?
பறக்கக் கம்பம் இன்றி
சீவன் இழந்து
என் கவிதைக் கொடி மரிக்குமோ?
பிரசவ வேதனை பட்டுப்பெற்ற
பிள்ளைகள் அநாதை ஆகுமோ?

என்ற சிற்பியின் வரிகள் தம் படைப்புக்கள் பயனின்றிப் போகுமோ என வருந்திய பாரதியாரின் வெந்து குழைந்த மனத்தினையும் பாரதியின் உடலைச் சுட்ட, உள்ளத்தை எரித்த நோவினையும் வெளிப்படுத்தத் துணைபுரிகின்றன.

ஷெல்லி, காளிதாச ஈடுபாடு

புதுயுகக்கவிஞன் எனப்பாராட்டப்பட்ட ஷெல்லி தமக்கு மிகப் பிடித்ததால் 'ஷெல்லிதாசன்' என்ற புனைபெயரினைப் பாரதி பூண்டதையும் அவன் பெயரால் சங்கம் ஒன்றைப் பாரதி அமைத்ததையும் அவன் எழுதிய மேல் காற்று என்ற கவிதையில் தமக்கிருந்த மோகத்தால் 'சக்திதாசன்', 'காளிதாசன்' என்று பாரதி பெயர் தரித்ததையும் தெய்விகச் சாகுந்தலம் எனும் அமர கவிதை தம் நெஞ்சைத் தொட்டதால் அதனை இயற்றிய கவியின் மேற்கொண்ட அளப்பரிய காதலால் பாரதி காளிதாசன் ஆனதையும் பாரதியின் மகள் சகுந்தலா ஆனதையும் சிற்பி தம் கவிதையில் சுட்டிக் காட்டியதன் வாயிலாகத் தகுதி வாய்ந்த பிறமொழி இலக்கியத்தைப் பாராட்டக் கூடிய விரிந்த இலக்கியச் சிந்தனை பாரதியிடம் இடம் பெற்றிருந்ததை நம்மிடமும் இடம் பெறச் செய்கிறார்.

மனத்தில் இருத்திய மண்பற்று

சிறப்பான பிறமொழி இலக்கியங்களைக் கண்ணுற்ற பொழுது, அவ்விலக்கியங்களையும் அவற்றைப் படைத்தவர் களையும் அப்படைப்பாளிகள் தோன்றிய மண்ணையும் போற்றி மகிழும் பெருநோக்கினைப் பாரதியார் பெற்றிருந்தாலும் தமிழ் இலக்கியங்களையும் அவற்றை எழச்செய்த படைப்பாளிகளையும் அப்படைப்பாளிகளின் பிறப்பிடமாகிய தமிழ் மண்ணையும் பாரதியார் அனைத்திற்கும் மேலாகக் காதலித்துக் கழிபேரு வகையில் திளைத்தார். தாம் பிறந்த மண் பற்றி யாரேனும் பழிக்க நேர்ந்தால் பாரதியின் சினம் கட்டுக்குள் அடங்காது என்பதை அவர் அனுபவத்தில் நேர்ந்த நிகழ்ச்சி ஒன்றைக் கொண்டு கீழ்வருமாறு சிற்பி குறிப்பிட்டு உணர்த்தியுள்ளார்.

அரவிந்தரோடு ஒருநாள் பாரதி உரையாடியிருந்தபொழுது துடுக்கு மிகுந்த வங்காளி ஒருவன் அருமைத்தமிழர் மேல் குற்றங்களை அடுக்கியுள்ளான். நாட்டுப் பற்றில் வங்காளிகள் தீரர்களாம்; தமிழர்கள் இளைத்தவர்களாம் என்று வகைகெட்ட அவ்வங்காளத்தான் பேச, அதனைச் செவிமடுத்த பாரதியின் மீசை துடித்தெழுந்ததாம். அவனை அடிக்காத குறையாக ஆர்ப்பரித்து அவர் எழுந்து கொடுத்த மறுமொழியைச் சிற்பி வரிகளில் நம் மனத்தில் நிறுத்துவோம்:

"உனக்குத் தமிழ் தெரியாது
தமிழரையும் நீ அறியமாட்டாய்
.....
வளரும் விஞ்ஞான
வாசலில் தமிழன்
வரைந்த கோலங்கள்
தெரியுமா உனக்கு.
கலெக்டர் ஆஷ்துரையை
கைத்துப்பாக்கியால் சுட்டது
துணிவுமிக்க ஒரு தமிழன்தான்
அறிவாயா நீ?
அவ்வளவேன்?
அரவிந்த பாபுவை
அரவணைத்துக் காப்பது
தமிழ் நாடு என்பதாவது
தெரியுமா உனக்கு?"

என்று எரிமலையாய் வெடித்த பாரதியின் சுடுசொற்கள் கேட்ட அவ்வங்காளத்தான் என்ன பாடுபட்டிருப்பான் என்பதை நம் கற்பனைக்கே சிற்பி விட்டு விடுகிறார். பாரதி கட்டிக்காத்த மொழியுணர்வு, பேணி வளர்த்த இனப்பற்று, இறவாது இடம் பெற்றிருந்த இலக்கியத்தாகம் மனத்தில் இருத்திய மண்பற்று ஆகியன தமிழருக்கு வாய்க்கும் நாளே நன்னாள்; பொன்னாள்.

இறவாத இதழ்ப்பணி

மித்திரனிடம் மீளாக் காதல்

'சுதேசமித்திரன் இதழ் நடத்திய சுப்பிரமணிய அய்யர் இதழ் உலகில் ஒரு பண்பாளர் ஆவார். ஆனால் மிதவாதிகளின் கருத்துக்களைத் தழுவி அவர் நடப்பார். அவர் சொற்பொழிவுக்காகச் சொக்கன் நகர் (மதுரை) வந்தார். அவர் பேச்சுமழை பொழிந்த மேடையிலெல்லாம் பாரதியின் பாட்டுமழை பொழிந்தது. அவர் பாடிய ஈசன் வணக்கப் பாடல்களில் தேன் வடிந்தது; நாட்டு வணக்கப் பாடல்களில் நறுந்தீ வளர்ந்தது. பாரதியாகிய வாலிப நெருப்பு அய்யரை ஈர்த்திழுத்தது. கவிமகன் ஆகிய பாரதிக்கும் இதழ்ப்

பணியில் காதல் இருந்தது. இவ்விதழ்ப்பணி அவர் நெஞ்சிற்கு மிக நெருக்கமாய் இருந்தது. இவ்விதழ்ப்பணியில் ஈடுபட்ட போது தான் பாரதி மேல் அரசியல் வெளிச்சம் விழத் தொடங்கிற்று. கவிதைக் கருவூலமான பாரதியை மித்திரன் அலுவலகம் பத்திரப்படுத்திக் கொள்ளுமாறு அய்யர் செய்தார். மித்திரன் இதழிடம் பாரதிக்கு இருந்த நெருக்கத்தை,

"மித்திரனும் நானும்
இரட்டைப் பிறவிகள்
பத்திரிகை பிறந்த ஆண்டில்தான்
எட்டை நகரம்
என்னையும் ஈன்றது"

என்ற சிற்பியின் வரிகள் நம்மை அறியச் செய்கின்றது.

ஆங்கிலத்தில் வரும் செய்திகளைத் தமிழில் விரைவாய் மொழி பெயர்ப்பதுவே மித்திரன் இதழில் பாரதியின் பணியாய் இருந்தது. ஆங்கிலத்தில் வரும் புதுப்புதுப் பதங்களுக்குத் தகுந்த தமிழ்ப்பதங்கள் கண்டுபிடிப்பதும் உண்டாக்குவதும் ஒரு தலைவலியாகும். பாரதிக்கோ இந்தப்பணி எளிமையாகப் பழகி விட்டது. எவ்வளவு கடினமான செய்தியானாலும் எவ்வளவு நீளமான பொழிவாயினும் அசல் தமிழிலேயே முதலில் வந்தது போல அழகான, எளிய நடையில் வேகமாக மொழிபெயர்ப்பதில் பாரதி திறன் பெற்றிருந்தார். ஆயினும் மித்திரன் பாரதியின் தினவுக்கு முழுவதும் தீனியிடவில்லை. இச்செய்தியைச் சிற்பியும்

"மித்திரன் போட்ட
கோடுகள் தாண்டி என்
கோபம் அலைவீசியது"

என எடுத்து மொழிகின்றார்.

மகளிர் முன்னேற்ற மாத இதழ்

மித்திரனில் இருந்துகொண்டே 'சக்கரவர்த்தினி' என்ற புதிய இதழின் ஆசிரியப் பொறுப்பில் அவர் அமர்ந்தது ஆகஸ்ட் 1905ஆம்

ஆண்டாகும். சக்கரவர்த்தினி மகளிரைப் பற்றிய இதழாதலால் அப்போதே பாரதி மாதர் சுதந்திரங்கள், மாதர் காதல், பௌத்த நெறியிலே மாதர்களின் நிலைமை, பாரதக் குமாரிகள் முதலிய தலைப்புக்களில் மாதர் முன்னேற்றத்திற்கான கட்டுரைகளைப் பாரதியார் எழுதியிருக்கிறார். 'Can man be free, if women be slave' என்ற கேள்வியையும் ஒரு கட்டுரையில் அவர் கேட்டிருக்கின்றார். மைத்ரேயும் சீதையும் இருந்த நாட்டிலே சூரிய ஒளிக்கதிரையே பார்த்தறியாத புழுக்களைப் போன்று கல்வி, அறிவு முதலிய யாதும் இல்லாதவராய்ப் பெண்கள் இருக்கிறார்கள். இப்பேதைப் பெண்கள் தோள் வலிமையும் ஆண்மையும் பெருந்தன்மையும் இல்லாத அடிமைப் பிள்ளைகளைப் பெற்றுத் தன்னைப் பங்கப்படுத்துவதாகப் பாரததேவி துடிப்புடன் கூறுவது போல் ஒரு கட்டுரையில் அவர் குறிப்பிடுகிறார். சக்கரவர்த்தினியில் வந்த மிகுதியான கட்டுரைகள் நல்லோர் வாழ்க்கை வரலாறுகளாகவும் மாதர் முன்னேற்றம் எப்படிப் பிற நாடுகளில் காணக்கிடக்கின்றது என்பனவாகவும் இருந்தன. 'சக்கரவர்த்தினி' மகளிர் மாத இதழில் பாரதி ஆசிரியராகச் சுப்பிரமணிய அய்யரால் நியமிக்கப்பட்டமையைச் சிற்பி,

"சக்கர வர்த்தினி
மகளிர் மாத இதழுக்கு என்னை
ஆசிரியராக்கி
அழகு பார்த்தவரும் அவரே
என் எளிய பேனாவுக்குப்
பட்டுக் குஞ்சம் கட்டிப்
பரவசப்பட்டார் அய்யர்"

என்னும் வரிகளில் உறுதிப்படுத்தியுள்ளார்.

புரட்சிப் புத்திதழ் இந்தியா

வங்கப்பிரிவு, சுதேசி இயக்கம், சுயராச்சிய முழக்கம், அரசாங்க அடக்குமுறை இவை அலைமேல் அலையாய் நாட்டு மக்கள் மனத்தில் மோதி, அவர்கள் மனத்தில் சுமையாகக் கிடந்த அடிமையினைத் தகர்த்து வந்தன. நாடெங்கும் சுதந்திர ஆசை தீவிரமாய் வளரலாயிற்று. இவ்வாசைக்கு ஓர் உருவம் கொடுத்துத் தமிழ் மக்கள் மனத்தில் பதியும்படி அதை எளிய, இனிய தமிழில்

விளக்கிக்காட்ட நல்ல தமிழ் இதழ் வேண்டும். அதில் தம் விருப்பம் போல் எழுத வேண்டும் என்ற எண்ணம் பாரதியின் மனத்தைக் கவ்வியது. இதற்குத் தக்க மருந்தாக வந்து சேர்ந்தது 'இந்தியா' என்ற வார இதழாகும். தமிழ் மண்ணில் திலகரின் குரலாய்த் தீவிர வாதிகளின் எரியும் இதயமாய் 'இந்தியா' பிறந்தது. இவ்விதழின் பெயரிடப்படாத ஆசிரியராகப் பாரதி பணியாற்றினார். பாரதியின் தேசப்பசிக்கு அதுதான் நல்லுணவாயிற்று. பொய்யின் வேரறுக்கும் ஆயுத எழுத்தாக அவரெழுத்து இவ்விதழில் மிளிர்ந்தது.

"மண்டையம் குடும்பத்தாரின்
'இந்தியா' வாரஇதழில்
கொழுந்து விட்டெரிந்தது
அந்தக் கோபம்
பழுக்கக் காய்ச்சிய
இரும்பாயிற்று வாசகர் நெஞ்சம்
நாலாயிரத்தைக் கடந்தது
இதழின் விற்பனை
அரசு வெகுண்டது
இந்தியா இதழாசிரியர் எனப்
பெயருக்கு இருந்தவர்
கைது செய்யப்பட்டார்
உண்மை இதழாசிரியன் நான்"

என்று பாரதியார் இந்தியா இதழின் பெயரிடப்படாத ஆசிரியராகப் பணியாற்றியமையையும் இந்தியா இதழில் பாரதியின் அனல் எழுத்துக்களின் அணிவகுப்பையும் அதனால் அரசுக்கெழுந்த வெகுளியையும் பெயருக்கமைந்த அவ்விதழின் ஆசிரியர் கைது செய்யப்பட்டமையையும் சிற்பி தெளிவாக்கியுள்ளார். வெகுண்டெழுந்த அரசின் அச்சுறுத்தலிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளப் பாரதி புதுவையை அடைந்த பின்னும் 'இந்தியா' இதழ்ப்பணி அங்கும் தொடர்ந்தது.

"எண்ணம் எழுத்து
வண்ணம் வடிவு
அத்தனையிலும் புதுமை"

எனத் தென்னிந்தியாவில் அதுவரை எவரும் செய்யாத புதுமைகளை 'இந்தியா' இதழில் பாரதி புகுத்தியமை பற்றிச் சிற்பி குறிப்பிடுகின்றார்.

"கனமான செய்தி
கண் கவரும் கருத்துப்படம்
தனதென்று மார் தட்டியது
இந்தியா"

என்று பாரதி பணியாற்றிய இதழின் உள்ளடக்கம் பற்றியும் சிற்பி உணர்த்தியுள்ளார்.

பாரதி பணிபெற்ற பல்வேறு இதழ்கள்

'விஜயா' சென்னையில் தொடங்கப்பட்டு நடத்தப் பட்டாலும் அரசுத் தலையீடின்றி நடக்க முடியாமல் போகவே, அதுவும் புதுவை வந்து பாரதியின் பொறுப்பில் அமர்ந்தது. இவ்விதழில் பாரதி எழுதிய தலையங்கம் அவரது ஆர்வத் திறனுக்கும் எழுத்து வன்மைக்கும் சான்றாக அமைந்துள்ளது. இவ்விதழ் 1909 கிருட்டின செயந்தி முதல் வெளிவந்தது.

1909 ஆம் ஆண்டு இறுதியில் பாரதியாரும் நண்பர்களும் மேலும் பல இதழ்களை வெளியிடத் தொடங்கினார்கள். அரவிந்த கோசு புதிதாய்த் தொடங்கிய 'கர்மயோகின்' என்ற ஆங்கில மாத இதழை ஒட்டித்தமிழில் 'கர்மயோகி' என்ற மாத இதழ் 1910 சனவரி முதல் பாரதி முயற்சியால் வெளிவரலாயிற்று. இதில் ஆயிரம் படிகளே அச்சிடப்போவதாய் முன்னறிவிப்புச் செய்திருப்பதிலிருந்து இதழ் பல்லாயிரக்கணக்கில் விற்பனையாகும் சந்தர்ப்பம் இருந்ததென யூகிக்கலாம்.

1910 பிப்ரவரியில் 'சூர்யோதயம்' என்னும் இதழில் தமிழ் நாட்டார்க்கு இறுதி விண்ணப்பம் என இதழ்கள் நிறுத்தப்படும் தறுவாயில் எழுதியுள்ள வரிகள் பாரதியாரின் குருதியாலும் கண்ணீராலும் எழுதப்பட்டவை எனலாம். அதில் ஒரு பகுதி:

"உங்களை நினைக்கும் போது என் நெஞ்சம் கொதிக்கின்றது. தீராத வறுமை கொண்ட ஜாதி, அழகிழந்து போன ஜாதி, பார்ப்பதற்கு விகாரமான ஜாதி, சரீரபலமில்லாத ஜாதி, நோய் பற்றிய ஜாதி, மனவலிமையில்லாத ஜாதி, ஸ்வதந்திரம் இல்லாத ஜாதி, உலக இன்பங்களை அறியாத ஜாதி, கவிதையில்லாத ஜாதி அய்யோ, அய்யோ நெஞ்சு கொதிக்கிறதே! என்னுடைய இரத்தம் அல்லவா

நீங்களெல்லோரும். உங்களை இந்த நிலையில் பார்க்க மனம் எப்படிப் பொறுக்கும்?" விஜயா, சூர்யோதயம், கர்மயோகி என்னும் இதழ்களிலும் வேறுபல இதழ்களிலும் பாரதி பணியாற்றியமையச் சிற்பி,

"என் கூரிய எழுது கோல்
குரல் எழுப்பிய இதழ்கள்
ஒன்றா? இரண்டா?
இந்தியா, விஜயா, தருமம்,
சூர்யோதயம், கர்மயோகி
இன்னும் பலப்பல"

என அழகுற அறிவித்துள்ளார்.

இருப்பினும் ஏகாதிபத்தியம் இரும்புக்கோட்டை கட்டி இதழ் எதுவும் புதுவையைத் தாண்டாமல் பார்த்துக் கொண்டதாகக் குறிப்பிடும் சிற்பி,

"தடைச்சட்ட வீச்சால்
தலைகுப்புற வீழ்ந்தன / இதழ்கள்"

என்ற வரிகளில் பாரதியின் இதழ்ப்பணி பாதியிலேயே நின்று போனதையும் கோடிட்டுக் காட்டுகின்றார். வெட்கப்படும்படியான காட்சிகளுடன் கூடிய செய்திகளை வெளியிட்டுத் தகாத செயல் செய்த குற்றவாளி தயக்கமின்றி நடமாடுவது போன்று இன்று வெளிவரும் செய்தித்தாள்களின் பொறுப்பாளர்களும் பாவம் செய்தவர்கள் பாவத்தைத் தொலைக்கப் புனித நீர்ப்பயணம் செய்து கோயில் வழிபாடு காண்பது போல் பண்பாட்டைச் சீரழிக்கும் வகையில் செய்திகளை வெளியிட்டுப் பின்னர் பத்தினித்தன்மை வாய்ந்தது போல் நடிக்கும் போலிப் போக்கினரான இன்றைய இதழ்ப் பொறுப்பாளர்களும் பாரதி இதழ்த்துறையில் நிறுவிய மெய்ம்மையையும் நடைவேகத்தையும் கொள்வராயின் இதழ்களிலும் எழுச்சிமிக்க எழுத்து வேள்வி எழும் என நம்பலாம்.

தத்துவத் தாக்கம்

ஆழ்ந்த தத்துவ நோக்கே இல்லாத ஒருவர்க்குப் பெருங் கவிகளின் வரிசையில் இடமில்லை. பாரதியாரை மிகச் சிறந்த

இடத்திற்கு இட்டுச் சென்றது அவருடைய தத்துவப் பார்வைதான். சித்தர் நெறி, அத்வைதம், விசிஷ்டாத்வைதம், சக்தி வழிபாடு என்னும் தத்துவ நெறிகள் அவற்றின் சாயல்களையும் பாரதியாரிடம் நாம் காணக்கூடுமாயினும் அவற்றை ஏற்றுக் கொள்ளாது தமக்குச் சரியென்று பட்டவற்றை எடுத்துக் கொண்டு பொருந்தாது என்று கருதியவற்றை ஒதுக்கி விடுவது தற்சிந்தனை கொண்ட கவிஞரின் இயல்பாகும். முன்னர் ஏற்றவைகளைக்கூட முதிர்ச்சி நிலையில் உதிர்த்து விடுவது அவர் நெறியாகும். சித்தர் தத்துவங்களில் பாரதியாருக்கு ஈடுபாடு இருந்ததுடன் சித்தர்களுடன் அவருக்கு நெருக்கம் இருந்ததைப் 'பாரதி அறுபத்தாறு' நூலில் அவரே தெரிவித்திருக்கிறார்.

> "எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தா ரப்பா
> யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்"

என்று பாரதியார் பெருமிதமாகக் குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் கோணத்தில் ஆராய்ந்த அறிஞர் அ.ச.ஞான சம்பந்தம் சித்தர்களுடன் அவருக்கிருந்த தொடர்புகளைக் கூறிப் 'பாரதிச் சித்தன்' என்ற பெயரையும் சூட்டுகிறார்.

> "சின்னசாமி பாரதியைச் சித்த சாமி பாரதியாக
> ஆக்கியவர் குள்ளச்சாமி ஆகிய சித்தரே"

என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

அரசியல் துறையில் திலகரையும் பின்னாளில் காந்தியடிகளையும் பின்பற்றியதைப் போலவே தத்துவ விசாரணைத் துறையிலும் பாரதி அவர்களையே பின்பற்றியுள்ளார். இராமகிருட்டிண பரமகம்சர், விவேகானந்தர், திலகர், காந்தியடிகள் முதலானோர் அவருடைய தத்துவ விசாரத்துக்கு வழிகாட்டி களாவர். இந்தத் தத்துவப் போரின் ஒலிகளும் எதிரொலிகளும் பாரதி இலக்கியத்தில் 'கணீர்' என்று கேட்பது போல் சிற்பியின் கவிதையிலும் தத்துவக் கொள்கை 'கணீர்' என்று கேட்பதில் வியப்பில்லை.

படுவதும் மறைவதும்

புதுச்சேரியிலிருந்து புறப்பட்ட பாரதியைச் சுமந்த வண்டி

ஓடத் துவங்கிய பொழுது சாலை மரங்களும் ஓடி ஓடி மறைகின்றன. இக்காட்சியைக் கண்ட பாரதியின் வாய் தத்துவமொன்றை முணுமுணுப்பதாக சிற்பி கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"காண்ப எல்லாம்
மறையு மென்றால்
மறைந்த எலலாம
காண்ப மன்றோ?"

கண்ணில் படுவனயெல்லாம் மறைந்து போவதில்லை. மறைந்ததாகக் கருதப்படுவனயெல்லாம் மீண்டும் காட்சியில் படுமேயன்றி ஒருபோதும் மறையாம்ல் என்றும் நிலைத்து நிற்பனவாகும் என்ற பாரதி உணர்ந்த தத்துவத்தைச் சிற்பி நமக்கு உணர்த்துகின்றார்.

ஆனந்த நடனத் தத்துவம்

சிதம்பரத்தில் முகாமிட்டிருந்த வெள்ளைக்கார நீதிபதியைச் சந்திக்க நேர்ந்த பொழுது வழியில் ஆடாமல், அசையாமல் நிமிர்ந்து நின்ற கோபுரங்களைக் கண்ட பாரதியின் சிந்தனையில் தத்துவமொன்று பட்டுத்தெறித்ததாகச் சிற்பி கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"அம்பலத்தான் உள்ளே
ஆடுகின்றான்; ஓய்வின்றி
ஆடுகின்றான்
அண்டப் பெருவெளியின்
அலகில்லா விளையாட்டை
அழகான குறியீடாய்ச் சுருக்கி
சிற்றம் பலத்தில்
ஆனந்த நடனம்"

என்று சிவனின் ஆனந்த நடனத்தில் பொதிந்துள்ள தத்துவப் பொருளைத் தகுதி குறையாமல் சிற்பி விளக்கியுள்ளார்.

சிறை பற்றிச் சீரான தத்துவம்

கடலூர் மாவட்டச் சிறைக்குப் பாரதியை மாறுதல் செய்ய

நீதிபதி தீர்ப்புரைத்த பொழுது, சிறைச்சாலை பற்றிய தத்துவச் சிந்தனை பாரதியின் கருத்தில் படர்ந்ததைச்

"சிறையில் பெரியதென்ன?
சிறியதென்ன?
இந்த உடல் கூட
இடுக்கண் மிகுந்த சிறைதான்
ஆனாலும் உள்ளமென்னும்
அதிசயப் பறவை
ஊர்கோலம் போவதை
ஒருவரால் தடுக்க முடியுமோ?"

என்ற வரிகளின் வழி நம் கருத்திலும் சிற்பி படரச் செய்கின்றார். உடல், உள்ளம் பற்றிய பாரதியின் தத்துவப் பார்வை தகுதியானதாகும்.

பயனற்ற வாழ்க்கை பற்றிய பயன் தத்துவம்

சிறைச்சாலையினுள் இருந்து வீணாகிப் போகும் வெற்று வாழ்க்கையை நினைத்துப் பார்த்து அதன் வழியாகவும் பயனற்ற வாழ்க்கை பற்றிய பயனான தத்துவத்தைப் பாரதி கொண்டிருந்ததைக் கீழ்வரும் வரிகளில் சிற்பி சிறப்பாகவே பேசியுள்ளார்.

"நின்றும் இருந்தும்
கிடந்தும் அலுத்து
ஊண்மிக வெறுத்து
அழுக்கில் அருவருத்து
உறக்கத்தில் விழித்து
விழிப்பில் உறங்கி .....
என்ன வாழ்க்கையடா இது?

உண்பதுவும் உறங்கி எழுவதுமான வாழ்க்கை எவ்விதப் பயனையும் தருவதில்லை; மாறாக வெறுப்பையும் சலிப்பையுமே தரவல்லதாகும் என்ற பேருண்மையை மேற்கண்ட வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

நிலை வாழ்க்கையின் நிறை தத்துவம்

"அறைக்குள் நடந்து நடந்து
சதுரம் என்றாலே வெறுப்பு

ஆமாம்
சதுரம் கவிதை இல்லை
வெறும் சட்டப் புத்தகம்
வட்டம் கவிதை இல்லை
திரும்பத் திரும்ப மீண்டும்
திரும்பத் திரும்ப
ஒரே புள்ளியில் சந்தித்து
ஒன்றையே தின்று
உவர்க்கும் வாழ்க்கை
வளைந்து வளைந்து
வளைந்து போவதுதான் அழகு
ஆயினும் சம வளைவுகள் சலிப்பு"

என்ற வரிகளின் வழியாகக் கவிதைக்கு மட்டுமல்லாமல் அதற்கொப்பான வாழ்க்கைக்கும் சேர்த்துப் பாரதி வகுத்துக் காட்டியுள்ள தத்துவத்தடத்தைச் சிற்பி அடையாளம் காட்டியுள்ளார். அறைச் சதுரத்துக்குள் அடங்கிய வாழ்க்கையோ கவிதையோ பாராட்டினைப் பெறாது. அதுபோல் வட்டத்திற்குள் அமைந்து கொண்ட கவிதையோ வாழ்க்கையோ வளமை தராது. கவிதை யாயினும் சரி வாழ்க்கையாயினும் சரி வளைந்து போவதில்தான் அதன் வலிமை அடங்கியுள்ளது. அதுவும் வளைவுகள் சமநிலையில் அமைந்திருந்தால் அவை மீண்டும் சலிப்பையே தருவனவாகும். அவ்வளைவுகள்,

"ஏறி ஏறி இறங்கி
இறங்கி இறங்கி ஏறி
ஏறி இறங்கி ஏறி இறங்கி
ஏறி இறங்கி இறங்கி ஏறி
இறங்கி ஏறி ஏறி ஏறி
இறங்கி இறங்கி இறங்கி ஏறி
புதிய வனப்புகள்
எதிர்பாராத் திருப்பங்கள்
கண்டு நடக்கும்
மலைக் குளிர் ஓடையின் பயணம்
அது தானேடா கவிதை!"

என்று கவிதையும் வாழ்க்கையும் மலைக்குளிர் ஓடை போல ஏற்ற

இறக்கத்தைப் பெற்றால்தான் புதிய வனப்புக்களையும் எதிர்பாராத் திருப்பங்களையும் அவை பெற்றனவாய் அமையும் என்று பாரதியின் சிந்தனையில் தோன்றிய தத்துவச் சிறப்பு நம் சிந்தையிலும் தங்குமாறு சிற்பி செய்துள்ளார். இத்தகைய தத்துவத் தாக்கத்தைத் தம்முள் நிலைப்படுத்தியவர்களாகக் குள்ளச்சாமியையும் கோவிந்த சாமியையும் யாழ்ப்பாணச் சாமியையும் பாரதி கருதியதைத் தம் கவிதையில் பாங்குடன் சுட்டியுள்ளார்.

பாடல்களை உருவாக்கிய பயன்பாட்டுச் சூழல்

பாரதியாரிடம் கவிதை பிறக்கும் அனுபவம் குறித்து வ.ரா அழகாக எழுதியிருக்கிறார்.

"மரத்தை வெறித்துப் பார்த்தார்; குளத்தை உற்றுப் பார்த்தார்; ஆகாயத்தை முட்டுகிறாற் போல் மார்பை வெளியே தள்ளி, தலையை எவ்வளவு தூரம் உயர்த்த முடியுமோ, அவ்வளவு தூரம் நிமிர்த்தி உயர்த்திப் பார்த்தார். ஸஸ்ஸ - ஸஸ்ஸ - ஸஸ்ஸ என்று மூச்சுவிடாமல் உரக்கக்கத்துவார்; வலது காலால் தாளம் போடுவார்; இடது காலால் பூமியை உதைப்பார்; குழந்தையைப் பெற்றெடுக்கும் பிரசவ வேதனை தான். உற்சாகமும் சோர்வும் பின்னிக்கொண்டு வெளி வருவதைப் பார்க்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். மனித உலகத்தோடு பாரதியார்க்கு அப்பொழுது உறவே கிடையாது என்று சொல்லி விடலாம். புதுப்பாட்டு வருகிற நேரத்தில் அது அவருடைய கூட்டையே முறித்து விடுமோ என்று தோன்றும்."

இந்த அனுபவம் ஒவ்வொரு கவிதையும் பாரதியும் ஊனையும் உயிரையும் உரித்துக் கொண்டு பிறந்திருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகும். சூழல் சரியாக அமைந்தாலன்றி நெறியான தமிழ்க் கவிதைகள் பாரதியிடமிருந்து பிறப்பது அரிதினும் அரிதாகும். பாரதி பாடியுள்ள ஒவ்வொரு பாட்டிற்கும் ஒரு சுவையான பின்புலம் இருக்கக் காணலாம். எந்தெந்தக் கவிதைகள் எவ்வெவ்வகைச் சூழலுடன் பிறந்தன என்பதைச் சிற்பி தம் கவிதையில் நமக்கு அறிமுகப்படுத்தும் பொழுது அளவிலா மகிழ் வெய்துகிறோம். குறிப்பிட்ட சூழலைப் பின்னணியாகக் கொண்டு பிறக்கின்ற கவிதையெல்லாம் என்றும் நெஞ்சில் தங்குவனவாய் அமையும் என்பதில் வியப்பில்லை. இனி, பாரதியின் பைந்தமிழ்க் கவிதைகள் எழத் துணை நின்ற சூழலைச் சிற்பி காட்டியவாறு காட்டுவோம்.

கவிதைக் காதலி

பாரதி பாடியுள்ள பல்வகைப் பாடல்களில் இடம் பெற்றுள்ள தகுதி வாய்ந்த கவிதைகள் 'கவிதைக் காதலி', 'கவிதைத் தலைவி' என்பனவாகும்.

"வாராய்! கவிதையாம் மணிப்பெயர்க்காதலி!" என்று 'கவிதைக் காதலி' என்னும் தலைப்பினைத் தாங்கியுள்ள கவிதை தொடங்குகின்றது. சின்னஞ்சிறு வயதில் காதல் நினைவை எழச் செய்து, காந்தம் போல் தம் நெஞ்சை ஈர்த்த இளவயதுச் சிறுமி ஒருத்தியின் நினைவை மறக்கமுடியாத சூழலில்தான் மேற்கண்ட கவிதை பாரதியாரால் எழுதப்பட்டது என்பதை,

"வாராய் கவிதையாம்
மணிப்பெயர்க் காதலி
பன்னாள் பன்மதி
ஆண்டு பல கழிந்தன
நின்னருள் வதனம் நான்
நேருறக் கண்டே
என்று நான் எழுதியது
அந்தச் சின்ன வயதுச்
சிங்கார மறத்தியைப் பற்றித்தான்!"

என்னும் சிற்பி வரிகள் உண்மைப்படுத்தியுள்ளன.

கவிதைத் தலைவி

தோன்றிய காதல் தொடர முடியாமல் தொலைந்து போனதற்குப் பின் பாரதியார் செல்லம்மாவைத் தம் இளம் வயதில் மணம் செய்து மனையறம் தொடங்கினார். மனைவியின் மறக்க முடியாத நினைவுச் சூழலின் அடிப்படையில் எழுந்த கவிதைதான் 'கவிதைத் தலைவி' என்னும் தலைப்பில் காணப்படும் "வாழ்க மனைவியாம் கவிதைத் தலைவி" எனத் தொடங்கும் பாடலாகும். இதனை மெய்ப்பிக்கும் நிலையில்,

"வாழ்க மனைவியாம்
கவிதைத் தலைவி

என்றொரு கவிதை
எழுதிய போது
கைப்பிடித்திருந்தவள்
செல்லம்மாள்”

என்னும் சிற்பி வரிகள் சிறப்பாக அமைந்துள்ளன.

வேளாளன் சிறை புகுந்தான்

தம் பெருநட்புக்குரிய வ.உ.சி. சிறை புகுந்த தருணத்தில் எழுந்த கவிதைதான் கீழ்வரும் வரிகளில் ஒளிரக் காணலாம்:

“வேளாளன் சிறை புகுந்தான்
தமிழகத்தார் மன்னனென
மீண்டான் என்றே
கேளாத கதை விரைவில்
கேட்பாய் நீ! வருந்தலை என்
கேண்மைக் கோவே”

வெள்ளிப் பனிமலை

புதுவையிலிருந்த பாரதியைச் சிறை மீண்ட வ.உ.சி. சந்தித்த பொழுது வ.உ.சி.யால் தொடங்கப்பட்ட கப்பல் குழு தமிழர்களால் வெள்ளைக்காரனுக்கே விற்கப்பட்ட செய்தி பற்றி வ.உ.சி.யிடம் உரையாடிப் பின் வ.உ.சி. பாரதியிடம் விடைபெற்றுச் சென்ற பல நாட்களுக்குப் பின் பாரதியிடம் பிறந்ததாகச் சிற்பி குறிப்பிடும் கவிதையைக் கண்ணுறுவோம்.

“வெள்ளிப் பனி மலையின்
மீதுல வுவோம் - அடி
மேலைக் கடல் முழுதும்
கப்பல் விடுவோம்”

புதிய ஆத்திசூடி

புதுவையில் ஒருநாள் பாரதி தெருவில் நடந்து சென்ற பொழுது சிறுவன் ஒருவன் ‘இளமையில் கல்’ எனச் செப்பிக் கொண்டிருந்தான். இதனைச் செவிமடுத்த பாரதிக்குள் ஒரு பொறி

எழ, 'முதுமையில் மண்' என உரக்கக் கூறினாராம். அப்போதி லிருந்து இன்னொரு ஆத்திசூடி இயற்ற வேண்டும் என்ற ஆசை பாரதியிடம் அரும்பியதாம் எனத் தம் கவிதையில் குறிப்பிடும் சிற்பி புதிய ஆத்தி சூடியில் பாரதி பிறப்பித்துள்ள வரிகளுக்குரிய சூழலை விளக்கம் செய்கிறார்.

மக்கள் அச்சத்தில் மலர்ந்த வரிகள்

இந்திய மக்கள் அஞ்சி, அஞ்சி வாழும் அவலம் தம் நெஞ்சைத் தொட்டதாகப் புதிய ஆத்திசூடியைப் புனைய வேண்டிய சிந்தனை பாரதிக்கு உருவானதையும் சிற்பி தம் கவிதையில் உருவாக்கிக் காட்டியுள்ளார். இந்திய மக்கள் கொண்டிருந்த அச்சவுணர்வுதான்,

"அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்
இளைத்தல் இகழ்ச்சி"

என்று புதிய ஆத்தி சூடியில் பாரதியைப் பாடச் செய்ததாகச் சிற்பி தம் கவிதையில் நமக்குக் காட்டியுள்ளார்.

ஔவை சூடியை மாற்றிய இடங்கள்

"ஆறுவது சினம் என்றார் ஔவை
ரௌத்திரம் பழகு என்றேன் நான்
மீதூண் விரும்பேல்
என்றார் அவர்
ஊண் மிக விரும்பு
என்றேன் நான்"

என்ற வரிகளில் சிற்பி ஔவை சூடியைப் பாரதியார் மாற்றி யுள்ளமையைத் தெளிவாக்கியுள்ளார்.

மல்லிகையில் மலர்ந்த வரி

உடனிருந்த பாரதிதாசன் மல்லிகை அழகில் மயங்கியதைக் கண்ட பாரதியிடமிருந்து, "ரசத்திலே தேர்ச்சி கொள்" என்ற புதிய ஆத்திசூடி வரி பூத்து வந்ததாகச் சிற்பி எடுத்து உரைக்கின்றார்.

அய்யர் அறிவில் பிறந்தவை

"சரித்திரத் தேர்ச்சி கொள்
நீதி நூல் பயில்
பாட்டினில் அன்பு செய்"

என்று புதிய ஆத்திசூடி வரிகளைப் பாரதியைப் பாடுமாறு அவர் போற்றிய அய்யர் பெற்றிருந்த பெரிய படிப்புத்தான் தூண்டியதாகச் சிற்பி காட்டியுள்ளார்.

அரவிந்தர் நினைவில் எழுந்தவை

"மந்திரம் வலிமை
லீலை இவ்வுலகு"

என்று பாரதியைப் பாடச் செய்தது தம்மை ஈர்த்த அரவிந்தர் பற்றிய நினைவுதான் என்பதைச் சிற்பி நம் நினைவில் நிறுத்துகின்றார்.

நாதம் தந்த நயவரி

இடிப்பள்ளிக்கூடத்துச் சுப்பிரமணிய அய்யரின் வெண்கலக் குரல் பாரதியிடம் எழுப்பிய நாதத்தில் விளைந்ததுதான் "வெடிப்புறப் பேசு" என்பதாகும்.

வேணு வழிப் பெற்ற வரிகள்

அம்மாக்கண்ணுவின் மைந்தனான கொட்டடி வேணுவின் நினைவில் எழுந்தவையாகச் சிற்பி குறிப்பிட்டுள்ளது கீழ்வருவன வாகும்.

"போர்த் தொழில் பழகு
முனையிலே முகத்து நில்"

வறுமை வழங்கிய வரிகள்

"திருவினை வென்று வாழ்
பணத்தினைப் பெருக்கு"

என்பனவற்றைப் பாரதியைப் பன்முறை வாட்டியெடுத்த வறுமை அனுபவம் வார்த்துத் தந்ததாகச் சிற்பி சிறப்பாகப் பேசுகின்றார்.

குள்ளச்சாமி கூட்டுறவில் உருவானவை

குள்ளச்சாமியின் கூட்டுறவில்,

"தவத்தினை நிதம் புரி
மொய்ம் புறத் தவம் செய்"

என்பன கோலமாய்ப் பாரதிக்குக் கனிந்ததைக் கவிஞர் சிற்பி நம் பார்வையில் படுமாறு செய்துள்ளார்.

இலக்கு வெறியில் விளைந்தவை

"புதியன விரும்பு
பெரிதினும் பெரிது கேள்"

என்பன பாரதி கொண்டிருந்த இலக்கு வெறியின் உச்சத்தின் வெளிப்பாடாகும் என்பதைச் சிற்பி வெளிப்படுத்தியுள்ளார். இங்ஙனம் பாரதி பாடிய புதிய ஆத்திசூடியில் பல்வேறு வரிகளில் இடம் பெற்றமைக்குரிய சூழலை நம் இதயத்தில் பதியச் செய்த சிற்பி,

"என் ஆத்திசூடி
குழந்தைகளுக்கு
அகர வரிசை கற்பிக்க
மட்டும் எழுந்தது அன்று
சிகரங்களில் அவர்கள்
சஞ்சரிப்பதற்காகவும் தான்"

என்று பாரதி பாடிய புதிய ஆத்திசூடியை மழலையரை மாண்புறச் செய்வதற்காகப் பயன்படும் கருத்துக் கருவூலமாக்கிக் காட்டியிருப்பது கருதத்தக்கதாகும்.

எட்டயபுரம் தந்த செல்வங்கள்

பாரதி இசைஞானத்தைக் குறைவறப் பெற்றிருந்தார். இசைப் பாடல்களையும் அவர் படைத்தளித்து உள்ளார். அவருடைய பாடல்களில் பலவற்றிற்குரிய இராகம் இன்னதென்றும் தாளம் இன்னதென்றும் அவர் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். மேலும்

அவர் பாடல் இயற்றும்போதே அதை இசையுடன் பாடுவார் என்பதை அவருடன் பழகிய நண்பர்களின் கூற்றுவழி அறியலாம். இசை பற்றிச் சில கட்டுரைகளையும் பாரதி இயற்றியுள்ளார். பிறந்த மண்ணுக்குரிய இசை ஞானத்தாலோ என்னவோ பாரதியார் இசைச் சாத்திரத்திலும் பிறவி அறிஞராக விளங்கினார். பாட்டும் கூத்தும் அவருக்கு எட்டயபுரம் தந்த செல்வங்களாக இருந்தன என்பார் ம.பொ.சி.

நாட்டுப் புறப் பாடல்களில் நாட்டம்

மக்களுக்குச் சென்றடைய வேண்டிய கருத்துக்களை மக்களிடையே புழங்குகின்ற செல்வாக்கு மிக்க நாட்டுப்புற வடிவங்களைக் கொண்டு கூறினால் அவை எளிதில் அவர்களைச் சென்றடையக்கூடும் என்று அவர் கருதியிருக்கிறார். ஏற்றப்பாட்டு, நெல்லிடிப்போர் பாட்டு, சுண்ணமிடிப்போர் பாட்டு, உழவுப் பாட்டு, கும்மிப்பாட்டு போன்ற நாட்டுப் புறப்பாடல்களில் தம் நெஞ்சைப் பறிகொடுப்பதைக் குயில்பாட்டில் பாரதி குறித்திருப்பது குறிப்பிடத்தக்கது. நடிப்புச் சுதேசிகளைத் தாக்குவதற்குக் கிளிக்கண்ணி மெட்டு, பாரத மக்களின் தற்கால நிலையைக் கேலி செய்வதற்கு நொண்டிச் சிந்து, சுதந்திரம் பெற்ற மகிழ்ச்சியைப் பள்ளரும் பாடுவதாகக் கற்பிக்கப்படும் பள்ளுமெட்டுப் போன்ற நாட்டுப்புற வடிவங்களை அவர் விடுதலை வேள்விக்குப் பயன் படுத்தியிருப்பது சிந்திக்கத்தக்கது. எங்கெங்கே ஒலியின் நயமுண்டோ, அங்கெல்லாம் தம்முள்ளத்தைப் பறிகொடுக்கும் கலைஞராகிய பாரதியார் கோணங்கியின் பாட்டின் இசையிலும் கலையை உணர்ந்தார்; அதன் சுவையை நுகர்ந்தார்; தமிழ்மொழி அந்தக்கலை வடிவத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார். 'புதிய கோணங்கி' என்ற தலைப்பில் கோணங்கி பாடுவது போன்று நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துக்களைப் பொதிய வைத்துப் பாரதி பாடினார். பாரதி பயின்றும் கேட்டும் பெற்றுக்கொண்ட இசை ஞானத்தை மையமாகக் கொண்டு அவரால் எழுதப்பட்ட கவிப்பெருஞ் செல்வத்தைச் சிற்பி தம் கவிதையில் தொகுத்துத் தந்துள்ளார்.

ஆண்டி மெட்டில் அமைந்த பாடல்கள்

சிறைக்குள் இருந்தபொழுது 'நந்தவனத்திலோர் ஆண்டி'

என்று தொடங்கும் பாடல் பாரதியின் செவியில் விழுந்த பொழுது, அப்பாட்டு அமைந்த மெட்டில் அவர் எழுதிய பாடல்களைப் பாரதி நினைவு கூர்ந்ததைச் சிற்பி தம் வரிகளின் வாயிலாக நமக்கு நினைவு படுத்துகிறார்.

"இந்த மெட்டில் நான்
இசைத்தவை எத்தனை பாடல்கள்!
'வந்தே மாதரம் என்போம் - எங்கள்
மாநிலத்தாயை வணங்குதும் என்போம்'
'பேயவள் காண் எங்கள் அன்னை - பெரும்
பித்துடை யாள் எங்கள் அன்னை'
'தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்'
'ஆதிசிவன் பெற்று விட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
இப்படி எத்தனை
எத்தனை பாடல்கள்"

நாட்டார் பாட்டால் எழுந்த நற்றமிழ்ப் பாடல்கள்

களையெடுக்கும் பெண்களின் வளை குலுங்கும் ஓசை, ஏற்றம் இறைப்போர் எழுப்பும் ஒலி, ஓடக்காரன் துடுப்பில் உருவாகும் இசை, பாம்புப்பிடாரன் வரையும் இராகம், குடுகுடுப்பைக் காரன் ஒலி என்பனவெல்லாம் பாடல் செய்யப் பாரதிக்குத் துணை நின்றமையைச் சிற்பி தம் கவிதையில் எடுத்துக் காட்டியுள்ளார். மேடைப்பாட்டு வெறும் விந்தைதான். ஆனால் நாட்டார் பாட்டோ அதிசய விந்தையாகும் என்பது பாரதியின் கருத்தாகும். நாட்டார் பாட்டாகக் கருதப்படும்,

"மாயக் காரனம்மா - கிருஷ்ணன்
மகிமைக் காரனம்மா"

என்ற பாட்டை அடிப்படையாகக் கொண்டு பாரதி எழுதியது தான்,

"யாதுமாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்"

என்ற பாடலாகும் என்பதனைச் சிற்பி வழி அறிய வருகின்றோம்.

"குடு குடுப்பைக்காரன் என்னிடம்
புதிய கோணங்கி ஆனான்
கும்மிப் பாட்டு
நாடு குலுங்க அடிக்கும்
புதுமைப் பெண்ணின்
நற்செய்தி ஆயிற்று

பாம்பாட்டி ஊதும்
சுருள் சுருளான ராகத்தில்
நான் புனைந்த பாடல்தான்
பாரத தேசமென்று
பெயர் சொல்லுவார் - மிடிப்
பயங்கொள்ளுவார் - துயர்ப்
பகை வெல்லுவார்"

என்று கோணங்கியின் பாட்டு, குயிலின் பாட்டு, பாம்பாட்டி இசைக்கும் இராகம் ஆகியவற்றால் பாட்டெழுதும் பேருணர்வைப் பாரதி பெற்றிருந்ததைச் சுட்டிக்காட்டும் சிற்பி,

"மாறி மாறி விழுந்த
உலக்கையின் ஓசையும்
ஓசையின் முடிவில்
'ஊஹூம்' என்ற முடிப்பும்
என்னைக் கவர்ந்தன"

என்று உலக்கை ஒலியின் இசைத் தாக்கத்தையும் பாரதி பெற்றிருந்தாகப் பேசி, அவ்வுலக்கை ஓசை உருவாக்கிய தாளத்திற்கும் இராகத்திற்கும் இயைந்தவாறு பாரதி பாடிய பாட்டினைக் கீழ்வருமாறு நம் பார்வையில் படரச் செய்துள்ளார்:

"மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நெருங்கினபொருள் கைப்பட வேண்டும்"

இதைக் கேட்டு நெல்குத்தும் பெண்கள் பின்வருமாறு குறைப்பட்டுக் கொண்டனராம்.

"எங்களைக்
கேலி பண்றீங்களே சாமி"

இதனைக் கேட்ட பாரதியோ,

"தாயே..... என் பாட்டு
நீபோட்ட பிச்சை அம்மா"

என்று கூறி அவர்களைக் கைகுவித்து வணங்கியதைச் சிற்பி வழித் தெரியவருகின்றோம். இங்ஙனம் விரிந்து பட்ட பாரதியின் இசை ஞானம் பரந்து பட்ட பாக்களை உருவாக்கக் கூடிய நற்சூழலை அமைத்துத் தந்தமையைச் சிற்பி தம் பரந்து பட்ட கவித்திறனால் நம்மை மகிழ்விக்கின்றார்.

கண்ணன் பாட்டு

"வாழ்வின் ஒவ்வொரு தளத்திலும்
வந்து நிற்கும் உறவுகளை
மனித உறவுகளை
கண்ணன் என்ற பெயரால்
கவிதை ஆக்கினேன்
இது தான் உண்மை"

என்று பாரதி கண்ணன் பாட்டை எழுதியதற்குரிய சூழலைச் சிற்பி எடுத்துக் காட்டியுள்ளார்.

பல்வேறு உறவு நிலைப் பாடல்கள்

எங்கிருந்தோ வந்து பாரதியை ஆட்கொண்ட குவளைக் கண்ணனைக் கொலுவீற்றிருக்கச் செய்வதற்காகப் பாரதி பாடியதுதான் 'கண்ணன் என் சேவகன்' என்ற பாடல் என்றும் சோம சுந்தரம், அய்யர், அரவிந்தர் இம்மூவரின் இணைந்த நட்புக்காக எழுதப்பட்டதுதான் 'கண்ணன் என் தோழன்' என்ற பாடலென்றும் மறைந்த தன் அன்னையும் தன்னை வளர்த்த இயற்கையும் கொண்ட கோலங்களின் விளைவுதான் 'கண்ணன் என் தாய்' என்ற பாடலென்றும் சுப்புரத்தினம், நாகசாமி, குவளைக் கண்ணன் என விரியும் சீடர் குலத்தை இணைக்கும் அன்புச் சங்கிலியை உணர்த்த உருவாகியதுதான் 'கண்ணன் என் சீடன்' என்ற பாடலென்றும் தமக்கு

ஞானச்சுடர் கொளுத்திய குள்ளச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துச் சாமி, அன்னை நிவேதிதா ஆகியோரின் பாதிப்பை வெளிப்படுத்த எழுந்ததுதான் 'கண்ணன் என் சற்குரு' என்ற பாடலென்றும் தம் செல்ல மகளை இதயத்தில் வைத்து எழுதியதுதான் 'கண்ணம்மா என் குழந்தை' என்றும் சுதந்திரப் போருக்குப் பறையொலி முழங்கிய பின்னும் படை நடத்தாது சோம்பியிருந்த இந்தியச் சமுதாயம் கருதி எழுதியதுதான் 'கண்ணன் என் அரசன்' என்ற பாடலென்றும் பெண்மையின் பெரிய விடிகாலச் சித்திரப்படைப்பாக அமைந்ததுதான் 'கண்ணன் என் காதலன்' என்ற பாடலென்றும் ஆணும் பெண்ணும் சமம் என்பதை அறைந்து சொல்லாமல் அணைத்துச் சொல்லச் சொல்லிய கவிதைதான் 'கண்ணம்மா என் காதலி' என்றும் கண்ணனைப் பல்வேறு உறவு நிலைகளில் வைத்துப் பாடுவதற்குக் களமாயமைந்த கவிதைச் சூழலைச் சிற்பி நம் கண்முன் நிறுத்தியுள்ளார்.

மனித உறவில் மணியான பாட்டு

"உறவு - துறவு
தாய் - தந்தை
குரு - சீடன்
காதலன் - காதலி
அரசன் - சேவகன்
பின்னிய முரண்களின்
பேரழகு கண்ணன் பாட்டு"

என்னும் வரிகளில் சிற்பி அழுத்தமாக்கியுள்ள அழகு பாராட்டத் தக்கதாகும்.

புயல் தந்த புரட்சிப்பாட்டு

புதுவையில் பாரதியிருந்த பொழுது ஓர் இரவில் மறக்க முடியாத நிலையில் வீசிய மறப் புயலை மனத்திற் கொண்டு பாரதி எழுதிய பாடல் தான் 'காற்றடிக்குது கடல் குமுறுது' எனத் தொடங்கும் பாடலாகும் என்றும் பாரதி மனைவி பத்திரப்படுத்தி வைத்திருந்த அரிசியைக் கூச்சலிட்ட குருவிகளின் முன் பாரதி அள்ளிவீசி அதனைக் கண்ணுற்ற பாரதி மனைவி அவரைக் கடிந்து கொண்ட சூழலில் பாரதி எழுதிய கவிதை தான் 'விட்டு விடுதலை

ஆகி நிற்பாய் - இந்தச் சிட்டுக்குருவியைப் போலே` என்னும் பாடலென்றும் சிற்பி தம் கவிதை வரிகளில் கட்டுரைக்கின்றார்.

"வாயு கொடியோன்
அவன் ருத்திரன்
அவனுடைய ஓசை
அச்சம் தருவது ...."

என்ற புதுக்கவிதையைப் பாரதியைப் புனையைச் செய்தது. புதுவையில் வீசிய புயற்காற்றுத் தான் என்பதைச் சிற்பி காட்டியுள்ளமையைக் கருத்திற் கொள்வோமாக. எழுதிக் கொண்டிருந்த தாளை எடுத்தெறிந்த காற்று கவிஞர் பாரதிக்கு வசன கவிதை ஒன்றை வழங்கியதாகச் சிற்பி காட்டியுள்ள வசன கவிதையின் கனு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது:

"எற்றுகிற சக்தி
புடைக்கிற சக்தி
மோதுகிற சக்தி
சுழற்றுவது, ஊதுவது
சக்தியின் பல வடிவங்களிலே
காற்றும் ஒன்று"

தொன்மம் புதியன ஆகலாம்

பார்க்கும் விழி சரியாக இருந்தால் புராணங்கள் கூட வைரச் சுரங்கங்களாகும் என்பதையும் கேட்கும் செவியிருந்தால் அவை கந்தர்வ வீணைகளாகும் என்பதையும் சிந்திக்கும் மனமிருந்தால் தொன்மங்கள்கூடப் புதியன படைக்கும் என்பதையும் மெய்ப்பிப்பதற்கும் நாட்டு விடுதலைக்கு மட்டுமல்லாமல் மகளிர் விடுதலைக்கும் அடையாளச் சின்னமாக அமைதல் வேண்டும் என்பதற்காகவும் 'பாஞ்சாலி சபதத்தைப்' பாரதியார் பாடியதாகச் சிற்பி தம் கவிதையில் பகர்கின்றார்.

பரிசிழந்த நாட்டுப் பாடல்

விடுதலைப் போருக்குப் பாசறையான தூத்துக்குடியில் நடந்த ஒரு தமிழ்க்கவிதைப் போட்டியில் கலந்து கொள்ளுமாறு இளமைத்

தோழன் சோமுவும் இன்னும் பல நண்பரும் பாரதியைத் தூண்டியதால்,

> "செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
> தேன் வந்து பாயுது காதினிலே"

என்ற பாடல் பாரதியிடம் கருக்கொண்டு உருப்பெற்றதைச் சிற்பி உணர்த்துகின்றார். பாடல் பரிசு பெறாமல் போனாலும் கவிதைத் துறைக்குப் பாரதி வழங்கிய வளமான பாடல் அதுவாகும்.

கிறுக்கில் எழுந்த குயில்

> "யாருடனும் பேசாமல்
> எவருடனும் திரியாமல்
> 'கிறுக்கு' என்று பிறர்சொல்ல
> கிறுக்கு கிறுக்கென்று
> கிறுக்கினேன்
> 'சரக்'கென்று குயில் வந்து
> உயிர் சிலிர்க்கக் கூவியது"

என்று சிற்பியால் காட்டப்படும் சூழலில்தான் பாரதியின் "குயில் பாட்டு" ஏற்றமுடன் எழுந்தது.

வெள்ளைத் தாமரைப் பூவில் வீற்றிருப்பவளே

பாரதி பயின்ற நெல்லை இந்துக் கல்லூரி நலிவுற்றதாய் அறிந்து அதனைச் சீராக்க நிதி திரட்டும் பணிக்காகப் பாடலொன்றைப் படைத்துக் கொடுத்தார். அந்தக் கவிதைதான் 'வெள்ளைத்தாமரைப் பூவில் இருப்பாள்' எனும் கலைமகள் வழிபாட்டுப் பாடலாகும். எனவே தான் அந்தப்பாடல் 'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்' என்ற வேண்டுகோளுடன் நிறைவு பெறுகின்றதாகச் சிற்பி சிறப்பாகவே சுட்டுகின்றார்.

சீர்குலைக்கும் சிறை வாழ்வு

பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய 'இந்தியா' எனும் இதழில் 1910 ஆம் ஆண்டில் சனவரி 8 இல் சீரோரை வதைப்படுத்திய,

வாட்டி வருத்திய சிறைச்சாலைகளை எல்லாம் நாட்டின் புதிய தூய்மைத் திருவிடங்களாகப் போற்றிப் பாரதியாரால் எழுதப்பட்ட செய்தியை அவர் வரிகளிலேயே காண்போம்:

"..... ஆமதாபாத்திலிருக்கும் சாபர்மதி சிறைச்சாலையை நோக்கும் போது எந்த பாரதனுக்குத் தான் இது பாரத பரம பக்தரான மகரிஷி ஸ்ரீமான் பாலகங்காதர திலகன் பொன்னடிகளால் புனித மாக்கப்பட்ட திவ்ய கேஷத்திரம் என்று தோன்றாது? ..... அல்லது அலிப்பூர் சிறைச்சாலையை பார்க்கும் போது பாரத பக்த சிரோன் மணியான ஸ்ரீமான் அரவிந்த கோஷீக்கு பகவான் தனது திவ்ய ஸ்வரூபத்தைக் காட்டிக் காத்து ஆட்கொண்ட மகா பரிசுத்தமான புண்ணிய ஸ்தலமென்று எவன்தான் எண்ணாமலிருப்பான்? கோயம் புத்தூர் சிறைச்சாலையைப் பார்க்கப் போகிறவர்களில் யார்தான் நமது தட்சிண தேசாபிமானச் சிங்கமான ஸ்ரீயுத சிதம்பரம் பிள்ளையைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்க முடியும்?

ஆகா! என்ன மாறுதல்! என்ன காலத்தின் கோலம்! சிறையின் கோரங்களும் பயங்கர எண்ணங்களும் மாறி ஒவ்வொரு சிறையும் புண்ணியஸ்தலமாகிவிட்டது". சிறுமைகள் நிகழும் சிறைவிடங் களைப் பெருமை தரும் தூய்மைத் திருவிடங்களாகக் கருதிப் பார்த்த பாரதிக்கும் இருபத்தைந்து நாள்கள் கடலூரில் சிறையிருக்க நேர்ந்தது. அச்சிறை வாழ்க்கையை மையமிட்டு எழுந்ததே கவிஞர் சிற்பி எழுதிய 'பாரதி கைதி எண் 253' என்னும் கனிச்சுவை ததும்பும் கவிதை நூலாகும்.

சிறை பற்றிச் சிற்பி சிந்திய கருத்து

பாரதியின் சிறை வாழ்க்கையைச் சிற்பி தம் கவிதையில் சித்திரித்துள்ளது பற்றிச் சிந்திப்பதற்கு முன் சிறைச்சாலையைப் பற்றிச் சிற்பி சிந்தித்திருப்பது யாது என்பதை அறிய முற்படுவோம்:

"கண்ணீர் வியர்வை
ரத்தச் சகதிகளாய்
சமூதாயத்
தொழுநோய் விடுதி நான்
எனினும்
எனது இதயத்தில் தான்

கண்ணனுக்கு ஒரு
பிரசவக் கூடம்
மணிமேகலைக்கு ஒரு
அறச்சாலை
மகாத்மாவுக்கு ஒரு
ஆசிரமம்
வ.உ.சி.க்கு ஒரு
தியாக நிலையம்!" (பேசாத பொருள்கள் பேசினால் ...)

சீர்குலைக்கும் தன்மை வாய்ந்த சிறைச்சாலை கண்ணனாலும் மணிமேகலையாலும் மகாத்மாவாலும் வ.உ.சி.யாலும் பெருமைக் குரியதாக்கப்பட்டமையைச் சிற்பி சிந்தித்துப் பார்த்திருப்பது சிறப்பினும் சிறப்பேயாகும்.

அருவருப்பின் பிறப்பிடம்

"சுவர் ஈரம், தரை ஈரம்
அருவருத்து விழிப்பெய்த
எலியோ, பெருச்சாளியோ
என்னவோ .....
முகத்தின் மேல் வால் சுழற்றி .....
ஓங்கரிப்பு ....."

என்று படிப்போர் அருவருக்கும்படியான நிலையில் பாரதி பட்ட சிறைத்துன்பத்தைத் தம் துயர வரிகளில் சிற்பி குறிப்பிடுகின்றார்.

நடுக்கிய கார்த்திகைக் குளிர்

எதற்கும் நடுங்காத, அச்சத்தைத் தூக்கியெறிந்த ஆண்மைப் பேருருவாய்த் திகழ்ந்த பாரதியை அவர் சிறையிருந்த பொழுது குளிர் கடுமையாகத் தாக்கி அவரை நடுங்கச் செய்ததைக்

"கூனிக் குறுகி
முடக்கிப் படுத்து
முடியும் தலையும் மூடிய பின்னும்
கார்த்திகை மாதக்
கடுங் குளிர் நடுக்கியது"

என்று படிப்பார் உள்ளம் உருகும் நிலையில் கவிமொழியைச் சிற்பி உதிர்த்துள்ளார். மாலை நெருங்க, நெருங்கக் குளிர் பாரதியைக் கொடுமையாக வாட்டியுள்ளது. அவர் அணிந்திருந்த கறுப்புக் கோட்டும் தம்மைத் தாக்கிய பனியை மிரட்டப் பயன்படவில்லை என்று பாரதியின் நலிவை நகைச்சுவையுணர்வுடன் சிற்பி தம் கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

தவிக்கச் செய்யும் சிறை தந்த தத்துவம்

சிறை பற்றிய பாரதியின் பார்வையைக் கூடத் தத்துவப் பார்வையாக்கித் தம் தரமான கவிதை வரிகளில் சிற்பி கீழ்வருமாறு தந்துள்ளார்.

"சிறையில் பெரியதென்ன?
சிறியதென்ன?
இந்த உடல்கூட
இடுக்கண் மிகுந்த சிறைதான்
ஆனாலும் உள்ளமென்னும்
அதிசயப் பறவை
ஊர்கோலம் போவதை
ஒருவரால் தடுக்க முடியுமோ?"

உடல் பாரதிக்கும் சிறையாகப் பட்டதையும் உள்ளம் அதிசயப் பறவையாய் ஆனதையும் சிற்பி சிறப்பாகவே நம் கருத்தில் பதிய வைக்கிறார்.

தனிமையில் வாட்டிய வன்சிறை

சிறையிருந்த ஒவ்வொரு நாளும் பாரதிக்குக் கழுவில் ஏற்றி, இறக்கி மறுநாளும் கழுவிலிட்டதற்கு ஒப்பான மனவேதனை அடைந்தமைக்குப் பிராமிதியஸ் என்ற கிரேக்கன் பட்ட துன்பத்திற்கு ஒப்பாகச் சிற்பி காட்டியுள்ளார். சிறை வாழ்க்கைத் தனிமை பாரதியை மிகவே வாட்டியுள்ளது. அவர் உயிரைத் தமது உயிராகக் கருதும் இனியவர்களின் துணை சிறையில் அவருக்கு இல்லை. அவரது பாட்டிற்காகக் காத்துக் கிடக்கும் சாதகப் பறவைகள் நட்புக் கூட்டம் சிறையில் இல்லாது போயிற்று. அறிவு வானில் உலவித் திரிய உதவிய அய்யர் இல்லை; அரவிந்தரும் இல்லை; குடுகுடுவென்று

மடுவுக்கு ஓடிக் குளிக்கச் செல்லும் போது துணையாய்க் கூட வந்த குவளைக் கண்ணனும் இல்லை. முணுமுணுத்தாலும் அழுது மூக்குச் சிந்தினாலும் ஆறுதல் சொல்ல மனைவி செல்லம்மா அருகில் இல்லை என்றெல்லாம் சிறை தந்த தனிமைத் துயரை விவரிக்கும் சிற்பி, "என்ன வாழ்க்கையடா இது?" என்ற வரியைக் காட்டி வாழ்க்கை பற்றிப் பாரதி கொண்டிருந்த சலிப்புணர்வினைச் சரியாக வெளிப்படுத்தியுள்ளார்.

சிறையிருந்த சீராளர்கள்

அந்தமான் தீவில் நொந்து போன மாமனிதர்களையும் மாந்தலே சிறையில் வாடிய தலைவர்களையும் அலிப்பூர், சாபர்மதி, கோயம்புத்தூர்ச் சிறைகளில் வேதனைப்பட்டவர்களையும் பற்றிப் பாரதியை நினைக்கவைத்துள்ள சிற்பி ஒரு பொழுது சிறைகளைப் பாரத நாட்டின் தூய்மைத் திருவிடங்களாகத் தம் எழுத்தில் பாரதி ஆக்கிக்காட்டியுள்ளதையும் நம் நினைவிற்குக் கொணர்கிறார்.

கூடயிருந்த கொடுமைக் கைதிகள்

பாரதி தங்கியிருந்த சிறையில் அவருடன் அடைபட்டுக் கிடந்த கைதிகள் சிறையினுள் வருவதற்கு காரணமாயிருந்த கொடுமைச் செயல்களையும் சிற்பி நம் கவனத்திற்குக் கொணரத் தவறவில்லை. குலை சீவுவதைப் போல் தலை சீவி எறிந்த கொலைக் கைதி, துளித்தங்கத்திற்காகத் தூளியில் கிடந்த பிஞ்சுக் குழந்தையின் கழுத்தை நெரித்த கைதி, கதறக்கதறச் சிறுமி ஒருத்தியின் கற்பைப் பறித்த கயவன் போன்றோரெல்லாம் பாரதியுடன் சிறைப் பட்டிருந்தாலும் அவர்களுடன் பழகப் பாரதிக்குத் தடை என்பதை விளக்கமாகப் பேசியுள்ள சிற்பி,

"மனிதத் துவத்தின்
மாண்புகள் சிதைந்த
அரை மனிதர்கள்
கால் மனிதர்கள்
விலங்குகளாகக்

கம்பிகளுக்குள் வீழ்ந்து கிடக்கும்
மனிதக் காட்சி சாலை இது”

என்று பாரதி வழியாகச் சிறுமைகள் நிகழும் சிறை பற்றிய தம் கருத்தை நம்மை உணருமாறு செய்துள்ளார்.

சிறையில் நிகழ்ந்த களேபரம்

பாரதியிருந்த சிறையில் ஒரு நாள் காவலர்கள் பயன்படுத்தும் துப்பாக்கி ஒன்று காணாமல் போனதால் சிறையில் நிகழ்ந்த ‘களேபரத்தையும்’ சிற்பி நமக்கு நினைவூட்டுகின்றார். சல்லடை போட்டுச் சலித்த காவலர்கள் பாரதியைப் பார்க்க வந்த இளைய மழலைகளை விரட்டியதோடல்லாமல் அவர் அறைக்கும் வந்து அவரது கம்பளிப் போர்வை, கோட்டுப்பை எல்லாவற்றையும் சோதனை போட்டும் எதுவும் கிடைக்காமல் அவர் அறையை விட்டுப் போனதையும் அப்பாவிக் கைதிகளை அடித்துத் தொல்லைப் படுத்தியதையும் பாரதியின் மனம் இன்னும் மறக்கவில்லை என்பதை நாமும் மறந்துவிடாது நம் மனத்திலும் இருத்தி வைத்துள்ள கவிஞர் சிற்பியின் கவித்திறன் சிறப்பிற்குரியதாகும்.

உள்ளம் வெதும்பச் செய்த உணர்விலாச் சிறை

பாரதியின் சிறை வாழ்வு அவருள்ளத்தை வெதும்பச் செய்ததை,

“இன்னும்
கம்பிக் கதவும்,
காகங்கள் குந்திய வேம்பும்,
தூரத்து முள் வேலியும்,
துப்பாக்கிப் பாராவும்,
சலித்துப் போன உணவும்,
களைத்த உடலும், மனமுமாக
எத்தனை நாள்?
வெதும்பியது உள்ளம்”

என்னும் வரிகளில் சிற்பி பதிவு செய்துள்ளார்.

வாய்த்தது வன்சிறையன்று

சிறை தந்த திருந்தாத் தூய்மையும் வருந்த வைக்கும் மகத்தான தனிமையும் பாரதியின் சித்தத்துணிவுக்குச் சோதனை யானாலும்

"எனக்கு வாய்த்தது
கொடுஞ் சிறை அன்று"

என்று சீர்குலைக்கும் சிறைவாழ்வையும் சிறப்பாகவே பாரதி கருதிப் பார்த்ததைச் சிற்பி நம் சிந்தனைக்குக் கொணர்கிறார்.

உணர்த்தும் முறை

கவிஞர் சிற்பி இந்நூலைப் புதுக்கவிதை நடையில் பொலிவு குன்றாமல் எழுதியுள்ளார். கவிதைக்கே உரிய அணிநலன் முழுவதையும் ஓரளவு இக்கவிதை நூல் பெற்றுள்ளது. 'கவிதையாகிய உடையணிந்தால் உண்மை அதிக ஒளி பெற்று விடுகின்றது' என்று போப் கூறிய பொன்மொழி சிற்பியின் கதைகளுக்கு முற்றிலும் பொருந்தும். சிற்பி எழுதியுள்ள இந்நூலில் தொடர்நிலையில் உவமைகள், உருவகங்கள், வருணனைகள் என்பனவும் சொல் நிலையில் பிறமொழிச் சொற்கள், வழக்குச் சொற்கள் தூய தமிழச் சொற்கள் எனவும் ஒலிநிலையில் ஒலிக்குறிப்புச் சொற்கள், இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் ஆகியனவும் காணப்படுகின்றன. இவற்றின் துணைக்கொண்டு தம் செய்திகளை விளக்கும்போது சிற்பியின் கவித்திறனும் இலக்கணப் புலமையும் புலனாகின்றன. இனி, இவற்றை முறையாகப் புலப்படுத்த முற்படுவோம்.

தொடர்நிலை

1. உவமைகள்:

உவமை என்பது படைப்பாளரின் கற்பனையின் வழிப் படிப்பவர்களைச் சிந்திக்கத் தூண்டுவதாகும். உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு உணர்த்துவ தாகும். தொல்காப்பியக் கருத்துப்படி உவமை என்பது பொருளின் தன்மையைப் புலப்படுத்துவதாகும்.

"பண்பும் தொழிலும் பயனும் என்றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை"

என்பது தண்டியலங்காரம். ஒரு படைப்பாளி தாம் உணர்த்த விரும்புவதைப் பிறர்க்கு எளிதாகப் புலப்படுத்துவதற்காக உவமைகளைக் கையாளுவது வழக்கம். இவ்வுவமைகள் கருத்து விளக்கத்திற்குப் பெரிதும் உதவக்கூடியவை. சிற்பியும் தம் கவிதைகளில் உவமைகளைப் பயன்படுத்தித் தம் நூலிற்கு அணி சேர்த்துள்ளார்.

இணைபிரியா இரட்டையர்

இளம் வயதுத் தோழரான சோமசுந்தர பாரதியாரும் பாரதியும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாத கேண்மைக்கு உரியவர்கள் என்பதைக் காட்ட அவர்கள் இருவர்களையும் இணை பிரியாத இரட்டை குழந்தைகளுக்குச் சிற்பி ஒப்பாக்கியுள்ளார்.

வெட்டிரும்பும் வெட்டவெளித் துரும்பும்

பாரதியின் தந்தையார் தொட்டுத்தொடர்ந்து நடத்திய தொழில் சிறப்பாக நடந்த பொழுது ஆற்றல் பெற்றிருந்த அவர் தந்தைக்கு வெட்டிரும்பும் அவர் நடத்திய தொழில் ஆங்கிலச்சதியால் பட்ட மரமாகப் போனதால் மிக எளியராகிப் போன அவருக்கு வெட்டவெளித் துரும்பும் சிற்பியால் உவமைகளாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. சிற்பி பயன்படுத்தியுள்ள இவ்வுவமை இதுவரை எவரும் பயன்படுத்தாத புத்துவமையாகும்.

மெலிந்துயர்ந்த காளான்

"மெலிந்துயர்ந்த காளான்கள் போல்
பண்டாக்களின் குடைகள்"

என்று பண்டாக்களின் குடைகளின் தோற்றம் மெலிந்துயர்ந்த காளான்களின் தோற்றத்திற்குச் சிற்பியால் புதுமைச் சிந்தனையுடன் உவமிக்கப்பட்டுள்ளது.

குளம் அகலாத் தெப்பம்

பாரதி தம் துணைவியான செல்லம்மாவுடன் காதல் வாழ்வு கொண்டு ஒருவரையொருவர் பிரியாமல் நெருங்கியிருந்து இன்பம் துய்த்தமையை,

"வட்டங்கள் இட்டுக்
குளம் அகலாத
மணிப் பெருந் தெப்பம் போல்"

என்னும் புத்துவமை கொண்டு சிற்பி உணர்த்துகின்றார்.

செப்புக்கம்பி மின்சாரம்

பாரதியின் உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த தேசபக்தியைச் செப்புக்கம்பியில் பாய்ந்த மின்சாரம் போல் என்று உவமை நயம் பொருந்தச் சிற்பி உரைத்துள்ளார்.

உயிருடன் கலந்த உயிர்

பாரதியும் வ.உ.சி.யும் ஒருவரையொருவர் ஆரத் தழுவியதைச் சொல்லவந்த சிற்பி அச்செயல் உயிருடன் உயிர் கலந்ததற்கு ஒப்பாக உள்ளது என்று உயரிய உவமையைச் சிற்பி பயன்படுத்தி உள்ளார்.

பிராமிதியஸ் என்னும் பேருவமை

ஒவ்வொரு நாளும் கழுவில் ஏற்றி இறக்கி மறுநாளும் கழுவில் இட்டதற்கு ஒப்பான நிலையில் சிறையில்பட்ட வ.உ.சி.யின் துன்பத்திற்குப் பிராமிதியஸ் என்னும் கிரேக்க வீரர் பட்ட பெரும் துன்பத்தைச் சிற்பி உவமையாக்கிப் பார்த்துள்ளார்.

எடுக்கத் தொடுக்க வழியில்லை

"வில் இருக்கிறது
வீக்கிட நாண் இருக்கிறது
குறிபார்க்க அம்பு இருக்கிறது
எடுக்கவும்
தொடுக்கவும் வழிதான் இல்லை"

என்ற உவமையின் வழியாகப் பாரதி எழுதிவைத்த எழுத்துப்படிகள் மக்களுக்குப் போய்ச் சேராமல் அடைகாத்துச் செயலற்றுக் கிடந்தமையைச் சிற்பி எடுத்துக்காட்டியுள்ளார்.

சிப்பாய் நடையும் சிங்க நுழைவும்

பாரதி கம்பீரமாய் நடந்த நடைக்குச் சிப்பாய் நடைக்கும் மிடுக்குடன் ஓர் அறைக்குள் பாரதி நுழைந்த நுழைவினைச் சிறுத்தையின் நுழைவிற்கும் சிற்பி சிறப்பாக உவமைப்படுத்தி யுள்ளார்.

நீரில் மூழ்கியவனின் நிலையற்ற அமைதி

குழப்பமும் கொந்தளிப்பும் திகழ்கின்ற இடத்தில் அமைதி காத்தல் இயலாது என்பதை நீரில் மூழ்குகிறவனால் அமைதிகாக்க முடியாதென்று உவமைநயம் பொருந்தச் சிற்பி உரைத்துள்ளார்.

விட்டு விட்டு ஒலித்த துப்பாக்கி

பட்டுப் பட்டென்று ஆத்திசூடி பாரதியாரிடமிருந்து எதுபோல் பாய்ந்து வரலாயிற்று என்பதைச் சிற்பியிடமே கேட்போம். துப்பாக்கி விட்டு விட்டு ஒலித்தது போல் ஆத்திசூடி பாரதியிடமிருந்து பட்டுப்பட்டென்று பாய்ந்து வந்ததாகச் சிற்பி பேசுகின்றார். இவ்வுவமையும் சற்றுப் புதுமையானதேயாகும்.

கண்ணுக்கினிய கண்ணாடி

வாழ்க்கையில் முணுமுணுத்தாலும் அழுது மூக்கைச் சிந்தினாலும் முகம் பார்த்து அவற்றையெல்லாம் அகற்றி ஆறுதல் சொல்லவல்ல மனைவி என்பவள் கண்ணாடி போல்வாளாம். தம் துணைவியான செல்லம்மாள் சிறையில் துன்பப்படுகிறபொழுது அத்துன்பம் துடைக்க அருகிலில்லாத அவளைக் கண்ணாடி எனும் சீரிய உவமையின் துணைக்கொண்டு சிற்பி உணர்த்துகின்றார்.

குசேலர் கொணர்ந்த அவல்

சிறையினுள்ளிருந்த பாரதியை அம்மாக்கண்ணுவின் ஆசைப் பிள்ளையான வேணுவும் சுப்புரத்தினமும் பார்க்க வந்தபொழுது வேணுவின் கையில் பொட்டலமொன்று இருந்ததைக் கண்ட பாரதி "அது என்ன?" என்று வேணுவை வினவ, உடனிருந்த சுப்புரத்தினத்தை உவமைநயம் குன்றாமல் கீழ்வருமாறு விடையிறுக்கச் செய்திருக்கிறார் சிற்பி:

"குசேலரு அவல்
கொணர்ந்தாரே
அது மாதிரி இந்தப் பொட்டலம்"

உறையிடப்பட்ட வீணை

இயக்கமற்றுச் சிறையில் கிடந்த பாரதியை உறையில் இடப்பட்ட இசைக்கப்படாத வீணையுடன் சிற்பி ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். வீணையைப் பயன்படுத்தத் தெரியாமல் அதை வீணாக்கியுள்ள மனிதர்களைப் போல் பாரதியைப் பயன்படுத்தத் தெரியாத தமிழர் பாமரராய் உள்ளமை குறித்துச் சிற்பி வருந்துகிறார்.

வீட்டுக்குள் கடல் ஆர்ப்பரிப்பு

புதுவையில் இரவுப்பொழுதில் புயற்காற்றின் ஆர்ப்பரிப்பு எதுபோல் இருந்ததாம் என்பதைக் கூறவந்த சிற்பி, வீட்டுக்குள் வந்த கடலின் ஆர்ப்பரிப்புப் போல் அது இருந்தது என உவமை நயத்துடன் புயற்காற்றின் வீச்சைச் சிற்பி நமக்குப் புலப்படுத்தியுள்ளார்.

காடு கெடுக்கும் மதயானை

"மத யானைகள்
ஊருக்குள் நுழைந்ததென
காடும் செடியும் மரமும்
வீடும் தெருவும் உருக்குலைந்தன"

என்று புதுவையை அழிவுக்கு ஆட்படுத்திய புயற்காற்றிற்குக் காட்டை அழித்திட வல்ல மதயானை சிற்பிக்கு உவமையாகப் பயன்பட்டுள்ளது.

அனுமன் புகுந்த இலங்கை

"அழகிய புதுவை நகரம்
அனுமன் புகுந்த இலங்கையாயிற்று"

என்ற வரிகளில் புயற்காற்றால் பாதிக்கப்பட்ட புதுவை அனுமன் வரவால் பாதிக்கப்பட்ட இலங்கை போல் இருந்ததாகச் சிற்பி குறிப்பிடுகின்றார்.

நீரில் கரைந்த உப்பு

மாமுனி எழுதிய பாரதம் மக்கள் நெஞ்சில் ஆழ்ந்து கிடப்பதை,

"நீரில் உப்புப் போல்
என்னமாய்க் கரைந்து கிடக்கிறது"

என்னும் தக்க உவமைகொண்டு சிற்பி எடுத்துக்காட்டியுள்ளார். கரைந்த உப்பைப் பிரித்துக் காட்ட முடியாதது போல் நெஞ்சில் கலந்துவிட்ட பாரதச் சிந்தனையை மக்கள் நெஞ்சிலிருந்து பிரித்துக் காட்ட இயலாது.

தவளைக் கூச்சல்

பண்டிதர் ஒருவரின் பொருள் விளங்காமலும் வெற்றுக் கூப்பாடாகவும் அமைந்த பேச்சினை விளக்கக் கருதிய சிற்பி அவரது வெற்றுப்பேச்சிற்கு ஐப்பசி மாதத்து அடைமழைத் தவளையின் கூச்சலைச் சிற்பி உவமையாக்கியுள்ளார்.

நீளும் அனுமார் வால்

பாரதி பார்த்த நாடகமொன்றில் நஞ்சு குடித்தவன் உடனடியாகச் சாகாமல் ஆலாபனையுடன் அவன் நிகழ்த்தத் தொடங்கிய பாட்டு நீண்டு போனதாம். எதுபோல் நீண்டது என்பதை உவமை வழிக்காட்ட வந்த சிற்பிக்கு நீண்டு நீண்டு வளர்ந்த அனுமார் வால் உவமையாயிற்று.

அடுக்குவமைகள்

பாரதி எழுதிக்குவித்த கவிதைகள், கதைகள் மக்களின் பார்வைக்குப் படாமல் தமிழ் மனத்தில் சரியான விளைச்சல்களைக் காணாமலும் கிடந்தமையை விளக்கவந்த சிற்பிக்குச் சிறந்த உவமைகள் அவர் கருத்தை அழுத்தமாக உணர்த்தப் பயன் பட்டிருக்கின்றன. தாள்களில் தூங்கும் பாரதியின் படைப்புக்கள் குகைக்குள் உறங்கும் வேங்கைகள் போல் உள்ளனவாம். மவுனமான புல்லாங்குழல், நூலாம்படை தாங்கிய பேரர்முரசுகள், உறைபனி நிறைந்த ஓடைகள், தூசிபடர்ந்த ஓவியங்கள், முகில்கள் இருந்தும் பெய்யாமலிருக்கும் மூளிவானம், முட்டைக்குள்ளேயே சிறை வைக்கப்பட்ட குஞ்சுகள் ஆகியனவற்றை அடுக்கடுக்காகப் புத்தகம் வடிவம் பெறாமல் வீட்டிலேயே முடங்கிக்கிடந்த பாரதியின் படைப்புக்களுக்கு உவமையாக்கித் தம் கவிதைப் போக்கைச் சிற்பி உயிரோட்டமாக்கியுள்ளார்.

மந்திர இன்பம்

"மந்திரம் போல்
வேண்டுமடா சொல்லின்பம்"

எனப் பாரதியாரின் கவிதைக் கோட்பாட்டை விளக்க ஆற்றல் மிக்க மந்திரம் சிற்பிக்கு உவமையாகப் பயன்பட்டுள்ளது.

அமைதி நீர்த்தேக்கம்

புதுவையில் புயலாய்த் திரிந்த பாரதி பணியாற்றிய இதழ்ப்பணி தடைப்பட்டபோது ஆரவாரமடங்கி அமைதியாக இலக்கியப் படைப்புக்களில் பாரதி ஈடுபட்டார். இச்செய்தியைச் சிறப்பான உவமை கொண்டு நம்முன் சிற்பி படைக்கின்றார். பின் தொடர்வது உவமை கலந்த அப்படைப்பாகும்:

"பத்திரிகைப் பணி
தடைப்பட்ட போது
அணைகட்டப்பட்ட நதி
அமைதி நீர்த் தேக்கம்
ஆவது போல்
இலக்கியப் படைப்புகளில்
கம்பீரமாய்த் தேங்கினேன்"

பச்சைக் குழந்தையான படைப்பு

கருவுயிர்த்த குழந்தையும் கருக்கொண்டு எழுந்த படைப்பும் இயல்பில் ஒரே தன்மையன என்ற கருத்தை உள்வாங்கிக்கொண்ட சிற்பி,

"பச்சைக் குழந்தை போல்
நான் பெற்ற இலக்கியங்கள்"

என்று பாரதி படைத்த இலக்கியங்களைப் பச்சைக் குழந்தையுடன் ஒப்பிட்டு நோக்கியுள்ள அவரது உயர் சிந்தனை உன்னுதற்குரியது. இங்ஙனம் தேவைப்படும் இடங்களிலெல்லாம் தேவையான அளவிற்குச் சிறப்பாகத் தேர்ந்துகொண்ட உவமைகளை நயம் குன்றாமல் பயன்படுத்தும் கலையைக் கைவரப்பெற்றவர் சிற்பியாவார் என்று கருதுவது உண்மைக்குப் புறம்பாகாது.

2. உருவகங்கள்

உருவகங்கள் பொருட்செறிவினைத் தரவல்லன. அணிகளி லெல்லாம் தாயணியாகக் கருதப்படுவது உவமையாகும். உவமையின் பிற்பட்ட வளர்ச்சியே உருவகமாகும்.

> "உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து
> ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்"

என்பது தண்டியலங்காரமாகும். உவமானம், உவமேயம் என்னும் இரண்டிற்கும் வேறுபாடில்லாத நிலையில் சொல்லப்படுவது உருவகமாகும். உவமேயத்தில் உவமானத்தை ஏற்றிக்கூறுதல் உருவகம் எனப்படும். உவமையைப் பயன்படுத்துவதில் எந்த அளவிற்குச் சிறப்பாய்ச் சிற்பி காணப்பகிறாரோ அந்த அளவிற்கு உருவகத்தைப் பயன்படுத்துவதிலும் சிறப்பாகவே விளங்குகின்றார். இனி, சிற்பியின் கைவண்ணத்தில் மலர்ந்து நூலிற்கு மணம் சேர்த்துள்ள உருவகம் பற்றி நாம் சிந்திப்போம்.

சோகக் கொடி

புதுச்சேரியை விட்டுப் பாரதி புறப்பட்ட பொழுது அவரின் தாசனான சுப்புரத்தினத்தின் கண்களில் காணப்பட்ட நீர்த்துளியைச் சோகக்கொடியாகச் சிற்பி உருவகித்துள்ளார்.

விடியலாம் இசையாசிரியர்

விடியலில் எழும் பறவைகளின் ஓசைகளையும் தெருவில் செவியில் விழும் வாகன ஓசைகளையும் விடியல் என்னும் இசையாசிரியர் தம் இசைக்கருவிகளை மீட்டுவதால் பிறக்கும் ஒலிகளாகவும் ஓசைகளாகவும் சிற்பி உருவகமாக்கியுள்ளார்.

தேரும் வடமும்

பாரதி சிறுவயதில் அவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்த சிறுவயதுச் சிங்கார மறத்தியை மின்னலும் சின்ன மயிலுமாகச் சிற்பி உருவகமாக்கியுள்ளார்.

> "அந்தத் தேர் இந்த வடத்தை
> இழுத்து இழுத்து அலைக்கழித்தது"

என்று சிற்பி குறிப்பிடும் வரிகளின் வழிப் பாரதியை அலைக் கழித்த பெண் தேராகி உள்ளதையும் அவரால் அலைக்கழிக்கப்பட்ட பாரதி வடமாகவும் உருவாகியுள்ளதை நம்மால் உணரமுடிகிறது.

கடையமும் கண் விழியாளும்

சிறைச்சாலையில் பாரதி படித்துச் சுவைத்த நம்மாழ்வார் பாசுரத்தில்இடம்பெற்றுள்ள திருக்கோளூர் சிற்பி சிந்தனையில் கடையமாக உருவகமாக்கப்பட்டுள்ளது. அப்பாடல் சுட்டும் இளமானைப் பாரதியின் வாழ்க்கைத் துணையான செல்லம்மாவாகச் சிற்பி உருவகமாக்கியுள்ளார்.

வறுமைச் சிறுமைச் சேறு

புகழ்பெற்ற பாரதியின் தந்தையான சின்னச்சாமி அய்யர் குடும்பத்தைத் தாழ்வுபடுத்திய வறுமையைச் சிறுமைச்சேறாகவும் அதனுள் அய்யர் குடும்பம் புதைந்து போனதாகவும் சிற்பி உருவகப் படுத்தி உள்ளமை எண்ணுந்தோறும் இனிக்கும் தன்மையதாய் உள்ளது.

உடற்சிறையும் உள்ளப்பறவையும்

“இந்த உடல் கூட
இடுக்கண் மிகுந்த சிறைதான்
ஆனாலும் உள்ளமென்னும்
அதிசயப் பறவை
ஊர்கோலம் போவதை
ஒருவரால் தடுக்க முடியுமோ?

என்ற வரிகளில் உடலுக்கும் உள்ளத்திற்கும் சிற்பி சுட்டியுள்ள உருவகங்கள் உயர்தரமானவையாகும்.

சங்கீத சமுத்திரம்

இசைமேதை சுப்புராம தீட்சிதர் இல்லம் சென்று அவர் பாடிய பாடல்களில் பாரதி தம் துயரை மறந்து கொண்டதைக் குறிப்பிட வந்த சிற்பி,

“சங்கீத சமுத்திரத்தில்
துயரை மூழ்கடித்தேன்”

என்னும் தக்க உருவகம் தந்து தம் செய்திக்கு அணி சேர்த்துள்ளார்.

நீர்த் தேவதைகளும் அல்லிப் பூக்களும்

தாழ்வாரத்தில் நின்றபடி பெய்த மழைத் தண்ணீரில் விளையாடிய மழலைகளை நீர்த்தேவதைகளாகவும் மழைநீரில்

மிதந்து வந்த காகிதக்கப்பல்களை அல்லிப்பூக்களாகவும் சிற்பி உருவகித்துள்ளார்.

இரட்டைப் பிள்ளைகள்

வ.உ.சி. தம் வைர நெஞ்சில் வளர்த்துக்கொண்ட தாய் நாட்டுப் பற்றும் தாய்மொழிப் பற்றும் இரட்டைப் பிள்ளைகளாய்ச் சிற்பியால் உருவகமாகியுள்ளன. தாய்நாட்டுப் பற்றும் தாய்மொழிப் பற்றும் இரட்டைப் பிள்ளைகள் போல் பிரிக்க முடியாதவாறு வ.உ.சி.யிடம் பின்னிக் கிடந்தன.

இரட்டைப் பிறவிகள்

பிறிதோரிடத்தில் பாரதி முதலில் பணியாற்றிய சுதேசமித்திரனுடன் அவர் கொண்டிருந்த பிரிக்க முடியாத நெருக்கத்தினை எடுத்துச்சொல்ல வந்த சிற்பி,

> "மித்திரனும் நானும்
> இரட்டைப் பிறவிகள்

என்று பொருத்தமான உருவகத்தைச் சிற்பி பயன்படுத்தியுள்ளமை பாராட்டத்தக்கது.

உருத்திரத் தாண்டவம்

இதழ்களில் வேகமாய்ப் புரட்சியாய்க் கருத்துக்களை வெளியிட்ட பாரதியின் பேனா எழுதவில்லையாம். மாறாக உருத்திரத்தாண்டவம் ஆடியதாகச் சிற்பி சுட்டும் பொழுது எழுத்துப் புரட்சியை உருவாக்கிய சிற்பியின் பேனா ஊழித்தாண்டவம் ஆடிய சிவனாக உருவகிக்கப்பட்டுள்ளமை சிந்திக்கத்தக்கது.

சாதகப் பறவைகள்

பாரதி பாட்டைக் கேட்டுச் சுவைக்கும் பாரதிப் பிரியர்கள் மழைநீரை மட்டுமே பருகத்துடிக்கும் சாதகப்பறவைகளாக ஆகியுள்ளனர். மழைநீரைத் தவிர மற்றெதையும் பருகாத சாதகப் பறவைகள் பாரதி பாடல்களைத் தவிரப் பிற பாடல்களைச் சுவைக்க விரும்பாத சுவைஞர்களுக்கு உருவகமாகியுள்ளமை எண்ணத் தகுந்தது.

விண்ணமுதமும் விண்ரதமும்

அம்மாக்கண்ணு அன்புடன் தந்த சுண்டலை ஒரு பிடி வாயில்

போட்டுச்சுப்புரத்தினத்திற்கு அச்சுண்டல் அமுதமாய் உருவெடுக்கப் பாரதிக்குப் புதுவை பூலோக சொர்க்கமாகவும் உதியஞ்சாலை கற்பகப் பூங்காவாகவும் அவ்விருவரையும் தாங்கிச் சென்ற 'புஷ்' வண்டி இரதமாகவும் உருவகமாகியுள்ளதைப் பாரதி உணர்ந்து உரைத்ததையே சிற்பியும் உருவமாகக் காட்டியுள்ளமை நம் கருத்தைக் கவர்வதாகும்.

ஆங்கில அமில மழை

பாரதியைப் பார்க்க வந்த வ.ரா. ஆங்கிலத்தில் பேச, அவ்வாங்கிலத்தை மழையாக உருவகப்படுத்திய சிற்பி, அதைச் செவிமடுத்த பாரதி வெறுப்புற்றதால் வ.ராவின் ஆங்கில மழை அமில மழையாகச் சிற்பியால் உருவகம் செய்யப்பட்டுள்ளமையை நாம் நினைந்து பார்ப்போமாக. இவ்வாறு செய்திகளுக்கு ஏற்றவாறு பொருத்தமான உருவகங்களைப் பயன்படுத்துவதில் சிற்பி வல்லவர் என்பது முற்றிலும் வாய்மையின்பாற்பட்டதாகும்.

3. வர்ணனைகள்

கவிதையில் இடம் பெறும் வர்ணனை பாத்திரங்களின் அல்லது இடங்களின் தன்மை, சூழல் ஆகியவற்றை அறிந்துகொள்ள உதவுகின்றன. 'ஒரு பொருளைப் பற்றித் தெளிவான விளக்கத்தைப் பெறப்பயன்படும் எழுத்தோவியமே வர்ணனை' என்று கலா. கே.தாக்கர் கூறுகிறார். சிற்பியும் தம் கவிதை நூலில் பல்வேறு வர்ணனைகளைக் கையாண்டுள்ளார்.

வண்டிக்குதிரையின் வர்ணனை

"வண்ண இறகுகள்
உச்சந்தலை வார்ப்பட்டை மேல்
மினுங்க மினுங்க
முன்னங் கால்களை
மாற்றி மாற்றி நிலத்தில் தட்டிப்
பொறுமை இழந்து நின்றது
வண்டியில் பூட்டிய குதிரை"

என்ற சிற்பியின் வர்ணனை வண்டியில் பூட்டிய குதிரையை நம் கண்முன் நிறுத்துகின்றது.

சிறை முற்றத்து ஆலமரம்

பாரதி தங்கியிருந்த சிறை முற்றத்து ஆலமரத்தை,

“இரவு முழுவதும்
மழையில் குளித்த
சிறை முற்றத்து ஆலமரம்
காலை வெளிச்சத்தில்
புத்தாடை அணிந்த சிறுமியாய்
மினுக்கிக் கொண்டிருந்தது
ஆலமரத்தடி
ஈரமண்வெளியில்
குழந்தைகளின் கும்மாளம்”

என்று சிற்பி நிகழ்த்திய வர்ணனை படிப்பார்க்கு இரவில் நனைந்து, காலை வெளிச்சத்தில் புத்தாடை அணிந்த சிறுமிக்கு ஒப்பான ஆலமரத்தடியின் கீழேயிருக்கின்ற உணர்வை உருவாக்குகின்றது.

சடகோபாச்சாரியாரின் தோற்றப் பொலிவு

“வட்டத் தலைப்பாகை பஞ்சகச்சம்
நெற்றியில் சத்திய ரேகை போல்
ஒற்றைச் சிவப்புத்
திருமண் துலங்க
வந்தார் சடகோபாசாரியார்”

என்ற சிற்பி வர்ணனை வழக்கறிஞர் சடகோபாசாரியாரின் தோற்றப் பொலிவினை ஏற்றமுடன் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

கங்கைப் பெருமிதம்

“ஆதிமூலம் அகண்டமாய்
ஆயிரம் யுகம் கண்ட பண்பாடாய்
பூரணமாய், பூரணத்தின்
காரணமாய், புனிதமாய்,
சங்கர இராமானுச தரிசனமாய்
கம்பீர வேத நடையாய்
இதிகாச விளக்கு வரிசைகளாய்
ஒருகனராக பவனியாய்”

என்ற வரிகளில் கங்கையின் பெருமிதத்தைச் சிற்பி வருணித்துக் காட்டியிருப்பது நம் சிந்தையைத் தொடுவதாகும்.

கண்ணில் நிற்கும் காசிநகரம்

"பாயும் நீர், படித்துறை,
பசுமை மணக்கும் கோதுமை வயல்கள்,
சிறகு முளைத்த
பறவைத் தோழமைகள்.
பெரிய மடி அசைக்கும் பசுக்கள்,
அந்தி விண் மீன்கள்,
ஆலவட்ட முழுநிலவு
விசுவநாதன், தேவி
விசாலாட்சித் தாயார்"

என்று காசி நகரையே நம் கண்ணில் நிறுத்தும் அளவிற்குச் சிற்பி நிகழ்த்தியுள்ள வர்ணனை நம் பாராட்டிற்குரியதாய் அமைந்துள்ளது.

துன்பச் சிறையும் இன்ப எழிலிடமாகும்

கவிதை தக்க வர்ணனையின் வாயிலாக இந்திர நற்சால வித்தை ஒன்றை விளைவித்துக் காட்டும் தன்மை வாய்ந்தது ஆகும். பாரதி அடைபட்டிருந்ததோ வெஞ்சிறையாகும். அவ்வெஞ்சிறை கூடச் சிற்பி பயன்படுத்தியுள்ள வர்ணனையென்னும் இந்திர சாலத்தினால் எழிலிடமாகக் காட்சியளிக்கின்றது.

"உயர்ந்த மதில்கள்
ஜில்லாச் சிறைக்கு
ஆனாலும் ஓர் ஆறுதல்
நிறைய நிறைய மரங்கள்
ஓட்டப் பந்தயம் நடத்தும்
அணில்கள் ஒருபுறம்
ஓயாமல் குரலெழுப்பும்
பறவைகள் மறுபுறம்
.....
அறைக்கு நேர் எதிரே
அடர்ந்த ஒரு வேப்பமரம்
ஆடியது கிளை ஒன்று
வா, வா தோழனே

என்ற வரவேற்போ?
ஓடிப்போய் பசுமைக்குள்
ஒன்றி விடத் துடித்தேன்”

மழை நிகழ்த்திய அற்புதம்

பொழிந்த பெருமழை பற்றிச் சிற்பி நிகழ்த்தியுள்ள வர்ணனை மழை நிகழ்த்திய அற்புதத்தை அழகுபடக் கீழ்வரும் வரிகளில் எடுத்தோதுகின்றது:

“நேற்று வானம்
மீண்டும் பெருமழை பொழிந்தது
மின்னல்களின்
கொண்டாட்டம்
வானம் தகத்தகாயம்
இமயப் பாறைகள்
இடி ஓசை
ஈரவாடை
எங்கிருந்து வந்தது
தங்கு தடை இல்லாத
இந்த வெள்ளம்?
கொளுத்திக் கொளுத்திப் போட்ட
மின்னல் வெளிச்சத்தில்
மழைத் தாரைகள்
வெள்ளிக் கம்பிகள்”

புதுவையை அழித்த புயற்காற்று

“கடல் வீட்டுக்குள்
வந்து விட்டது போல்
காற்றின் ஆர்ப்பரிப்பு
பேய் மழை .....
இரவெல்லாம்
கொடுங் காற்றின் கூத்து
கையில் கிடைத்ததையெல்லாம்
துவம்சம் செய்தான்
காற்றுத்தேவன்
கூரைகள் பறந்தன

வேலிகள் அழிந்தன
வேரோடு சாய்ந்தன
நூற்றாண்டு கண்ட மரங்கள்
மத யானைகள்
ஊருக்குள் நுழைந்ததென
காடும் செடியும் மரமும்
வீடும் தெருவும் உருக்குலைந்தன
தென்னை மரங்களை
ஈர்க்குச்சிகள் ஆக்கியது காற்று
எங்கும் உயிரற்று வீழ்ந்த
மரங்கள், விலங்குகள், பறவைகள்
இடிந்த சுவர்களில் சிக்கிய மனிதர்கள்"

என்று புதுவையில் வீசிய புயற்காற்றுப் பற்றிய சிற்பியின் நெடிய வர்ணனை நம் மனத்தில் துயர வெள்ளத்தைப் பாய்ச்சுகிறது.

காதல் வயப்பட்டோரின் பேரின்பப் பெருக்கு

"கண்ணெதிரே
மாந்தோப்புப் புல் வெளியில்
வனமோகினி ஒருத்தி
வாய் முத்தம் தந்த படி
எனைப் போல மீசை வைத்த
இளைஞன் மேல் சரிந்திருந்தாள்
அந்த அணைப்புக்குள்
ஆருயிரின் பிணைப்புக்குள்
மாந்தோப்பும் இல்லை
மரகதப் புல்வெளி இல்லை
பார்த்திருக்கும் நான் இல்லை
பாடும் குயில் இல்லை
மாடு, குரங்கு
மற்றெதுவும் இல்லை.
தேவ சுகம் தானோ
தேகசுகம்
அணுவுக்குள் அணுச் செறியும்
அந்தரங்கம் இதுவோ?
மனதுக்குள் மனம் செருகும்

மாந்திரீகம் இதுவோ?
ஆபத்து மலைவெளியில்
ஆனந்த சாகரமோ?
தீப்பிடித்த மனவெளியில்
சேர்ந்தெரியும் தத்துவமோ?

என்று நெடிய வரிகளில் சிற்பி காட்டியுள்ள வர்ணனைத் திறத்திடம் நம்மைக் காதல் கொள்ளச் செய்கின்றது. சுருங்கக்கூறின் கருத்தாழமிக்க சிற்பியின் வர்ணனை வளத்தை அவரது கவிதைப் படைப்பின் சிறப்புக்கூறாகச் சுட்டலாம்.

நயம் சேர்க்கும் நல்வரிகள்

வர்ணனை மட்டுமல்லாமல் கவிதை நயம் கனிந்தொழுகும் வரிகளைப் பயன்படுத்தி இருத்தல் சிற்பியின் கவிதைப் புலமைக்குக் கட்டியம் கூறுகின்றன. நயமிக்க சில வரிகளை நாமும் சிந்திப்போம்:

நெருப்பும் காற்றும்

"அவள் தந்ததுதான்
கவிதை நெருப்பு
செல்லம்மாள் அதை
வளர்த்த காற்று"

என்றும்

சாகும் வயதும் வாழும் வயதும்

"சாகும் வயதில் போகிற காசிக்கு
வாழும் வயதில் புறப்பட்டேன் நான்

என்றும்

விசாலமாக்கிய காசி

"விசுவநாதனும்
விசாலாட்சியும்
குடி கொண்ட காசி
என்னையும்
விசாலமாக்கியது

என்றும்

எட்டியான எட்டப்ப உறவு

"எட்டப்பன் உறவு
எட்டியானது"

என்றும்

பெருமையறியா மடமை

"பெரிது பெரிது அவர் பெருமை
அறியாது போனது தமிழ் நாட்டின் மடமை"

என்றும்

தேக்கமற்ற இயக்கம்

"தேக்கம் அல்ல
இயக்கம் என் வாழ்வியல்"

என்றும்

குப்பையும் குன்றாத் தங்கமும்

"என்ன ஆயிற்று?
குப்பை பரிசு பெற்றது
தங்கம் தள்ளப்பட்டது"

என்றும்

மூளையைக் கசக்கும் காலம்

"காலமே!
மூளையைக்
கசக்கி விடை சொல்லு"

என்றும்

வருங்காலச் சாவிகள்

"சமர்த்தாகப்
பூட்டி வைத்தேன்
வருங்காலச் சாவிகளே
வந்து திறவுங்கள்"

என்னும் நயமான வரிகள் பலவற்றைச் சிற்பி வளமாகத் தந்துள்ளார்.

சொல்நிலை

1. பிறமொழிச் சொற்கள்

ஆங்கிலச் சொற்கள் அம்மொழியில் எவ்வாறு வழங்கப் படுகின்றனவோ அவ்வாறே அவற்றைத் தமிழில் ஆக்கிச் சிற்பி வழங்கியுள்ளார்.

ஜெயில், டெபுட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மிஸ்டர், ஆபிஸர், கோட்டு, வார்டன், கலெக்டர், இங்கிலீஷ் போல்வன. ஆங்கிலச் சொற்களைச் சொல்லளவில் தமிழில் ஆக்கிப் பயன்படுத்தியதோடல்லாமல் 'Come my son' என்று ஒரு வரியையே ஆங்கிலத்திலேயே பயன்படுத்தியுள்ளார்.

வடமொழிப் பயன்பாடு சற்று மிகுதியாகவே இடம் பெற்றுள்ளது.

தியானம், ஜன்மம், தினம், அதிசயம், தீட்சண்யம், பத்திரிகை, பிரதி, ஆனந்தம், ஏகாந்தம், ரிஷி, மகரிஷி, சங்கீதம், ஆத்மம், ஸ்பரிசம், பிரசாதம், ஸ்வசரிதை, ஜெயம், உபாயம், ஏகாதிபத்தியம், நிர்பந்தம், ஜாதி, யுத்தம், பரிணமித்தல், மரணம், அத்யந்தம், சாம்ராஜ்யம், சுயாதீனம், வஸ்தாது, சாபல்யம், சௌக்கியம், ஸ்தலம், மகத்துவம், இம்சை, தரிசனம், யோகம், யாத்ரிகர், ஜனனம், புனிதம், புண்ணியம், சல்லாபம், அலட்சியம், விஷம், விசுவாசம், தாபம், பிரக்ஞை, பாஷை, சபை, ஜீவாத்மா, சம்பிரதாயம், சுகம், சுவாசித்தல், துவம்சம், தேவாமிர்தம், நாஸ்திகம் போன்றவற்றை வடமொழிச் சொற்களின் பயன்பாட்டிற்குச் சான்றாகக் காட்டலாம்.

தமிழில் முதல் எழுத்துக்களாக வராத எழுத்துக்களைக் கொண்டு தொடங்கும் சொற்களைப் பயன்படுத்தும் பொழுது அவற்றிற்குத் தமிழ் வடிவம் தந்து பயன்படுத்தல் இலக்கண நெறியாகும். ஆனால் முதல் எழுத்துக்களாக வரத்தகுதியற்றதைக் கொண்டு தொடங்கும் சொற்கள் தமிழ் வடிவம் பெறாமலேயே இடம் பெற்றுள்ளன. சான்றாகச் சில:

ரகசியம், ரங்கசாமி, ராமசாமி, லட்சுமி, ரதம், ரத்தம், ராகம், ருத்திரன், ரேகை, லட்சியம், ரயில், ராணுவம், லங்கணம், லேகியம், லிகிதம் போன்றனவாகும்.

வழக்குச் சொற்கள்

இலக்கியச் சொற்களாக இல்லாமல் மக்களிடம்

வழங்கப்படும் பேச்சுச் சொற்களே வழக்குச் சொற்களாகும். இவற்றையும் ஆசிரியர் பயன்படுத்தத் தவறவில்லை.

குந்துதல், மனசு, ஒண்ணு, பொண்ணு, சின்ன, மருவாதை, பாத்து, காலாவதி, மத்தது, குடுத்தல், சிணுங்குதல், இம்மா, துண்ணு போன்ற வழக்குச் சொற்கள் கவிதையில் வந்து குந்தியுள்ளன.

தூய தமிழ்ச் சொற்கள்

பிறமொழிச் சொற்கள் கவிதையில் காணப்பட்டாலும் நல்ல தமிழ்ச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளமை ஆசிரியரின் தமிழ்ப் பற்றினை அடையாளம் காட்டுகின்றது.

நகைக்கீற்று, பனித்தல், அலகில்லாமை, முக்குளித்தல், தருக்கு, செறுக்கு, கனலுதல், எந்தை, சுவடு, இதழ், தாண்டவம், வீக்குதல், மொழிதல், செப்புதல், விண்மீன், துலங்குதல், பாசறை, வண்புகழ், நொய்ம்மை, சிமிழ், தண்டுதல், கனல், அழல், மிடிமை, தொன்மம், பொழிதல், வல்லிடி போன்ற தூய தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுக் கவிதையைச் சிறப்பிக்கின்றன.

ஒலி நிலை

நடையியற்கூறுகளில் முதலாவதாக அமைவது ஒலி நிலையாகும்.

1. ஒலிக்குறிப்பு
2. இரட்டைக்கிளவி
3. அடுக்குத்தொடர் ஆகியவை இதிலடங்கும்.

1. ஒலிக்குறிப்புச் சொற்கள்

நடையியல் உத்திகளும் ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன் படுத்துவதும் ஒன்றாகும். இது படிப்பவர்களை நிகழ்வுக்குரிய இடத்திற்கு அழைத்துச் செல்ல உதவுகின்றது. சிற்பி தம்முடைய கவிதையில் பல இடங்களில் ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

ஒரு சில : பட்டுப்பட்டு, ஜிவ், திங்குதிங்கு, ஊஹிங், சரசர, கீச், உச்சு, குக்கூ, கூய்ய், சலசல, சடசட, தடதட, சரக் போன்றன.

2. இரட்டைக் கிளவி

ஒலிக்குறிப்பினைத் தோற்றுவித்துச் சொற்கள் பிரியாது இரட்டைச் சொற்களாகவே நின்று, பிரித்தால் பொருள் தராமல் வினைகளை ஒட்டி அடைமொழியாக வருவது இரட்டைக்

கிளவியாகும். சிற்பியும் தமது கவிதையில் இரட்டைக்கிளவியைப் பயன்படுத்தியுள்ளார். சிலவற்றைச் சான்றாக காட்டலாம்.

குறுகுறு, கரகர, குடுகுடு, கடகட போன்றவை கவிதையில் காணப்படுகின்றன.

3. அடுக்குத் தொடர்

ஒலி நயம் கூட்டுவிக்கும் வகையில் சொற்கள் இரண்டு, மூன்று முறை அடுக்கி வந்து பிரித்தாலும் தனியே நின்று பொருள் தருவது அடுக்குத் தொடராகும். சிற்பி தம் கவிதையில் அடுக்குத் தொடர்களை சற்று மிகுதியாகவே பயன்படுத்தியுள்ளார். சான்றாகச் சிலவற்றைக் காட்டுவோம்.

விசும்பிவிசும்பி, கண்டுகண்டு, விக்கிவிக்கி, மாமாமாமா, போபோ, நினைத்துநினைத்து, கை மாற்றிக் கை மாற்றி, மலங்க மலங்க, வழிய வழிய, கசியக்கசிய போன்றன. இங்ஙனம் ஓசை, ஒழுங்குபட்ட வடிவம், உள்ளத்தைத் தொடும் உவமைகள், உருவகங்கள், வர்ணனைகள், நயத்தொடர்கள், பிறமொழிப் பயன்பாடு, தனித்தமிழ் ஆளுமை, ஒலிக்குறிப்புச் சொற்கள், இரட்டைக் கிளவிகள், அடுக்குத் தொடர்கள் ஆகியவற்றின் பயன் பாட்டினால் சிற்பி தம் செய்திகளை உணர்த்தியுள்ள முறையினை உயிரோட்டமாக்கி நம் உளம் கவருமாறு செய்துள்ளார்.

நெஞ்சில் நிற்கும் நிறைவுரை

இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றால் பாரதியின் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளும் அவரைப் பற்றியிருந்த கொள்கைப் பிடிப்பும் அவரிடம் இடம் பெற்றிருந்த குன்றா மிடுக்கும் அவரது உயிர்க் கொள்கையான சாதி மறுக்கும் சால்பும் அவரிடம் ஆழப் பதிந்திருந்த நன்றி மறவா நற்பண்பும் அவர் போற்றிப் பாதுகாத்த தூய்மை கெடா நேயத் தொடர்பும் தமிழ்பால் அவர் கொண்டிருந்த காதலும் இன முன்னேற்றத்தில் அவர் காட்டிய ஈடுபாடும்அவரை இன்புறுத்திய இடையறா இலக்கியத் தாகமும் விடுதலைக்கு வித்திட்ட அவரது இறவா இதழ்ப் பணியும் அவரது சித்தம் கவர்ந்த தத்துவத் தாக்கமும் பாடல்களை உருவாக்க அவருக்கு உதவி நின்ற உயர் சூழலும் சிறையில் அவர்பட்ட சொல்லொணாத் துயரமும் நனி சிறக்குமாறு அவர் பயன்படுத்திய அணிநயங்களும் சிற்பி புனைந்த புதுமைக் கவிதையின் வெளிப்பாடுகளாய் உள்ளமை உள்ளங்கை நெல்லிக்கனியாய் இலங்குவது அறிந்து இன்பப் பேருவகை நாம் எய்துகின்றோம்.

தமிழ்நாட்டில் மக்கள் தொகையும் பாரதியின் பாட்டு நூலின் பதிப்புக்களும் மட்டுமே பன்மடங்காய்ப் பெருகியுள்ளன. பாரதி கவிதைக்குப் பொழிப்புரை சொல்வது என்பது பொழிஞர்களுக்கு ஒரு பொழுது போக்காய் அமைந்துள்ளது. பாரதியின் எழுத்துக்கு அவனே கருதிப்பார்க்காத பொருளைச் சொல்கின்றவன்தான் இன்று இலக்கிய மேதையாகக் கருதப்படுகின்றான். பாரதியின் கவிதைக்கு இதுவரை வார்த்தைக்கு மட்டுமே உரை வரைந்து கொண்டிருப்பவர் களின் மத்தியில் தம் வாழ்க்கை நிலையாலும் அவன் கவிதைக்கு உரை விளக்கமாகக் காட்சியளிக்கின்ற கருத்தாழமிக்க கவிப்புலவரே இந்நூலாசிரியரான சிந்தனைச் சிற்பியாவார். பாரதியின் கவிதைகளை ஒலிச்சந்தையில் விற்கும் மனப்பாட வணிகராக இல்லாமல் அவன் எழுத்துக்களை வாழ்க்கைப் படுத்தி வரும் கவிஞர் சிற்பியின் பெயரை ஓங்கி ஒலிப்பதற்கு இத்தமிழகத்திற்கு முழுத்தகுதி உள்ளது. பிறந்த உள்ளூரே இதுவரையிலும் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத எட்டயபுரத்துக் கொட்டு முரசான பெருங் கவிஞனை உலகத்திற்கே புரிய வைப்பதில் வெற்றி கண்டுள்ள கவிஞர் சிற்பியின் பெருமையும் பெயரும் ஒவ்வொரு தமிழனின் சிந்தனைத் தடத்திலும் பதிவுபெறும் என்பதில் ஐயமில்லை.

இந்நேரத்தில் பாரதிக்கு அரசியலில், ஆனமீகத் துறையில் துணைநின்ற விவேகானந்தர், நிவேதிதா, திலகர், காந்தியடிகள் போன்றோரை நினைவு கூர்வோமாக. தமிழ்த்துறையில் அவனுக்குத் துணையாய் நின்ற கம்பர், வள்ளுவன், இளங்கோவடிகள், திவ்வியப் பிரபந்தங்கள், தாயுமானவர், கோபாலகிருட்டிண பாரதியார், அண்ணாமலையார், அருணாசலக் கவிராயர், சித்தர்கள், நாடோடி இரவலர்கள், தீ, ஞாயிறு, காற்று, குயில், காக்கை, மாஞ்சோலை, மலை, கடல் போன்றோரையும் நினைவு கூர்வோமாக. அவனுக்கு நேரில் கைகொடுத்த மண்டையம் சீனிவாசாச்சாரியார் முதல் துரைசாமி அய்யர் வரை, வ.உ.சி. முதல் காரைக்குடி செல்வ இளைஞர்கள் வரை, வ.வே.சு அய்யர் முதல் அம்மாக்கண்ணு வரை அனைத்து நல் உள்ளங்களையும் போற்றி நினைவிற் கொள்வோமாக. பாரதியார் வழிப் பரம்பரையில் இன்று வரை தம் எழுத்தாலும் பேச்சாலும் வாழ்வாலும் மறதிக்குப் பெயர் பெற்ற இற்றைத் தமிழருக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் இந்நூலாசிரியர் சிந்தனைச் சிற்பியையும் கவிதை உலகம் என்றும் நினைவு கூர்வதாகுக.

◈